


சென்னையில் : தினசரி 3 காட்சிகள் 3, 6-15 & 9-30 மணி

முதல் இரண்டு வகுப்புகளுக்கு பிரபாத்திலும் வெல்லிங்டனிலும் பிரதி தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரை முன்னதாகவே டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்


கண்ணிறைந்த காட்சிகள்
கருத்துநிறைந்த கீதங்கள்
சுவைநிறைந்த திரைச்சித்திரம்
நவம்பர்
ரிலீஸ்
முருகன் டாக்கீஸாரின்
ரத்னகுமார்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
MTF
S.H.RAO.
விபரங்களுக்கு: முருகன் டாக்கீ பிலிம் கம்பெனி
மதுரை, பெங்களூர் சிடி, பெஜவாடா.



பீக் ப்ரீன்'ஸ் பிஸ்கட்டுகளை உங்கள் வாடிக்கையான
ஸ்டோர்களில் வாங்குங்கள்




SWEET ASSORTED ★ GOLDEN PUFF ★ GLAXO BISCUITS

PEEK FREAN'S
BISCUITS


ஏஜண்டுகள்: பாரி & கம்பெனி லிமிடெட், மதராஸ்

காலமானார்



போடிநாயக்கனூர் ஸ்ரீ ஏ. எஸ். சுப்பஞ் செட்டியாரின் குமாரரும், ஸ்ரீ ஏ. எஸ். சுப்புராஜ் அவர்களின் சகோதரருமான ஸ்ரீ எஸ் சி. சேதுராம் சென்ற 26-9-49ந் தேதி இரவில் திடீரென்று மாரடைப்பின் காரணமாக தமது 39-வது வயதில் அகால மரணமடைந்தார் என்ற செய்தியைத் தெரிவிக்க மிகவும் வருந்துகிறோம். ஸ்ரீ சேதுராம் தமது உயர் கல்வியை இங்கிலாந்தில் முடித்து M A (Cantab) பட்டத்தையும் பெற்றார். சுமார் 6 வருடம்வரை இங்கிலாந்தில் தங்கிவிட்டு 1934ல் இந்தியா திரும்பி பல துறைகளிலும் அரிய முறையில் பொதுநலச் சேவை புரிந்துள்ளார். சிலகாலம் கோயம்புத்தூரில் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸராக தொண்டாற்றினார். சென்ற 5 வருஷ காலமாக போடிநாயக்கனூர் நகரசபைத் தலைவராக அரும்பெரும் சேவை புரிந்துள்ளார். போடிநாயக்கனூர் விக்டோரியா மெமோரியல் ஹைஸ்கூலின் காரியதரிசியாகவும் கரஸ்பான்டெண்டாகவும் பங்கஜம் குடும்பத்தினரால் நடத்தப்படும் பங்கஜம் இலவசப் பள்ளிக்கூடத்தின் மானேஜராகவும் இருந்தார். போடிநாயக்கனூர் வியாபாரிகள் சங்கம், தமிழ்நாடு குலாலர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் மதுரை ஜில்லா ஹரிஜன சேவா சங்கத்தின் உபதலைவராகவும், பெரியகுளம் தாலுகா காந்தி ஞாபகார்த்த தேசிய நிதியின் காரியதரிசியாகவும் உழைத்தார். போடிநாயக்கனூர் மக்களுக்கு வெகுகாலம் தேவையாயிருந்த பிரசவ ஆஸ்பத்திரி கட்டுவதற்காக சுதந்திர தின ஞாபகார்த்த பிரசவ விடுதி நிதியொன்றை துவக்கி அதன் தலைவராகவும் வேலை செய்தார். இந்த பிரசவ விடுதிக் கட்டிடம் பூர்த்தியாகும் தருவாயிலிருக்கிறது. இவ்வாறு பல துறைகளிலும் தளரா முயற்சியுடன் பாடுபட்டு தமது சேவையாலும் சிறந்த குண விசேஷங்களாலும் எல்லோருடைய பாராட்டுதலுக்கும் அன்பிற்கும் பாத்திரமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

அன்னாரின் பிரிவிற்கு ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிக்கும் முறையில் போடிநாயக்கனூர் பொதுமக்கள் 27-9-49ந் தேதியன்று தங்கள் அலுவல்களை நிறுத்தியதுடன், நகரசபை முதலிய ஆபீஸ்களும் மூடப்பட்டன.



மகத்தான
தீபாவளி விருந்து
சியாமளாவின்
இன்பவல்லி
வெற்றிகரமான 6வது வாரம்
லக்ஷக் கணக்கான
மக்களை தினசரி இன்பமூட்டும் படம்
பல முறை பார்த்தும் திகட்டாத படம்
பார்க்கப் பார்க்க மக்கள் பரவச மடைகின்றனர்.
இன்றே காணுங்கள்
கண்டு மகிழுங்கள்..
மஹாலிங்கம் • சரோஜா • சரஸ்வதி
கிருஷ்ணன் • மதுரம் • சாமிநாதன்
விரைவில் சென்னையில் எதிர்பாருங்கள்
ஸூபர் ரிலீஸ்
ஸூபர் பிக்சர்ஸ் • சர்க்யூட், மதராஸ் 7.


நவம்பர் 5 முதல்
தமிழ்நாடெங்கும்
வெளிவருகிறது..
பானுமதி
பரணி
லைலா
மஜ்னு
தமிழ்
டைரக்ஷன் ராமகிருஷ்ண
வசனம் எஸ்.டி.சுந்தரம்
ஜுபிடர் ரிலீஸ்

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 12

அக்டோபர் 23

விரோதி ௵ ஐப்பசி 7

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.


21 முதல்
சென்ட்ரல் ... மதுரை
ராஜா
ஷண்முகா கோயமுத்தூர்
ரேவதி காரைக்குடி
பாலஸ் ... சேலம்
வெலிங்டன் ... திருச்சி
சாரதா
கெம்பகௌடா பெங்களூர்
லக்ஷ்மி
தினகரன் ... வேலூர்
ரத்னா பாண்டிச்சேரி
முத்தையா பாலஸ்-சிதம்பரம்
ராஜாராம் ... ஈரோடு
ஸ்ரீ ராஜாராம் ... கரூர்
பேபி ... திருவாரூர்
லேக்ஸ் காரைக்கால்
கே டாக்கீஸ் ... K. G. F.
தேவமனோஹரி
உயர்ந்த கருத்துக்கள் கண்ணைக்கவரும் நடனங்கள்
செவிக்கினிய கானங்கள் பிரம்மாண்டமான ஜோடனைகள்
நிறைந்த அரியதொரு சித்திரம்...
பி. பானுமதி
பாகவதர்

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 12

என்ன சேதி?

எல்லோருக்கும் லாபம்!

சர்க்கார் நிர்வாகம் நடைபெறுவதற்குப் பணம் அவசியம். அந்தப் பணம் வரிகளின் மூலம் ஜனங்களிடமிருந்து தான் வரவேண்டும். எனினும், வரி செலுத்தும் ஜனங்களின் சக்திக்கு எல்லையுண்டு. அந்த எல்லைக்குமேல் ஜனங்களால் வரிப்பளுவைத் தாங்குவது முடியாத காரியம். வரிகளின் மூலம் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே அணைக்கட்டு, தொழிற்சாலைகள் போன்ற மகத்தான பல திட்டங்களுக்கு ஏற்படும் பெரும் செலவைச் சமாளிக்க முடியுமா? அத்தகைய சந்தர்ப்பங்களில் ஜனங்களின்மீது வரிகளைச் சுமத்தாமல் அவர்களிடமிருந்து கடன் வாங்குவது என்பது உலகத்திலுள்ள சகல தேச சர்க்கார்களும் அனுஷ்டிக்கும் முறையாகும்.

அதனால்தான் ஜனங்கள் சேமித்து அந்தத் தொகையைத் தேசீய சேமிப்புப் பத்திரங்களில் (நாஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்) போட்டுவைக்க வேண்டும் என்று இந்திய சர்க்கார் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். சமீபத்தில் இவ்விஷயத்தை கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் வற்புறுத்தியது ஞாபகமிருக்கலாம். இப்போது நடைபெறுவது ஜனங்களுடைய அரசாங்கம் என்றும், எனவே அதற்கு உதவி புரிய வேண்டியது ஜனங்களுடைய கடமை என்றும் ராஜாஜி கேட்டுக் கொண்டார். ஜனங்கள் தங்களால் இயன்ற தொகையைச் சேமித்து மேற்படி பத்திரங்களைப் பெறுவதன் மூலம் அவர்கள் போட்ட தொகை பன்னிரண்டு வருஷங்களில் ஒன்றுக்கு ஒன்றரையாகப் பெருகுவதுடன், சர்க்காரின் ஆக்கத் திட்டங்களும் நிறைவேறி தேசமும் சுபிட்சம் அடைய ஹேதுவாகிறது. தங்களுக்கும் சர்க்காருக்கும் தேசத்துக்கும் லாபகரமான ஒரு விஷயத்தில் எல்லா ஜனங்களும் தங்கள் சக்திக்கு இயன்றதைச் செய்ய வேண்டாமா?

இந்திய சர்க்கார் மறுப்பு

சென்னை சர்க்கார் தங்களுடைய மூலதனச் செலவுக்காக ஆறு கோடி ரூபாய் கடன் கோரி இந்திய சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், இந்திய சர்க்கார் தாங்கள் கடன் கொடுப்பதற்கில்லை என்று கூறி விட்டார்கள். யுத்த காலத்தில் ஏற்பட்டு வந்த அபரிமிதமான நிர்வாகச் செலவுகள் இன்னும் குறைந்தபாடில்லை. இந்திய சர்க்கார் தங்களுடைய செலவுகளைக் குறைப்பதற்காகத் தீவிரமான திட்டம் போட்டு வரும் இந்தச் சமயத்தில், அவர்களால் சென்னை சர்க்காரின் கோரிக்கையை எவ்வாறு நிறைவேற்றி வைக்க முடியும்?

எனினும், இந்திய சர்க்கார் கடன் கொடுக்கவில்லை என்பதற்காகச் சென்னை சர்க்கார் தங்களுடைய ஆக்கத் திட்டங்களைக் கைவிட்டு விடலாமா? அந்தத் தொகை இந்த மாகாணத்திலிருந்தே கிடைப்பதற்கான வழிவகைகளை சர்க்கார் தேடவேண்டியிருக்கும் என்று நிதி மந்திரி கனம் கோபால ரெட்டி கூறியிருக்கிறார். அதாவது குறிப்பிட்ட திட்டத்தினால் எந்தப் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் பலனடையப் போகிறார்களோ, அவர்கள் மேற்படி திட்டத்துக்குரிய செலவைக் கடனாகச் சர்க்காருக்குக் கொடுத்து உதவ வேண்டும். அந்தத் திட்டத்தின் மூலம் பலனடையும் ஜனங்கள், சர்க்காருக்குக் கடன் கொடுத்து சில வருஷங்களில் வட்டியும் முதலுமாகப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு இரண்டு விதத்திலும் பயனடைவதற்குப் பொது ஜனங்கள் முன் வரவேண்டும்.


மாபெரும் புரட்சி

பாரத நாடு சுதந்திரம் பெற்ற உடனே எத்தனையோ பிரச்னைகளைச் சமாளிக்க நேர்ந்தது. அந்தப் பிரச்னைகளில் இரண்டு மற்றெல்லாவற்றையும் விட மிகவும் பயங்கரமானவை. முதலாவதாக, பாகிஸ்தானிலிருந்து உற்றார் உறவினரையும் சொத்துக்களையும் விட்டு விட்டு இடம் பெயர்ந்து வந்த அகதிகளின் அலங்கோல வாழ்க்கையை மறுபடியும் சீர்பெறச் செய்யும் மகத்தான பொறுப்பை சுதந்திர இந்திய சர்க்கார் வகிக்க நேர்ந்தது. இரண்டாவதாக, தான் கொண்டதே கோலம் என்று அஷ்ட திக்குகளிலும் சிதறிக் கிடந்த சுமார் அறுநூறு சமஸ்தானங்களையும் ஒன்று சேர்க்க வேண்டிய பொறுப்பையும் சுதந்திர சர்க்கார் ஏற்றுக் கொண்டார்கள்.

மூலைக்கு மூலை வக்கரித்துக் கொள்ளும் நவக்கிரகங்களை ஒன்று சேர்த்தாலும் சேர்த்து விடலாம்; ஆனால் சிதறிக்கிடக்கும் இந்திய சமஸ்தானங்களை ஒன்று சேர்த்து இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் கொண்டு வருவது எக்காலத்திலும் முடியாத காரியமோ என்று தோன்றியது. சிட்டுக் குருவி சமுத்திர ராஜனை மிரட்டிய கதை போல, குட்டி சமஸ்தானங்கள் தாய்நாட்டைப் பயமுறுத்தின. சுதந்திர சர்க்காரை உருக்குலைக்க அந்த ஒரு பிரச்னையே போதும் என்று கருதியவர்களும் உண்டு. ஆனால், கத்தியின்றி இரத்தமின்றி பேனா முனையினால் இரண்டே வருஷங்களுக்குள் நூற்றுக் கணக்கான சமஸ்தானங்களையும் சுதந்திர சர்க்காரின் நிர்வாகத்தில் கொண்டு வந்த மாபெரும் தலைவர் சர்தார் படேலின் சிறப்பை, தைரியத்தை, ராஜதந்திரத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். இந்திய சரித்திரத்திலே குறுகிய காலத்தில் இத்தகைய மகத்தான புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிய சர்தாரின் சாகஸத்தை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

கடைசியாகக் காசி, மணிபுரி, திரிபுரா சமஸ்தானங்களும் சென்ற வாரம் சர்க்காரின் நிர்வாகத்தில் வந்து விட்டன. இந்தியாவின் வட கிழக்கு எல்லையோரத்தில் இருக்கும் மணிபுரி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், ஆகையால் அது இந்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருக்க வேண்டியது அத்தியாவசியம் என்பதையும் சொல்ல வேண்டியதில்லை. எனவே, சுமார் ஒன்பதாயிரம் சதுர மைல்கள் விஸ்தீர்ணமும் ஆறு லட்சம் பேர் ஜனத் தொகையும் கொண்ட மணிபுரி இந்தியாவுடன் சேர்ந்ததோடு, சிதறிக் கிடந்த சமஸ்தானங்களை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் படலம் வெற்றிகரமாக முடிந்து விட்டது எனலாம்.

பெண்கள் பிள்ளை பார்க்க வரும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது




தீப ஆலாத்தி!
அமோக வரவேற்பு
அமெரிக்கா
இந்தியா
பண்டித நேருவின் விஜயம் பல நாடுகளையும் திகைக்க வைத்திருக்கிறது.
ஸ்டாலின்
டச்சு ஏகாதிபத்தியம்
சர்ச்சில்

- சாஸ்திரி


விற்பனை வரி விதிப்பதில் மாகாண சர்க்கார்களுக்குள்ள அதிகாரத்தைக் கட்டுப்படுத்த அரசியல் நிர்ணய சபை தீர்மானித்திருக்கிறது.
கோபாலரெட்டி
இப்பி பக்கிரியின் சரீர நிலைமை கவலைக்கிடமாகியிருக்கிறது.
— பத்திரிகைச் செய்தி
போரில் அவரிடம் வெற்றி பெற முடியாத பாகிஸ்தான் மந்திரிகள் இனி பிரார்த்தனையில் ஈடுபடலாம்!



அமெரிக்க நாட்டு நீக்ரோ அடிமைகளின் சுதந்தரத்துக்காகப் போர் நடத்தி வெற்றி பெற்ற ஆப்ரகாம் லிங்கனின் அழகிய சிலை. சிக்காகோ நகரத்தில் உள்ள 'லிங்கன் பார்க்'கில் கம்பீரமாக நிற்கிறது.



நேருஜியின் விஜயத்தினால் புகழ் படைத்த நியூயார்க் நகரின் 'லைப்ரரி' கட்டிடத்தையும், உலகப் பிரசித்தி பெற்ற தெருக்களில் ஒன்றான 'ஐந்தாவது ராஜபாட்டை' என்ற தெருவின் அழகிய தோற்றத்தையும் இந்தப் படத்தில் காணலாம். இந்த லைப்ரரியில் அறுபது லட்சம் புத்தகங்கள் இருக்கின்றனவாம்.

அமெரிக்காவில் ஆசிய ஜோதி!

சரித்திரத்திலே புகழிடம் பெறும் பாக்கியசாலிகள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு தலைமுறையிலும் பிறக்கத்தான் செய்கிருர்கள்.

எனினும், சரித்திரத்துக்கே புகழைக் கொடுக்கும் புண்ணியமூர்த்திகள் எங்கேயாவது ஓரிடத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் அவதரிக்கிருர்கள்.

மகத்தான தேசங்களில் ஜனிக்கும் பாக்கியமும் மகத்தான ஸ்தாபனங்களிலும் கௌரவிக்கப்படும் பாக்கியமும் பலருக்குக் கிடைக்கிறது.

எனினும், அவதார புருஷர்களின் ஜனனத்தால் மாத்திரமே அந்தத் தேசம் கௌரவத்தை அடையும்; அவர்களுக்கு மரியாதை செய்வதன் மூலமே சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்தாபனங்கள் மேலும் மேலும் சிறப்புற்று விளங்கும்.

சுமார் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் ஓர் இந்திய இளைஞர் அமெரிக்காவுக்குச் சென்ருர்.

அமெரிக்காவில் அவரை எவருமே அறியார். அங்கு நடந்த சர்வ மத மகாசபைக்குச் சென்ற அவரை வரவேற்பார் யாரும் இல்லை.

தெய்வச் செயலாக அந்த இளைஞர் அமெரிக்கப் பேராசிரியர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது.

அவருடன் சில நிமிஷங்களே பேசிய அமெரிக்கப் பேராசிரியரின் ஆச்சரியம் எல்லை கடந்து விட்டது. ஏனெனில்; அதற்கு முன் அவர் தமது வாழ்க்கையில் அத்தகைய மகா மேதாவி ஒருவரைச் சந்தித்ததில்லை!

"தங்களைச் சந்திக்க நேர்ந்தது என்னுடைய பாக்கியமே. சர்வ மத மகாசபையிலே இந்தியாவின் சார்பில் பேசச் சந்தர்ப்பம் கிடைப்பதற்குத் தாங்கள் உதவி புரிய வேண்டும்" என்ருர் இளைஞர்.

அவரது கோரிக்கைக்கு இணங்க, மேற்படி மகாசபையின் தலைவருக்கு அமெரிக்கப் பேராசிரியர் ஒரு சிபாரிசுக் கடிதம் எழுதிக் கொடுத்தார்.

"இந்த அவதார புருஷருடன் பேசும் மகத்தான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அமெரிக்காவிலுள்ள பேராசிரியர்கள் எல்லோரும் சேர்ந்தாலும் இந்த மகானுக்கு ஈடு இணையாக மாட்டோம். ஆகையால், இவரை இளைஞர் என்று அலட்சியம் செய்தால், இவரது அரிய உபதேசங்களைக் கேட்கும் பாக்கியத்தை நீங்களும் உங்கள் மகாசபையும் இழந்ததாகும்" என்று அமெரிக்கப் பேராசிரியர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, அதன் பயனாக அந்த இளைஞரான சுவாமி விவேகானந்தரின் ஞான மொழிகளைக் கேட்கும் பாக்கியம் சர்வ மத மகாசபைக்குக் கிடைத்தது!

ஹிந்து மதத்தின் உயர்வை உணர்ந்து கொள்ளும் பாக்கியம் அமெரிக்காவுக்குக் கிடைத்தது!

* * *

அதுபோலவே, பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கு அமெரிக்கா அமோக வரவேற்பு அளித்ததன் மூலம் தன்னைத்தானே கௌரவித்துக் கொண்டிருக்கிறது. அவரது பொன் மொழிகளைக் கேட்கும் பாக்கியத்தைப் பெற்றதன் மூலம் அமெரிக்க காங்கிரஸ், செனெட் சபைகளின் சீரும் சிறப்பும் மேலும் உயர்ந்திருக்கின்றன.

இதில் மிகைப்படக் கூறும் விஷயம் எதுவும் இல்லை.

ஏனெனில், பண்டித ஜவாஹர்லால் நேருவின் விஜயம் அமெரிக்க சரித்திரத்திலே ஒரு புதுமை என்றும், ட்ருமனும் ஜவாஹர்லால்ஜியும் சந்தித்தது, மேல்திசை நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் அமெரிக்காவும் ஆசியா நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் இந்தியாவும் சந்தித்தது போல இருந்தது என்றும் அமெரிக்கப் பிரமுகர்களே குறிப்பிட்டிருக்கிருர்கள்.

பண்டித ஜவாஹர்லால் நேரு, அமெரிக்கா தேசத்தின் தந்தையர்களான ஆப்ரகாம் லிங்கன், தாமஸ் ஜெபர்சன் முதலியோருக்குச் சமமானவர் என்று அமெரிக்கா உள்நாட்டு மந்திரி மெய் மறந்து போற்றுகிருர்.

உலக அரசியல் மேதாவிகளிலே பண்டித ஜவாஹர்லால் நேருதான் சிறந்தவர் என்று அமெரிக்க அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஹிந்து மத தர்மமே உருவெடுத்து வந்திருப்பதாக அன்று அமெரிக்கர்கள் சுவாமி விவேகானந்தரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

இன்று ஜனநாயக தத்துவமே உருவெடுத்து வந்திருப்பதாக அவர்கள் பண்டித ஜவாஹர்லால் நேருவைப் போற்றுகிறார்கள். அவரது நடை உடை பாவனை எல்லாம் அவர் சிறந்த ஜனநாயகவாதி என்பதைக் காட்டுகின்றன என்று அமெரிக்கப் பிரதிநிதிகள் பரவசம் அடைகிறார்கள்.

* * *

நமது அரும் பெரும் தலைவருக்கு அமெரிக்கா ஒரு சக்கரவர்த்திக் குரிய வரவேற்பு அளித்தது என்று அமெரிக்கச் செய்திகள் கூறுகின்றன.

அதில் வியப்பு எதுவும் இல்லை.

ஏனெனில், பண்டித ஜவாஹர்லால் நேரு ஒரு சக்கரவர்த்தியைக் காட்டிலும் மேலான ஸ்தானத்தில் இருக்கிறார்.

சக்கரவர்த்தி என்ற பட்டமும், அந்தப் பட்டத்துக்கு உரிய சிம்மாசனமும், முடியும் ஜனநாயக தத்துவம் ததும்பும் நவீன உலகிலே நிலையற்றவை என்பதை அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். பட்டத்தையும் சிம்மாசனத்தையும் முடியையும் இழந்து அஞ்ஞாத வாசம் செய்த சக்கரவர்த்திகளைக் கண்டிருக்கிறோம்.

ஆனால், முப்பத்தைந்து கோடி மக்களின் ஹிருதய பீடத்தைச் சிம்மாசனமாகவும், அவர்களுடைய ஏகோபித்த அன்பை மணி மகுடமாகவும் கொண்டுள்ள பண்டித ஜவாஹர்லால் நேருவின் ஸ்தானம் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்தது என்பதை எவர்தான் மறுக்க முடியும்?

எனவே, அத்தகைய இணையற்ற பெருமை வாய்ந்த பாரத நாட்டின் தவப் புதல்வரை அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் முதல் உயர்தர அதிகாரிகளும், ராஜ தந்திரிகளும், இலக்கிய மேதாவிகளும், பாமர ஜனங்களும் தரிசிக்க ஆர்வம் காட்டியது இயல்பே அல்லவா?

• • •

இந்தியாவின் கொள்கை என்ன என்பது பற்றி இது வரையில் யாருக்காவது எவ்வித சந்தேகம் இருந்திருந்தாலும், சரித்திரப் பிரசித்தி பெற்ற அமெரிக்க மேடைகளில் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு அவ்விஷயமாக இந்தியாவின் நிலையை உலகம் அறியத் தெளிவு படுத்தி யிருப்பதால் இனி யாருக்கும் சந்தேகம் ஏற்பட இடமில்லை.

“உலகிலே தர்மம் குறைந்து அதர்மம் ஓங்கும்போது நான் அவதரித்து தர்மத்தை நிலை நிறுத்துவேன்” என்ற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கீதா வாக்கியத்தை எல்லோரும் அறிவர்.

அமெரிக்கா ஜனப் பிரதிநிதிச் சபையில் பண்டித ஜவாஹர்லால் நேரு பேசிய வார்த்தைகள் மேற்படி வாக்கியத்தையே பிரதிபலித்தன.

“நாங்கள் சமாதானத்தையே நாடுகிறோம். உலக சமாதானமே எங்களுடைய இலட்சியம்.

“எந்த வல்லரசின் வாய்ச் சண்டையிலும் கட்சிப் போட்டியிலும் கலந்து கொள்ளாமல் நடு நிலைமையே வகிப்போம்.

“எனினும், சுதந்திரத்துக்கோ நீதிக்கோ எந்த இடத்தில் ஆபத்து வந்தாலும், எங்கு ஆக்கிரமிப்பு நேர்ந்தாலும் அத்தகைய சந்தர்ப்பங்களில் நாங்கள் நடு நிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப்ப தென்பது முடியாத காரியம்” என்று பண்டித ஜவாஹர்லால் நேரு முழங்கினார்.

உலகத்தில் நீதி, சுதந்திரம், சமாதானம் இவற்றை நிலை நிறுத்த இந்தியா அமெரிக்காவுடன் ஒத்துழைக்கத் தயார் என்று நமது அருமைத் தலைவர் உலகம் அறிய அந்த மகாசபையில் அறிவித்தார்.

அமெரிக்கக் குடியரசின் ஆதிகர்த்தாக்களும், உலக நாடுகளின் சுதந்திரத்துக்கு உத்வேகம் அளிப்பவர்களுமான ஆப்ரகாம் லிங்கன், வாஷிங்டன் முதலிய தலைவர்களுக்கு ஜவாஹர்லால்ஜி மரியாதை செலுத்தினார்.

“சத்தியம், சாத்வீகம், ஒழுக்கம் இவற்றை அடிப்படையாகக்கொண்டு சுதந்திரப்போரை நடத்தி வெற்றிபெற முடியும் என்பதை எங்கள் தேசத்தின் தந்தையான காந்தி மகான் உலகத்துக்கு நிரூபித்தார். எனவே, உலகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் அந்த உத்தமர் காட்டிய வழி உதவியாக இருக்கும்” என்று மகாத்மா காந்தியின் பெருமையைக் குறிப்பிட்டு உலகப் பிரச்னைகள் தீருவதற்குப் பரிகார முறைகளையும் எடுத்துக் கூறினார்.

இந்தியா வறுமையில் ஆழ்ந்து கிடக்கிறது. எனவே, இந்திய ஜனங்



நியூயார்க் நகரத்திலே ஒரு முக்கிய பகுதி. இங்கேதான் நகர முனிசிபல் கட்டிடங்களும் கோர்ட் கட்டிடங்களும் 'சிட்டி ஹால்' என்ற அழகிய கட்டிடமும் இருக்கின்றன.

களின் வாழ்க்கை அந்தஸ்து உயருவதற்குற்ற வகையில் அமெரிக்கர்களின் மூலதனத்தையும், அமெரிக்க யந்திர வகைகளையும், நிபுணர்களின் உதவியையும் இந்தியா நாடுகிறது என்று கோரிய ஜவாஹர்லால்ஜி, அத்தகைய உதவியின் விளைவாக இந்தியாவின் பெருமைக்கும் சுதந்திரத்துக்கும் அணுவளவு குந்தகம் நேர்ந்தாலும் மேற்படி உதவியை ஏற்கமாட்டோம் என்பதையும் சந்தேகத்துக்கு இடமின்றிக் குறிப்பிட்டார்.

* * *

அமெரிக்கா பல வருஷங்கள் வரையில் போராடி சுதந்திரத்தைப் பெற்றது போல், இந்தியாவும் பல ஆண்டுகள் போராடி சுதந்திரத்தைப் பெற்றது.

ஜனங்களுக்காக ஜனங்களால் நடத்தப்படும் ஜனங்களுடைய அரசாங்கம் என்ற ஆப்ரகாம் லிங்கனின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்க சர்க்கார் அமைந்துள்ளது. சுதந்திர இந்திய சர்க்காரும் அதே தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள்.

உலகத்திலே அமெரிக்கா யந்திர பலத்தில் இணையற்று விளங்குவது போல் இந்தியா ஆத்ம பலத்தில் ஈடு இணையில்லாமல் விளங்குகிறது.

உலக சமாதானத்தில் அமெரிக்காவைப் போல் இந்தியாவும் நாட்டமும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறது.

ஐரோப்பா அமெரிக்காவின் நலமையை நாடுவதுபோல் ஆசியா இந்தியாவின் நலமையை நாடுகிறது.

இத்தனை அம்சங்களிலும் நெருங்கிய ஒற்றுமையுள்ள இந்தியாவும் அமெரிக்காவும் உறவு கொண்டு ஒத்துழைப்பதன் மூலம் உலகப் பிரச்னைகளில் எதைத்தான் தீர்க்க முடியாது?

ஆசியாவின் ஜோதியாகத் திகழும் பண்டித ஜவாஹர்லால் நேரு அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருப்பதன் பலனாக, இரு நாடுகளுக்குள்ளும் அத்தகைய உறவும் ஒத்துழைப்பும் ஏற்பட்டு உலகத்தின் இன்னல்கள் தீர வேண்டும் என்று பிரார்த்திப்போமாக!



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

20. தலைமைக் கிரீடம்

"அந்த நாட்களில் வாழ்ந்திருப்பதற்கே பாக்கியம் செய்திருக்கவேணும்!" என்று சொல்லும்படியாக ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்திலும் ஒரு காலம் வருவதுண்டு. பாரத நாட்டின் சரித்திரத்தில் 1921-ம் வருஷம் அத்தகைய வருஷம். அந்த வருஷத்தில் காந்தி மகானின் தலைமையில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் தியாகமாகிய வேள்வித் தீயில் குதித்தார்கள். சுயநலம் என்பதை அடியோடு மறந்து, "தாய் நாட்டிற்கே உழைக்க—ஜன்மம் எடுத்தோம்" என்று பாடிக்கொண்டு சுதந்திரப் போரில் ஈடுபட்டார்கள். இதற்கெல்லாம் காரணமாயிருந்தது நாகபுரி காங்கிரஸ். மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கம் சம்பந்தமாகத் தலைவர்களுக்குள் ஏற்பட்டிருந்த வேற்றுமைகள் நாகபுரி காங்கிரஸில் மறைந்து விட்டன. வோட்டு எடுக்காமல் ஏக மனதாகத் தீர்மானங்கள் நிறைவேறின. இந்த அதிசயம் எப்படி நடந்தது என்று பார்க்கலாம்.


* * *

சட்ட சபை பகிஷ்காரம் வெற்றியடைந்தது என்பதாக மகாத்மா காந்தியும் அவருடைய சீடர்களும் கருதினார்கள். ஆனால் கல்கத்தா விசேஷ காங்கிரஸில் ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்த்த தலைவர்கள் அவ்விதம் கருதவில்லை. "சட்டசபை ஸ்தானம் ஒன்றுகூடக் காலியாக இல்லையே? தேசியவாதிகள் கைப்பற்றியிருக்கக்கூடிய ஸ்தானங்களில் அதிகார வர்க்க தாஸர்கள் வீற்றிருக்கிறார்களே? வோட்டு எத்தனை பேர் கொடுத்தால் என்ன? காரியம் நடந்துகொண்டுதானே இருக்கிறது? அதிகார வர்க்கத்துக்கு இன்னும் சௌகரியமாய்த்தானே போயிற்று?" என்று அவர்கள் வாதமிட்டார்கள். வக்கீல்கள் வேலையை விடுவது, மாணாக்கர்கள் கலாசாலைகளை விடுவது,—ஆகிய திட்டங்களையும் காரியாம்சத்தில் நிறைவேற்ற முடியாது என்று நினைத்தார்கள். ஆகையால் 1920-ம் வருஷம் டிசம்பர் மாதக் கடைசியில் நாகபுரி காங்கிரஸில் மகாத்மாவின் திட்டத்தை மாற்றி விடுவதற்காகப் பலம் திரட்டத் தொடங்கினார்கள்.

காந்திஜியின் சீடர்களும் சும்மா இருக்கவில்லை. அவர்களும் நாகபுரி காங்கிரஸில் பலப் பரீட்சைக்கு ஆயத்தமானார்கள்.

ஆகவே நாகபுரி காங்கிரஸ் மிகவும் முக்கியத்தை அடைந்தது. அதற்கு முன்னும் பின்னும் நடந்த வேறு எந்தக் காங்கிரஸுக்கும் அவ்வளவு பிரதிநிதிகள் வந்ததில்லை. மொத்தம் 14,582 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஸ்ரீசித்தரஞ்சன் தாஸ் தம்முடைய சொந்தப் பணத்தில் முப்பத்தாறாயிரம் ரூபாய் செலவுசெய்து இருநூற்றைம்பது பிரதிநிதிகளை அழைத்து வந்தார். (இதில் மூடுமந்திரம் ஒன்றும் இல்லை. ஸ்ரீ சித்தரஞ்சன் தாஸ் பகிரங்கமாகக் கூறிய விஷயந்தான்.) இப்படியே பிரபல தலைவர்கள் தங்கள் கட்சிக்கு ஆதரவாகப் பிரதிநிதிகளைத் திரட்டிக்கொண்டு வந்தார்கள்.

பழம் பெரும் தேசபக்தரான சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் நாகபுரி காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். அவர் தமது தலைமை உரையில் ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்த்தே பேசினார். "அப்படி ஒத்துழையாமை இயக்கம் தொடங்குவது என்று ஏற்பட்டால், பஞ்சாப்—கிலாபத் அநீதிகளுக்காக மட்டும் அதைத் தொடங்குவானேன்! சுயராஜ்ய சித்திக்காகவே அந்த இயக்கத்தை நடத்தலாமே?" என்றார்.



அமெரிக்காவின் சுதந்திரத் தந்தையான ஜார்ஜ் வாஷிங்டன் ஞாபகார்த்த ஸ்தூபியின் தூரக் காட்சி. பொட்டோமாக் நதிக்கரையின் அருகில் ஒரு பெரிய நந்தவனத்தின் நடுவில் கம்பீரமாக நின்று, இந்த ஸ்தூபி வாஷிங்டனின் பெருமையை உலகத்துக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

தம்மை எதிர்ப்பவர்களுடைய பேச்சை மகாத்மா எப்போதும் கவனமாகக் காது கொடுத்துக் கேட்பது வழக்கம். ஏதேனும் ஒன்று நியாயமாகத் தோன்றினால் அதை ஒப்புக் கொள்ளத் தவறுவதுமில்லை.

பஞ்சாப்—கிலாபத் அக்கிரமங்களுக்குப் பரிகாரம் தேடவே ஒத்துழையாமை ஆரம்பிப்பதாகக் காந்திஜி சொன்னதின் காரணம் என்ன தெரியுமா? அந்த இரண்டு அநீதிகளுக்கும் பரிகாரம் பெறுவதில் வெற்றி பெற்றோமானால், அந்தப் போரில் நமக்கு ஏற்படும் பலமே சுயராஜ்யம் அளித்துவிடும் என்பதுதான். ஆனால், ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியாரின் யோசனையை ஏற்றுக் கொள்வதில் ஆட்சேபம் ஒன்றும் இருக்கவில்லை. எனவே, சுயராஜ்ய சித்தியையும் ஒத்துழையாமையின் மூன்றாவது நோக்கமாய்க் கொள்வதாக மகாத்மா ஒப்புக்கொண்டார்.

ஸ்ரீ சித்தரஞ்சனதாஸ் முதலிய தலைவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தையே எதிர்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்தார்கள் அல்லவா? ஆனால் நாகபுரி காங்கிரஸ் விடுதிக்கு வந்து சேர்ந்ததும் அவர்களுக்குத் தயக்கம் உண்டாகி விட்டது. காந்திஜியை எதிர்ப்பது வீண் வேலை என்று அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குள்ளே காந்திஜியின் திட்டத்துக்கு அமோகமான ஆதரவு இருப்பதைக் கண்டார்கள். அதுமட்டுமல்ல; அமிருதஸரஸ் காங்கிரஸுக்கு வந்திருந்த பிரதிநிதிகளைப் போலவே நாகபுரிக்கு வந்திருந்த பிரதிநிதிகளும் தலைவர்கள் வேற்றுமைப்பட்டு விவாதம் செய்வதை விரும்பவில்லையென்று தெரிந்தது.

ஸ்ரீ சித்தரஞ்சனதாஸ் முதலியவர்கள் இன்னொரு விஷயத்தையும் கண்டார்கள். காந்திஜியின் வேலைத் திட்டங்களைச் சாதாரண அறிவாராய்ச்சிகளுக்கு உட்படுத்துவதில் பிரயோஜனமில்லை. அந்த மகான் மற்றவர்களைப்போல் லாப நஷ்டங்களையும் பலா பலன்களையும் யோசித்துக்கொண்டு ஒரு திட்டத்தைச் சொல்லுவதில்லை. அவருடைய அந்தராத்மா எந்த வழியைச் சொல்கிறதோ, அதை அவர் சொல்லுகிறார். தமது உள்ளுணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு வாதமிடுகிறார். அவர் சொல்லும் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமது ஆத்ம சக்தியையே நம்பி யிருக்கிறார்.

இத்தகைய மகா புருஷருக்கு முன்னால் வெறும் வாதங்கள் என்ன செய்ய முடியும்? தேச மக்களும் அவருடைய வார்த்தையையே வேத வாக்காகக் கொள்கிறார்களே தவிர, மற்றவர்களுடைய தீர்க்க யோசனை வாய்ந்த, அறிவுக்கு உகந்த, வாதங்களைச் செவி கொடுத்துக் கேட்பது கூட இல்லை!

இந்த நிலைமையை நாகபுரிக்கு வந்து சேர்ந்த தலைவர்கள் நன்கு உணர்ந்தார்கள். மகாத்மாவின் ஆத்ம சக்தி அவர்களையும் ஆட்கொண்டது. கல்கத்தா காங்கிரஸின் போதே காந்திஜியைச் சேர்ந்துவிட்ட பண்டித மோதிலால் நேரு இந்தக் காங்கிரஸில் சமரசம் செய்து வைப்பதில் முன்னணியில் நின்றார். மற்றத் தலைவர்களும் சமரசத்துக்குத் தயாராகவே இருந்தார்கள்.

விஷயாலோசனைக் கமிட்டியில் ஓரளவு விவாதம் நடந்தது. மகாத்மாவின் திட்டத்தை ஸ்ரீ சி. ஆர். தாஸ் முதலியவர்கள் எதிர்த்துப் பேசினார்கள். அந்த நாளில் இந்தியாவின் நண்பர்கள் சிலர் இங்கிலாந்தில் இருந்தார்கள். இவர்களில் கர்னல் வெட்ஜ்வுட், மிஸ்டர் பென்ஸ்பூர், மிஸ்டர் ஹால்பர்ட் நைட் ஆகியவர்கள் நாகபுரி காங்கிரஸுக்கு வந்திருந்தார்கள். அவர்களும் "ஒத்துழையாமைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தார்கள். மகாத்மா காந்தி எழுந்து ஆட்சேபங்களுக்கெல்லாம் பதில் சொல்லிய போது எதிர்த்தவர்கள் எல்லாரும் மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் ஆகிவிட்டார்கள். பிறகு யாரும் எதிர்த்துப் பேசவே துணியவில்லை. எதிர்க்க வந்தவர்களும் எதிர்த்துப் பேசியவர்களும் தங்கள் எதிர்ப்பை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள். மகாத்மாவின் திட்டத்தையும் பூரணமாக ஒப்புக் கொண்டார்கள்.

ஆகவே காங்கிரஸ் மகா சபை கூடிய போது, ஒத்துழையாமைத் 'தீர்மானத்தை ஸ்ரீ சி. ஆர். தாஸ் பிரேரேபித்தார்! ஸ்ரீ லாலா லஜபதி ராய் ஆமோதித்தார்!! எதிர்ப்பு என்பதே இல்லை. தீர்மானம் நிறைவேறுவதற்குக் கேட்பானேன்? ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளின் அமோகமான ஆதரவுடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அப்போது அந்தப் பிரம்மாண்டமான காங்கிரஸ் பந்தலில் ஏற்பட்ட குதூகலத்தையும் அமளியையும் சொல்லி முடியாது. தீர்மானம் நிறைவேறியதில் பிரதிநிதிகளுக்குச் சந்தோஷம். அதிலும் தலைவர்களுக்குள்ளே வேற்றுமை இல்லாமல், வோட்டு எடுக்காமல், ஏகமனதாக நிறைவேறியதில் அளவில்லா ஆனந்தம். மகாத்மாவின் தலைமையில் இந்தியா சுயராஜ்யம் அடைவது நிச்சயம் என்ற உறுதி எல்லாருடைய மனதிலும் ஏற்பட்டுவிட்டபடியால் அடங்காத உற்சாகம்.

இவ்வாறு நாகபுரி காங்கிரஸில் தலைமைக் கிரீடம் காந்தி மகாத்மாவுக்குச் சூட்டப்பட்டது. அன்று முதல் 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30ம் தேதி வரையில் காந்தி மகாத்மாதான் காங்கிரஸின் உண்மையான தலைவராயிருந்தார். அந்தந்த வருஷத்துக் காங்கிரஸ் அக்கிராசனர் யாராயிருந்த போதிலும், மகாத்மாவே காங்கிரஸின் உண்மையான நிரந்தரத் தலைவரா யிருந்தார். காங்கிரஸி



வானளாவ உயர்ந்து நிற்கும் இந்த வாஷிங்டன் ஞாபகார்த்த ஸ்தூபியின் உயரம் 555 அடி. இதைக் கட்டி முடிப்பதற்கும் பதினைந்து லட்சம் டாலர் — அதாவது சுமார் அறுபத்தெட்டு லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டதாம். செலவுத் தொகையில் ஒரு பகுதியை அமெரிக்கப் பொதுமக்களும் மற்றப் பகுதியை அமெரிக்க சர்க்காரும் ஏற்றனர்.

விருந்து மகாத்மா காந்தி வெளிப்படையாக விலகி நின்ற காலத்திலும், அவரைத் தலைவராக எண்ணிக்கொண்டுதான் மற்றவர்கள் காரியங்களை நடத்தினார்கள்.

* * *

காந்திஜி காங்கிரஸின் பூரண தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டார் என்பது இன்னொரு முக்கியமான காரியத்தின் மூலமாகவும் நாகபுரியில் வெளியாயிற்று.

அது வரையில் காங்கிரசுக்கு ஒழுங்கான சட்டம், விதி, அமைப்புத் திட்டம் ஒன்றும் இல்லாமலிருந்தது. யார் வேண்டுமானாலும் காங்கிரஸ் பிரதிநிதியாக வந்து விடலாம். வருஷத்துக்கொரு தடவை காங்கிரஸ் கூடிக் கலைந்து விடும். அடுத்த காங்கிரஸ் வரையில் பொறுப்புடன் வேலை செய்யக்கூடிய ஸ்தாபனம் கிடையாது. காங்கிரஸ் மகாசபையில் நிறைவேறிய தீர்மானங்களை நடத்தி வைக்க ஏற்பாடு ஒன்றும் கிடையாது.

அமிருதஸரஸ் காங்கிரஸிலேயே மகாத்மா இந்தக் குறைபாட்டைக் கண்டு சில தலைவர்களிடம் பிரஸ்தாபித்தார். காங்கிரஸுக்கு அமைப்பும் விதிகளும் தயாரிப்பதற்கு அமிருதஸரஸிலேயே ஒரு கமிட்டி நியமித்தார்கள். அந்தக் கமிட்டியில் காந்திஜியையும் அங்கத்தினராக்கினார்கள். மற்ற இரண்டு அங்கத்தினர்கள் சும்மா இருந்துவிட, அமைப்பு விதிகள் தயாரிக்கும் வேலை முழுதும் மகாத்மா காந்தியின் தலையிலேயே சார்ந்தது.

காந்திஜி தயாரித்த அமைப்பு, காங்கிரஸ் மகாசபையில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதன்படி காங்கிரசின் லட்சியத்தை ஒப்புக் கொண்டு நாலணா வருஷ சந்தா செலுத்துவோரெல்லாம் காங்கிரஸ் அங்கத்தினராகச் சேரலாம்.

இத்தகைய நாலணா காங்கிரஸ் அங்கத்தினர்கள் மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்த அங்கத்தினரே காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆவார்கள். மொத்தம் 6000 பிரதிநிதிகளுக்கு மேல் போகக்கூடாது என்று வரையறுக்கப் பட்டது. (பின்னால் இதுவும் அதிகம் என்று கண்டு காங்கிரஸ் பிரதிநிதிகளின் தொகை மூவாயிரம் ஆகக் குறைக்கப்பட்டது.)

மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்படுவோர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் ஆவர். இவர்களின் தொகை 350. ஆனால் இத்தனை பேர் ஒவ்வொரு தடவையும் கூடி எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதல்லவா? இதற்காக வருஷம் முழுதும் இடைவிடாமல் காங்கிரஸ் வேலைகளைக் கவனித்து நடத்துவதற்காக, காங்கிரஸ் காரியக்கமிட்டி ஒன்று ஸ்தாபிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

காங்கிரஸ் அமைப்பு விதிகளைக் காட்டிலும் முக்கியமானது காங்கிரஸின் இலட்சியம். 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக் குட்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்து'தான் அது வரையில் காங்கிரஸின் இலட்சியமாயிருந்தது. அதை அடைவதற்கு வழி 'சட்ட வரம்புக்குட் பட்ட' கிளர்ச்சி என்றும் குறிப்பிட்டிருந்தது. காந்திஜி இதை மாற்றி 'அமைதியான, நேர்மை உள்ள, எல்லா முறைகளினாலும் சுயராஜ்யம் அடைதல்' என்று காங்கிரஸ் இலட்சியத்தை அமைத்தார்.

"ஒத்துழையாமை இயக்கம் சட்ட வரம்புக்கு உட்பட்டதல்ல" என்று ஆட்சேபம் சொல்லப்பட்டதல்லவா?

இப்போது காங்கிரஸ் இலட்சியத்திலேயே 'சட்ட வரம்புக்குட் பட்ட' என்ற சொற்றொடர் எடுத்துவிடப்பட்டது.

'சட்ட வரம்பு' என்றால் பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்படுத்திய சட்ட வரம்பு தானே? பிரிட்டிஷ் சட்டத்தையெல்லாம் நியாயமான சட்டமென்று எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? நியாயமற்ற சட்டங்களின் வரம்புக்கு ஏன் உட்பட்டு நிற்க வேண்டும்? சிற்சில சந்தர்ப்பங்களில் பிரிட்டிஷ் சர்க்காரின் சட்ட வரம்பை மீறுவதே இந்தியர்களின் கடமை ஆகக் கூடும். அப்படியிருக்கும்போது, பிரிட்டிஷ் சட்ட வரம்புக்கு நம்மை நாம் ஏன் உட்படுத்திக் கொள்ள வேண்டும்?

ஆகவே, புதிய காங்கிரஸ் இலட்சியம் 'சட்ட வரம்'பைக் கைவிட்டது. அமைதியையும் நேர்மையையும் கைக்கொண்டது.

அதுபோலவே குடியேற்ற நாட்டந்தஸ்தைக் கைவிட்டது. 'சுயராஜ்ய' இலட்சியத்தைக் கைக்கொண்டது.

இவ்விதம் காங்கிரஸின் இலட்சியம் மாறியது காங்கிரஸின் தலைமை மகாத்மாவிடம் சென்று விட்டதற்கு அறிகுறியாயிற்று. அதனால் இந்தியப் பொது மக்களின் மனோபாவமும் மாறியது.

காங்கிரஸ் என்பது யாரோ இங்கிலீஷ் படித்த ஒரு கூட்டத்தார் தங்களுடைய பட்டம் பதவிக்காக நடத்தும் ஸ்தாபனமல்ல, பாரத தேசத்தின் விடுதலைக்காக வேலை செய்யும் ஸ்தாபனம் என்று மக்களின் மனதில் நிச்சயம் ஏற்பட்டது.

தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் ஆதரவில்

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி



அவர்களின் சங்கீதக் கச்சேரி

★

சங்கீத ரத்ன மைசூர் ஸ்ரீ டி. சௌடய்யா ... வயலின்
ஸ்ரீ கஞ்சபாத்தி ராமநாதன் ... ... மிருதங்கம்
ஸ்ரீ டி. எஸ். வில்வாத்ரி ஐயர் ... ... கடம்

★

6-11-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு
மவுண்ட் ரோடு ராஜாஜி ஹாலில்

"ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்

டிக்கட்டுகள்: ரூ. 100, 50, 25, 10 & ரூ. 5

கிடைக்குமிடம்: சம்மேளனக் காரியதரிசி "ஹிந்து" ஆபீஸ் மவுண்ட் ரோடு, சென்னை
சம்மேளனக் காரியாலயம், 5-6, ஸ்ரீராமா பில்டிங்ஸ், மவுண்ட் ரோடு

வசூலாகும் தொகை பத்திரிகையாளர் சம்மேளனத்தின் கட்டிட நிதிக்குச் சேரும்

வி. கே. நரசிம்மன், காரியதரிசி

ஒலிபெருக்கி ஏற்பாடு: திருச்சி ரேடியோ சேல்ஸ் அண்டு சர்வீஸ்

எமது கம்பெனியின் வாடிக்கைக்காரர்களுக்கும்
நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

எங்கள் மனமார்ந்த

தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

உரித்தாகுக

★

எம். ஸி. அப்பாசாமி செட்டி & கோ.

தென்னிந்தியாவிலேயே கலர் பிளாக்குகள் தயாரிப்பதில் நிபுணர்கள்

போன்: 3202 - 14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி, - மதராஸ்

ஆண்டவன் திருவுள்ளம்

எஸ். ஆர்.

அமெரிக்கா இன்று உலகத்திலுள்ள மாபெரும் வல்லரசுகளில் ஒன்றாகப் புகழ் பெற்று விளங்குகிறது.

செல்வத்திலோ, பொருள் வளத்திலோ, விஞ்ஞானத்திலோ, அறிவுத்துறையிலோ அது எந்நாட்டுக்கும் இளைத்ததாக இல்லை.

விண்ணை இடிக்கும் அமெரிக்க மாட மாளிகைகளையும், அசுர வேகத்தில் பொருள்களை உற்பத்தி செய்து தள்ளும் அமெரிக்கத் தொழிற்சாலைகளையும் கண்டு உலகமே பிரமிக்கிறது.

இத்தகைய சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று விளங்கும் அமெரிக்கா ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த இடமே தெரியாமலிருந்தது.

அமெரிக்காவைக் கண்டு பிடிக்க இந்தியா ஒருவிதத்தில் காரணமாக இருந்தது என்பதைக் கேட்க எல்லோருக்கும் மிக்க ஆச்சரியமாக இருக்கும்.

பிரஸிடெண்ட் ட்ருமன் இம்மாதம் 11-ம் தேதி வாஷிங்டன் விமான நிலையத்துக்குச் சென்று பண்டித நேருவை வரவேற்றுப் பேசும்போது இதைக் குறிப்பிட்டுள்ளார்.

ட்ருமன் கூறியதாவது: "இந்தியாவுக்குப் போக ஒரு புது வழியைக் கண்டு பிடிக்க முயன்றபோது அமெரிக்கா கண்டுபிடிக்கப் பட்டது. இது ஆண்டவனின் திருவுள்ளம் போலும்!"

ஆம், அமெரிக்கா எதிர்பாராதவிதமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியாவுக்குப் போகப் புது வழியைக் கண்டு பிடிக்க ஐரோப்பிய நாடுகள் முயன்றபோது அமெரிக்கா கண்டுபிடிக்கப் பட்டது. அந்தக் கதையை இங்கே சொல்லுகிறோம்.

* * *

ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்குமிடையே வெகுகாலமாக வர்த்தகம் நடந்து கொண்டிருந்தது. ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவுக்கு வந்து மிளகு, ஏலம், இஞ்சி, பட்டு முதலியவற்றை வாங்கிக்கொண்டு போய் ஐரோப்பாவில் விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். இந்த வியாபாரம் பெரும்பாலும் தரைமார்க்கமாக நடந்து கொண்டிருந்தது. திடீரென்று அதற்கு ஒரு ஆபத்து ஏற்பட்டது. துருக்கியர் கான்ஸ்டான்டிநோபிள் பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்டு இந்தியாவுக்குப் போகும் மார்க்கத்தை அடைத்துக் கொண்டனர். இதனால் இந்தியாவுடன் ஐரோப்பா நடத்திவந்த வர்த்தகத்தை நிறுத்தவேண்டியதாயிற்று. மிளகும் இஞ்சியும் ஏலமும் சாப்பிட்டுச் சுவைகண்ட ஐரோப்பிய மக்கள் அவை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள். வர்த்தகம் பாழாகி விட்டதே என்று வியாபாரிகள் கவலைப்பட்டார்கள். எல்லோரும் சேர்ந்து இந்தியாவுக்குப் போக வேறு வழி கிடையாதா என்று ஆலோசித்தார்கள்.

"எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்! நான் சொல்லட்டுமா?" என்றார் ஒரு மாலுமி.

அவர் பெயர் கொலம்பஸ்.

"சொல், பார்ப்போம்!" என்றார்கள் வர்த்தகர்களும் மற்ற ஐரோப்பியப் பிரமுகர்களும்.

"பூமி உருண்டையாயிருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார் கொலம்பஸ்.

"சரி — அப்படியே வைத்துக் கொள்வோம். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"இந்தியா கிழக்கே இருக்கிறது. பூமி உருண்டையாக இருப்பதால், மேற்குத் திசையையே நோக்கிப் போய்க்கொண்டிருந்தால் கிழக்குத் திசையை, அதாவது இந்தியாவை அடைந்து விடலாம்" என்றார் கொலம்பஸ்.

அவ்வளவுதான்! எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "பேஷ்! பேஷ்! அருமையான யோசனை!" என்று கொலம்பஸைப் பரிகாசம் செய்தார்கள். "கிழக்கே போவதற்கு மேற்கே போவதாம்! உன்னைத் தவிர வேறு யாருக்கு இந்த அற்புதமான யோசனை உதயமாகும்?" என்று அவரைக் கேலி செய்தார்கள்.

கொலம்பஸுக்குப் பைத்தியக்காரன் என்ற பட்டம் கிடைத்தது.

உலகத்தில் புதிய புதிய கருத்துக்களைச் சொன்னவர்களுக்கெல்லாம் பைத்தியக்காரப் பட்டம்தானே கிடைத்திருக்கிறது!

கொலம்பஸ் மனம் தளரவில்லை.

தன்னுடைய சித்தாந்தத்தை உலகத்துக்கு நிரூபிக்க அவர் விரும்பினார். தானே ஒரு கப்பலில் அம்மாநிரியாகப் போய் இந்தியாவை அடைந்து காட்டக் கருதினார். ஆனால் அவர் மிக்க ஏழை. கப்பலுக்கு அவர் எங்கே போவார்?

அவர் போர்ச்சுகல் அரசனிடம் சென்று "எனக்கு ஒரு கப்பல் கொடுங்கள்" என்று வேண்டினார். அவன் அதற்கு இணங்கவில்லை. கொலம்பஸ் பிரிட்டிஷ் மன்னனிடம் சென்று தன் வேண்டுகோளை வெளியிட்டார். அவனும் அதற்குச் செவி சாய்க்கவில்லை. கொலம்பஸ் ஸ்பெயின் தேசத்து அரசனிடம் சென்று முறையிட்டார். அவனும் அதற்கு இணங்கவில்லை.

கொலம்பஸின் வினோதமான கருத்துக்கு யார்தான் ஆதரவு கொடுப்பார்கள்?

கடைசியில் கொலம்பஸ் மிக்க மனமுடைந்து சொந்த காட்டுக்குத் திரும்புவதற்காகப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தார். அப்போது குதிரைமீது ஒரு ராஜ சேவகன் வெகு வேகமாக வந்தான். அவன் கொலம்பஸ் அருகே வந்ததும், குதிரையை விட்டுக் கீழே இறங்கி, "கொலம்பஸ், நீ அதிர்ஷ்டக்காரன்!" என்றான்.

கொலம்பஸுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வெறுப்புடன், "என்னுடைய அதிர்ஷ்டத்தை நீதான் மெச்ச வேண்டும்" என்று கூறினார்.

"இல்லை, உனக்கு நிச்சயமாக அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. ராணி தன்னுடைய நகைகளை விற்றுவது உனக்குக் கப்பல் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லுகிறாள். வா, அரண்மனைக்குப் போவோம்" என்றான்.

கொலம்பஸுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவன் அரண்மனைக்குப் போனான். ராணி அவனுக்கு மூன்று கப்பல்கள் வாங்கிக் கொடுத்தாள்; அத்துடன் கொலம்பஸுக்குத் துணையாகப் போவதற்காக நூற்றிருபது பேரையும் அனுப்பி வைத்தாள்.

1492-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 3-ம் தேதி அதிகாலை. கொலம்பஸ் புறப்பட்டார். ஆம்; இந்தியாவைக் கண்டு பிடிப்பதற்காகத்தான்! அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்காக அல்ல. இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கு மிடையே ஒரு மாபெரும் கண்டம் இருக்கிறதென்று யாருக்குமே தெரியாது.

கப்பல்கள் கரையை விட்டு நகரத் தொடங்கின. ஆ! அது என்ன அழுகைச்

அமெரிக்காவுக்குச் சுதந்திரம் வாங்கிக்கொடுத்த மகா புருஷரும் முதல் அமெரிக்க ஜனாதிபதியுமான ஜார்ஜ் வாஷிங்டனின் இல்லம். சென்ற 12-ம் தேதி ஜவாஹர்லால்ஜி இங்கு விஜயம் செய்தார்.




சத்தம்? சிப்பந்திகள் பலர் விம்மி விம்மி அழத் தொடங்கினார்கள். "இனி நாங்கள் உயிரோடு எங்கே திரும்பிவரப் போகிறோம்?" என்று அவர்கள் பெருமூச்சு விட்டார்கள். கொலம்பஸின் விநோதமான ஆராய்ச்சிக்குத் தாங்கள் பலியிடப்பட்டு விட்டதாக அவர்கள் அஞ்சினார்கள்.

அந்தக் காலத்தில் ஐரோப்பாவுக்கு மேற்கே அதிகமாக யாரும் பிரயாணம் செய்ததில்லை. அட்லாண்டிக் சமுத்திரத்தில் அரக்கர்களும், பூதங்களும் நிறைந்திருப்பதாகக் கதைகள் உலாவி வந்தன. ஆகவே இனி உயிருடன் திரும்பப் போவதில்லை என்று அவர்கள் பயப்பட்டதில் அதிசயம் இல்லை. அவர்கள் ஆசையுடன் மீண்டும் ஒரு முறை கரையை நோக்கினார்கள்.

ஒரு நாளாயிற்று; இரண்டு நாளாயிற்று. ஒரு வாரமாயிற்று; இரண்டு வாரமாயிற்று. ஒரு மாதமும் ஆயிற்று. கண்ணுக்கெட்டியவரை எங்கும் ஒரே தண்ணீர்ப் பரப்பாகக் காணப்பட்டதே யொழியக் கரையே தென்படவில்லை. கப்பல் சிப்பந்திகள் கொலம்பஸைக் கெஞ்சினார்கள். "நீங்கள் இந்தியாவுக்கு எங்களை அழைத்துப் போகவில்லை; எமலோகத்துக்குத்தான் அழைத்துக் கொண்டு போகிறீர்கள்" என்று கூறினார்கள். கொலம்பஸ் அவர்களுக்கு உற்சாகமூட்டினார். ஆசை காட்டித் தேற்றினார். "இந்தியாவுக்கு நாம் போய்விட்டால், அடேயப்பா! அப்புறம் நமக்கு என்ன குறைவு? நாம் எல்லோருமே ராஜாக்களாகி விடலாம்" என்று கூறினார்.

ஒரு மாதம் ஒன்றரை மாதமாயிற்று. ஒன்றரை மாதம் இரண்டு மாதமாயிற்று. கரையையே காணோம். முடிவில்லாத, வரம்பில்லாத சமுத்திரம்தான் கண்ணுக்கெட்டிய வரை வியாபித்திருந்தது. சிப்பந்திகளுடைய உற்சாகம் மீண்டும் குறைந்தது. "கொலம்பஸ், நாம் திரும்பிப் போய் விடுவோம். வேண்டாம், இந்த ஆபத்து!" என்று கெஞ்சினார்கள். கொலம்பஸ் அவர்களுக்கு மீண்டும் உற்சாக மூட்டித் தேற்றினார். அஷ்ட ஐச்வரியங்களும் நவ நிதியமும் இந்தியாவில் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகக் கூறிப் பார்த்தார். ஆனால், இந்தத் தடவை அவர்கள் கொலம்பஸ் வார்த்தைக்குச் செவி சாய்க்கவில்லை. கொலம்பஸ் மீது அவர்களுக்குக் கோபம் தான் அதிகமாயிற்று. "திரும்பிப் போவதற்கு இணங்குகிறாயா? அல்லது உன்னைத் தூக்கிச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டு நாங்கள் மாத்திரம் போகட்டுமா?" என்று பயமுறுத்தினார்கள். கொலம்பஸ் யோசித்துப் பார்த்தார். இனிமேல் அவர்களைச் சமாதானப்படுத்துவது முடியாத காரியம் என்பதை உணர்ந்தார். அவருக்குக் கவலையும் வேதனையும் அதிகமாயின. திரும்பிப் போய் எந்த முகத்தை வைத்துக் கொண்டு




அமெரிக்காவில் உள்ள பிரசித்திபெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி. இங்கு 167 அடி உயரத்திலிருந்து ஜலம் விழுகிறது. இந்தியப் பிரதமர் பார்வையிடும் காட்சிகளில் இதுவும் ஒன்று.

ராணியைப் பார்ப்பது? மன்னரைப் பார்ப்பது எப்படி?

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்கள் கப்பல் சிப்பந்திகள்.

"இன்னும் மூன்றே மூன்று நாள் மாத்திரம் போவோம். அதற்குள் கரை தென்படாவிட்டால் திரும்பி விடுவோம்" என்று அவர்களை வேண்டினார் கொலம்பஸ். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

கப்பல்கள் மூன்றும் ஆழ் கடலிலே விரைந்து சென்றன. சில சமயம் கடல் கொந்தளிக்கும். சில சமயம் பெரும் புயற் காற்று வீசும். அந்தக் கொந்தளிப்பையும் புயற் காற்றையும்விட கொலம்பஸின் இதயத்திலே தோன்றிய புயலும் கொந்தளிப்பும் தான் அதிகமாயிருந்தன. அவர் கப்பலின் மேல் தட்டின் இருந்தபடி கடலையே நோக்கியவண்ணமிருந்தார்.



சிக்காகோ நகரத்தின் ஒரு பகுதி. அக்டோபர் 26-ம் தேதி சிக்காக்கோ மக்களின் சார்பாக நேருஜிக்கு இங்கே ஒரு விருந்து அளிக்கப்படும்.

ஒரு நாளாயிற்று. இரண்டு நாளாயிற்று. மூன்றாவது நாளும் வரப்போகிறது. ஆண்டவனுக்குக் கருணையே இல்லையோ? கடலைப் பார்த்துப் பார்த்துக் கொலம்பஸின் கண்கள் பூத்துப் போயின. திடீரென்று அங்கு நீரில் ஒரு பொருள் தென்பட்டது. கொலம்பஸ் அதை உற்று நோக்கினார். ஏதோ ஒரு பழக் கொடி. தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. இருளடைந்திருந்த கொலம்பஸின் முகத்தில் கொஞ்சம் பிரகாசம் உண்டாயிற்று. ஆண்டவன் அவரைக் காப்பாற்றி விட்டாரா? கடவுள் கண் திறந்து பார்த்து விட்டாரா? இரண்டு மாதத்துக்குப் பிறகு இனிமேலாவது கரையைக் கண்ணாலே காணமுடியுமா? கொடி நீரில் மிதப்பதால், கரை அருகில்தான் இருக்க வேண்டும் என்று அவர் உறுதியாக நம்பினார். உடனே கப்பலை வேகமாகச் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

மாலையாயிற்று. இரவும் வந்தடைந்தது. வானிலே வெண்ணிலவு எழுந்தது. ஆழ் கடல் முழுவதும் ஒரு புது வண்ணம் பெற்றுத் திகழ்ந்தது. அலைகளின் பேரோசையைத் தவிர எங்கும் ஒரு பேச்சு மூச்சுக் கூடக் கிடையாது. கொலம்பஸ் மேல் தட்டில் உலாவியபடி எதிரே உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். இருளைக் கிழித்து, அந்தகாரத்தை ஊடுருவி, அவர் கண்கள் வெகு தூரம் உற்று நோக்கின. வாய் ஆண்டவனுடைய திருநாமத்தை முணுமுணுத்தது. "கடவுளே என்னைக் காப்பாற்று!" என்று வேண்டிக் கொண்டது உள்ளம்.

அன்றிரவு யாரும் தூங்கவே இல்லை. எல்லோருக்கும் பரபரப்பு அதிகமாக இருந்தது.

நள்ளிரவு கடந்தது. சந்திரன் மேல் வானத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தான். இன்னும் சில மணி நேரத்திற்குள் பொழுது விடிந்துவிடும். கப்பல் சிப்பந்திகள் கொடுத்த மூன்று நாள் தவணை முடிந்துவிடும். அப்புறம் திரும்பிப் போக வேண்டியதுதான்.

கொலம்பஸ் எதிரே உற்று நோக்கினார். பளிச் பளிச்சென்று வெகு தூரத்துக் கப்

பால் ஏதோ ஒரு வகை வெளிச்சம் தென்பட்டது. அது நிச்சயமாக ஒரு விளக்காகத்தான் இருக்க வேண்டும். எல்லோரும் எழுந்து நின்று பார்த்தார்கள். அவர்களுடைய பரபரப்பு அதிகமாயிற்று. வெளிச்சம் வந்த திசையை நோக்கிக் கப்பலை வெகு வேகமாகச் செலுத்தினார்கள்.

மொத்தம் மூன்று கப்பல்கள். கொலம்பஸின் கப்பல் நடுவில் போய்க் கொண்டிருந்தது. அதற்கு முன்னால் 'பிண்டா' என்ற கப்பல் போய்க் கொண்டிருந்தது. எல்லாவற்றுக்கும் கடைசியாக 'சாண்டா மேரியா' கப்பல் வந்து கொண்டிருந்தது.

காற்றையும் கொந்தளிக்கும் அலை கடலையும் எதிர்த்துப் போட்டி போட்டுக் கொண்டு மூன்று கப்பல்களும் போய்க் கொண்டிருந்தன.


மணி இரண்டு இருக்கும். திடீரென்று ஒரு பீரங்கிச் சத்தம் கேட்டது. அவ்வளவு தான்! கொலம்பஸ் துள்ளிக் குதித்தார். கப்பல் சிப்பந்திகள் எழுந்து ஆனந்தக் கூத்தாடத் தொடங்கினார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். "வாழ்க கொலம்பஸ்!" "வாழ்க கொலம்பஸ்!" என்ற கோஷம் ஒவ்வொருவர் வாயிலிருந்தும் வெளி வந்தது.


எந்தக் கப்பல் முதலாவதாகக் கரையைக் காண்கிறதோ அது ஒரு பீரங்கியைச் சுட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதலாவதாகக் கரையைக் காணும் பாக்கியம் 'பிண்டா' கப்பலுக்குக் கிடைத்தது. அது பீரங்கியைச் சுட்டது.

அருகில் நெருங்க நெருங்கக் கரை தெளிவாகக் கண்ணுக்குப் புலப்பட்டது. பார்ப்பதற்கு அது மிக்க ரமணீயமாகத் தோன்றியது. எங்கும் பசுமையாக இருந்தது.

கொலம்பஸின் முகத்தில் வெற்றிக் கர்வம் ததும்பியது. ஒளியிழந்த அவருடைய முகத்திலே குதூகலம் பொங்கிற்று. அழகாக உடை உடுத்திக்கொண்டு, ஸ்பானிஷ் கொடியைக் கையில் பிடித்துக்கொண்டு, கப்பலை விட்டுக் கீழே இறங்கினார். கரையில் காலடி எடுத்து வைத்ததும், மண்டியிட்டுக் கீழே குனிந்து, புல்லை முத்தமிட்டார். "இந்தியாவைக் கண்டுபிடித்து விட்டோம்" "இந்தியாவைக் கண்டுபிடித்து விட்டோம்" என்று அவர் வெற்றிப் பரவசத்துடன் சத்தமிட்டுக் கூவினார்.

அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற கொலம்பியா சர்வகலாசாலையைச் சேர்ந்த ஒரு வாசகசாலை. சென்ற 17-ம் தேதி திங்கட்கிழமை மாலை இங்கு நடந்த ஒரு விசேஷப் பட்டமளிப்பு விழாவில் கொலம்பியா சர்வகலாசாலை நேருஜிக்கு டாக்டர் பட்டம் அளித்தது.





பண்டித ஜவாஹர்லால் நேருவைப் பார்த்து மகிழப் பாக்கியம் செய்திருந்த நியூயார்க் நகரத்தின் ஒரு தோற்றம்.

ஆனால் அது இந்தியா அல்ல. அமெரிக்காவுக்கு வெகு அருகில் உள்ள பஹாமாத் தீவுகளில் ஒன்று. இந்தியாவைக் கண்டு பிடிக்கப் போன கொலம்பஸ் ஒரு மாபெரும் கண்டத்தையே கண்டுபிடித்து விட்டார்.

* * *

ஒரு மாபெருங் கண்டம் — மாபெரும் தேசம் கிடைத்தது உண்மைதான். ஆனால் அது எப்படிக் கிடைத்தது?

மாட மாளிகைகளுடனும் கூட கோபுரங்களுடனும் இப்போது அமெரிக்கா உள்ளதைப் போல அப்படியே கிடைத்து விட்டதா?

இல்லை, இல்லவே இல்லை!

பெருங் காடாக வடகோடியி லிருந்து தென்கோடி வரை வியாபித் திருந்தது. காடு என்றால் சாமானியமான காடு அல்ல. பல மைல் தூரம் வரை சூரிய வெளிச்சம் கொஞ்சங்கூட உள்ளே நுழைய முடியாதபடி அவ்வளவு நெருக்கமான காடு.

அந்தப் பெருங் காடுதான் இன்று குபேர பூமியாக விளங்குகிறது. இதற்குக் காரணம் என்ன?

உழைப்பு, உழைப்பு, மனித உழைப்பு! ஐரோப்பாவிலிருந்து புது உலகத்தைத் தேடிச் சென்று அங்கு குடி புகுந்த மக்கள் அல்லும் பகலும் பாடு பட்டார்கள்; ஓயாமல் உழைத்தார்கள்.

அவர்கள் பட்ட சிரமமும் கஷ்டமும் கொஞ்சநஞ்சம் அல்ல.

பூர்விகக் குடிகளாகிய சிவப்பு இந்தியர்கள் அவர்களுக்கு எத்தனையோ தொல்லைகளைக் கொடுத்தார்கள். அப்புறம், மண்ணையும் பொன்னையும் கொண்டு தங்கள் சுதந்திரத்தை அபகரிக்க விரும்பிய பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் முதலிய நாடுகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. இத்தனையையும் அவர்கள் செய்து முடித்து அமெரிக்காவை ஒரு குடியரசாக்கினார்கள்.

காடாய்க் கிடந்த ஒரு பெரு நாட்டை அமெரிக்க மக்கள் இப்படி ஒரு மாபெரும் வல்லரசாக ஆக்கியதற்கு ஈடு இணை உலக சரித்திரத்திலேயே கிடையாது.

* * *

புது உலகத்துக்கு இன்று தலைமையாக விளங்குவது அமெரிக்கா.

பழைய உலகத்துக்கும் பண்டைப் பெருங் கலாசாரத்துக்கும் சின்னமாக விளங்குவது இந்தியா.

இவ்விரு நாடுகளும் மனப் பூர்வமாக ஒத்துழைத்தால், உலகத்தில் எத்தனையோ மாபெரும் காரியங்களைச் சாதிக்க முடியும்.

இந்தியாவும் அமெரிக்காவும் சேர்ந்து பல காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்பது, பிரஸிடெண்ட் ட்ரூமன் கூறியது போல ஒருவேளை 'ஆண்டவனின் திருவுள்ள'மாக இருந்தாலும் இருக்கலாம்!



ஆர்வத்துடன் துள்ளிக் குதிக்கும் கடல் அலைகளைப் பார்த்து நீலவானம் புன்னகை பூத்தது. "ஆமாம், கடலழகி, நீயும் உலகம் தோன்றிய நாள் முதல் இப்படித்தான் துடிக்கிறாய்? அங்கமெல்லாம் பொங்கி வழியும் உன் அழகு வெள்ளம் பாழாகப் போகிறது. காலமெல்லாம் இப்படிக் கன்னியாகவேதான் இருக்கப் போகிறாயா? ஓயாது புலம்புகிறாய். இருந்தும் உன் காதலன் உன்னைத் தேடிவரவில்லை. இங்கே பாரம்மா, என்னிடம் கூடவா சொல்லக்கூடாது? உன் மனசைக் கவர்ந்தவன் யார்?" என்று அனுதாபத்துடன் கேட்டது வானம்.

அலை பாயும் கூந்தலைக் கோதி விட்டபடியே கடலழகி சிரித்தாள். "என்ன அண்ணா! உனக்குத் தெரியாதா? உலகத்தில் எல்லோருக்கும் தெரியுமே என் காதலன் யாரென்று! எத்தனை ஆயிரம் வருஷங்களாக அவருடைய காதலுக்காக ஏங்கிக் கிடக்கிறேன் தெரியுமா? ஏன் அண்ணா, அவர் கூட உன் நண்பர்தானே! நீயாவது அவரிடம் சொல்லக்கூடாதா? எத்தனையோ ஆசையுடன் அவர் வருகைக்காக இரவெல்லாம் காத்திருக்கிறேன். அவரைக் கண்டு விட்டால் என் தேகம் விம்மித் தணியும்..." என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னாள் கடலரசி.

நீலவானம் இதைக் கேட்டதும், "அட அசடே! சந்திரனையா நினைத்து இப்படி உருகுகின்றாய்? நீ ஒருத்தி இப்படி தவங் கிடந்தால் பரவாயில்லை. எத்தனையோ அழகிகள் அவனுக்காகக் காத்திருக்கிறார்களே! அவன் யாரிடம்தான் செல்லுவான்? கணக்கற்ற நக்ஷத்திரமோகினிகள் அவன் தங்களருகே ஒரு முறை வரமாட்டானா என்று இரவெல்லாம் கண் விழித்துக் காத்துக் கிடக்கிறார்கள். 'பளிச்' சென்று ஒரு புன்னகை காட்டி அவன் நெஞ்சைக் கவரப் பார்க்கிறாள் அந்த மின்னல் கொடியாள். போதாததற்கு அந்த வானவில்லில் அழகாக அமர்ந்திருக்கும் சப்த கன்னிகளும் அவனுக்காகத்தான் கன்னிகளாகவே காலங் கழிக்கிறார்கள்" என்று சொல்லி முடிப்பதற்குள், கடலழகி கேட்டாள்:

"என்ன வேடிக்கையாயிருக்கிறதே! வானவில்லில் சப்த கன்னிகளா?"

வானம் கட கடவென்று சிரித்தது. "இது தெரியாதா? அந்த ஏழு நிறமும் அவர்களால்தானே ஏற்படுகிறது? அவர்களும் நல்ல அழகிகள்தான், இல்லையா?" என்று ஒரு கேள்வியும் போட்டது.

கடலரசி ஒரு தரம் பெருமூச்சு விட்டாள். "அதிருக்கட்டும், அண்ணா! இவர்களுக்காகவா என்னிடம் வரவில்லை அவர்? அவர்கள் எல்லோரையும்விட நான் பேரழகி இல்லையா? நீயே சொல், நான் கம்பீரமாக இல்லையா? உலகமே மயங்கி நிற்கிறதே என் அழகைப் பார்த்து. காவியங்களெல்லாம் என் அழகை எவ்வளவோ வர்ணிக்கின்றன. என்னிடம் இருக்கும் சொத்து குபேரனிடம் கூடக் கிடையாது. முத்தும் பவளமும் எல்லோருக்கும் வாரி வாரி இறைக்கிறேன். இருந்தும் என்னிடம் குறையாது குவிந்து கிடக்கின்றன அவை. எத்தனையோ லட்சம் ஜீவராசிகளுக்கு உணவளித்து இருக்க இடமும் கொடுத்துக் காத்து வருகிறேன்..."

கடலழகி தன் புகழைச் சொல்லிக் கொண்டே போனாள். வானம் இடைமறித்தது.

"அட, ஒரேயடியாய்ப் பெருமையடித்துக்கொள்கிறாயே! கொஞ்சம் இந்த வானவில்லின் சப்த கன்னிகளையும் பேசச் சொல்கிறேன். அதைக் கேட்டு விட்டுப்

பிறகு நீயே சொல் — அந்தச் சந்திரன் யாரிடம்தான் வருவான் என்று."

வானம் கூறி முடித்ததும், விண்ணையும் மண்ணையும் ஒன்றாகச் சேர்த்துப் பாலம் போட்டது போல வானவில் எழுந்தது. நிர்மலமான நீல வானத்தின் நடுவே அது அழகான பெண் ஒருத்தியின் கழுத்தில் அசைந்தாடும் நவரத்தின மாலை போலக் காட்சியளித்தது. கடலரசி கூடக் கொஞ்சம் வியப்புடனேதான் அதைப் பார்த்தான். ஒளிவிடும் அந்த ஏழு நிறத்திலும் ஏழு பெண்கள் இருந்தார்கள். கண்ணைக் கவரும் அந்தப் பெண்களின் அழகுக்கு மேலும் மெருகிட்டதுபோல இருந்தது அவர்கள் ஆசை.

நீலநிறப் பட்டை அணிந்திருந்தவள் ஒரு மோகனப் புன்னகையைத் தவழ விட்டுப் பேச ஆரம்பித்தாள். "நான்தான் திருமாலின் பிரதிபிம்பம். அவன் திருமேனியின் அழகு என் நிறம்தான். ஒளி வீசுகிற வானமும் கடலும் என் நிழலிலே பிறந்தவைகள்தான். நவரத்தினங்களில் நீலம் நான்தான். நீல நிறத்துப் பாலகி நான். மோகினி நான். என்னைக் கண்டு புவனம் மயங்கும்."


அவள் தன் பெருமையை முடிப்பதற்குள் மற்றவள் ஆரம்பித்தாள். பொன்னை அவள் மேனியின் அழகை அதிகமாக்கிக் காட்டியது அவள் மஞ்சள் நிறச் சேலை. "மங்களகரமானவள் நான். மஞ்சள் நான். உலோகத்திலே சிறந்த தங்கம் நான். மாலையின் அழகை உன்னதமாக்கிக் காட்டும் மஞ்சள் வெய்யில் நான். நெற்கதிரின் சாயை நான். பொலிவும் புதுமையும் நான்......"

சிறிதும் தாமதியாமல் அடுத்தவள் சொன்னாள்: "நான்தான் சிவப்பு ராணி. தீயிலே ஜ்வாலை நான். உடலிலே ரத்தம் நான். ரத்தினத்தின் மங்காத சிவப்பு நான். பெண்களின் அழகான நெற்றியிலே அலங்காரமாக வீற்றிருக்கும் குங்குமத் திலகம் நான். பவளம் நான்......"


இன்னும் என்னவெல்லாமோ அவள் சொல்லியிருப்பாள். அதற்குள் இன்னொரு கன்னி பேச ஆரம்பித்துவிட்டாள். "பச்சென்று பரந்திருக்கும் பசுமை நான். சோலைப் பசுங்கிளி நான். இயற்கையின் எழிலே நான்தான்."

பச்சை நிறப் பட்டாடையைக் காற்றிலே பறக்கவிட்டு ஒரு முல்லைச் சிரிப்புடன் தன் மேன்மையைச் சுருக்கமாக முடித்து விட்டாள் அவள்.

இவர்கள் மழை பொழிவதுபோல இப்படிப் பேசியதைக் கேட்டதும் கடலழகி அயர்ந்து விட்டாள். "அடியம்மா, இந்தப் பெண்கள் என்ன இப்படிப் பொரிந்து கொட்டுகிறதுகளே! நாலு பேராச்சு. இன்னும் மூன்று இருக்கிறதுகள். இன்னும் என்னதான் பாக்கி யிருக்கிறது. அவைகள் சொல்வதற்கு என்று புரிய



அமெரிக்க ஜனாதிபதிகளில் புகழ்பெற்ற ஆப்ரஹாம் லிங்கனின் ஞாபகார்த்த மண்டபம். பள பள வென்று மின்னும் சலவைக் கற்களால் கட்டப்பட்ட இந்த மண்டபம் 188 அடி நீளமும் 118 அடி அகலமும் கொண்டது. இந்த மண்டபத்தின் சுவர்கள் லிங்கன் நிகழ்த்திய பிரசங்கங்களின் மணிவாசகங்களைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றன. இன்னும் சில அருமையான சித்திரக் காட்சிகளும் மண்டபத்தை அழகு படுத்துகின்றன. இந்த மண்டபத்தின் நடுவேயுள்ள பிரம்மாண்டமான ஹாலில் லிங்கன் நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்திருப்பது போல அழகான சிலை ஒன்றையும் அமைத்திருக்கிறார்கள்.



அக்டோபர் 2-ந் தேதி ராயப்பேட்டை சுதந்திரச் சங்கத்தார் நடத்திய காந்தி ஜயந்தி விழாவில் மகாத்மாஜியின் உருவப் படத்தைக் 'கல்கி' ஆசிரியர் திறந்து வைத்தார். மேற்படி வைபவத்துக்கு கனம் சீதாராம ரெட்டி தலைமை வகித்தார். சங்கத் தலைவர் ஸ்ரீ டி. வி. கோபாலசாமி.

வில்லை. என்னமோ அதையும் கேட்போம்" என்று முடிவு கட்டினான்.

ஊதா நிறக் கலை யுடுத்து இதுவரை மௌனமாக உட்கார்ந்திருந்தவன் சொன்னான்: "நான் சுயநலத்தை விட்டவன். தனித்திருந்து புகழைத் தேடமாட்டேன். எதிலும், யாருடனும் கலந்து ஒன்றிப் போய் விடுவேன். வண்ணமயிலின் கழுத்திலும் தோகையிலும் என் அழகைக் காணலாம். மற்ற நிறங்களுக்கு என் சேர்க்கையால் மெருகிட்டு வருகிறேன். இதுதான் என் வாழ்வின் லட்சியம்."

அவனருகே உட்கார்ந்திருந்த கருநீலப் பெண் அடக்கமாகச் சொன்னாள்:

"கடலின் ஆழம் நான். மழை பொழியும் கார்மேகம் நான். இமயத்தின் சிகரம் நான். தொடுவானத்தின் எல்லைக்கோடு நான். கண்ணில் கருமணி நான்."

ஆறு கன்னிகள் ஒரு வகையாக முடித்து விட்டார்கள். ஏழாவது அழகி காவியுடை தரித்து சந்நியாசினிபோல வீற்றிருந்தாள். இருந்தும் அவளிடம் அபார கம்பீரம் இருப்பதுபோலத் தோன்றியது. தாய்மையின் சோபை அவளிடம் சுடர் விட்டுப் பிரகாசித்தது.

கடலரசி அவளைப் பார்த்துக் கேட்டாள். "ஏண்டியம்மா, நீ மட்டும் பேசாமலிருக்கிறாயே! ஏதாவது சொல்லேன். நான் இது அது என்று உனக்கு வாயாடத் தெரியாது போலிருக்கிறது. பக்கத்திலிருக்கும் இந்தப் பெண்களிடமாவது கற்றுக்கொள்ளக் கூடாதோ?"

அந்தப் பெண் வாய்விட்டுச் சிரித்தாள். "நான் பேசுவதில்லை. என் பெருமையை வெளியிட்டுச் சொல்வதில்லை. என் வலிமை எல்லோருக்கும் தெரியும். நான்தான் ஆத்ம சக்தி. விண்ணிலும் மண்ணிலும் அசுர சக்தி பரவி வருகிறது. அதை வென்று என் சக்திதான் நிலைக்கப் போகிறது. அண்டமெல்லாம் அழிந்தாலும் ஆத்ம சக்தி அழியாது."

இதைக் கூறிவிட்டு அவள் மீண்டுமொரு முறை கலகல வென்று சிரித்தாள்.

பளீரென்று ஒளிவீசி மறைந்துபோனது வானவில். அண்டம் கிடுகிடுக்க இடி முழக்கம் கேட்டது. மின்னல் கொடியாள் ஒருகரம் தன் அழகிய நகைமுகம் காட்டி மறைந்தாள்.

வானம் மெல்லக் கடல் ராணியிடம் கேட்டது. "என்னம்மா, கேட்டாயா பெருமை யெல்லாம்! நீயே சொல்லு— இப்போ சந்திரன் எங்கே வருவான்?"

கடலரசி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள். பிறகு, "அண்ணா, எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்னமோ அழ வேண்டும் போலிருக்கிறது" என்றாள்.

நீலவானம் பெருமூச்சு விட்டுக் கூறியது. "எனக்குக் கூட மனசை விட்டு அழலாம் போலத்தான் இருக்கிறது" என்று.

உடனே மறுபடியும் கட கடவென்று இடிச் சத்தம் கேட்டது.

எல்லோருடைய உள்ளமும் குளிர மழை பொழியத் தொடங்கியது.

பாப்பா மலர்

கடல் கன்னி

1. அடிமைப் பெண் சொன்ன கதை

இந்தியாவுக்கு மேற்கே பாரசீகம் என்று ஒரு தேசம் இருக்கிறது. அதை முன்னொரு காலத்தில் ஆண்டு வந்த அரசன் பல விதங்களில் புகழ் பெற்றிருந்தான். அண்டை நாடுகளை யெல்லாம் ஜயித்துத் தனது ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டிருந்தான். அவனிடமிருந்த தங்க வைர நகைகளுக்கும் பணத்திற்கும் அளவே இல்லை. அவன் புகழ் உலகெங்கும் பரவியிருந்ததால் அவனை 'ராஜாதி ராஜன்' என்று எல்லோரும் அழைத்தனர். அவனுக்கு அநேக அழகிய மனைவிகள் இருந்தனர். பணத்தினால் கிடைக்கக் கூடிய சுகங்களை யெல்லாம் அந்த அரசன் அனுபவித்து வந்தான். ஆனால் அவனுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. அது என்னவென்றால், அவனுக்கு ஆண் மகன் இல்லாததுதான். இந்தக் குறை அவனைப் பெரிதும் வாட்டி வந்தது. ஆகையால் நாட்டிலுள்ள பக்கிரிகளுக்கெல்லாம் தான தருமங்கள் செய்தான். அவர்கள் செய்யும் பிரார்த்தனைகளால் தனக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்று எண்ணினான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அந்த அரசனின் அரண்மனைக்கு தூர தேசத்திலிருந்து ஒரு வியாபாரி வந்து சேர்ந்தான். அவன் தன்னுடன் ஒரு அழகிய அடிமைப் பெண்ணை அழைத்து வந்திருந்தான். அந்தப் பெண்ணை அரசனுக்கு விற்று ஏராளமான பொன் நாணயங்கள் பெற வேண்டும் என்பது அந்த வியாபாரியின் ஆசை. தனது ஆசையை அரண்மனை ஆட்களில் ஒருவனிடம் தெரிவித்தான். அந்த வேலைக்காரனும் வியாபாரியை அரசசபைக்கு அழைத்துச் சென்றான். வியாபாரி அரச சபைக்குச் செல்லுகையில் மன்னன் மந்திரிகளுடனும் பிரபுக்களுடனும் ராஜ்ய விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தான். சபை முடிவுற்றதும் வியாபாரியை அழைத்து வந்த காரியம் என்னவென்று கேட்டான்.

வியாபாரி தலை குனிந்து அரசனை வணங்கிவிட்டுத் தான் வந்த விஷயத்தைப் பற்றிப் பேசினான். "ராஜாதி ராஜனே! நான் மிகவும் அழகு வாய்ந்த ஒரு பெண்ணை அழைத்து வந்திருக்கிறேன். அவளுடைய அழகையும் குணத்தையும் தாங்கள் பார்ப்பீர்களானால் அவளுக்குச் சமமான பெண்ணே கிடையாது என்று நீங்களே கூறுவீர்கள்" என்றான்.

இதைக் கேட்ட பாரசீக மன்னன், "அப்படியானால் அந்தப் பெண்ணை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று கூறினான். உடனே மன்னன் அடிமைப் பெண் இருந்த அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். உள்ளே சென்றவுடன் வியாபாரி அந்தப் பெண் அணிந்திருந்த முகமூடியை நீக்கினான். திரை அகன்றவுடன் அரசன் முன் அதிசயமான அழகு படைத்த அழகி ஒருத்தி காட்சி யளித்தாள். உடனே மன்னன் அந்த மங்கை மீது ஆசை கொண்டான். அவளைத் தனது ராணியாக்கிக் கொள்ளவும் விரும்பினான். வியாபாரி செய்த இந்த உதவிக்காக மன்னன் அவனுக்குப் பதினாயிரம் தங்க நாணயங்கள் கொடுத்தான். வியாபாரியும் திருப்தியுடன் தன் நாட்டுக்குத் திரும்பினான்.

ரா.கி.

அரசன் அவளை ஒரு நேர்த்தியான அறைக்கு அழைத்துக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான். அந்த அறையின் ஜன்னல் வழி

யாகப் பார்த்தால் அலை மோதும் கடல் தெரியும். அந்த அறையில் அந்தப் பெண்ணுக்குத் தோழிகளாயிருக்க அநேகம் அடிமைப் பெண்களை அரசன் ஏற்பாடு செய்தான். அவளுக்கு விலையுயர்ந்த ஆடைகளையும், ஒளி வீசும் நகைகளையும் அணிவிக்கச் செய்தான்.

அன்று மாலை அரசன் அவனைப் பார்க்க வந்தபொழுது அவன் ஜன்னலருகே உட்கார்ந்திருந்தான். அரசன் அவன் முன் வந்தபொழுது அவன் அவனைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தன்னை அந்த அடிமைப் பெண் மரியாதையுடன் வரவேற்காதது கண்டு மன்னன் ஆச்சரியமடைந்தான். ஆனாலும் மன்னன் மனம் தளரவில்லை. ஜன்னலருகில் சென்று அவளைத் தன்மீது ஆசை கொள்வதற்கான முறையில் இனிமையாகப் பேசினான். ஆனால் மன்னன் விரும்பியபடி அவன் பேசவில்லை.

இந்த விசித்திரமான நடத்தை அரசனுக்கு வருத்தத்தை அளித்தது. கேளிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தால் அழகியின் மனம் மாறுமோ என்று மன்னன் எண்ணினான். உடனே நல்லதோர் விருந்து தயார் செய்யுமாறு கட்டளையிட்டான். சங்கீதக் கச்சேரிகளுக்கும் ஏற்பாடு செய்தான்.

அந்த அழகி விருந்தை உண்டான். சங்கீதக் கச்சேரிகளையும், நாட்டியங்களையும் பார்த்தான். அரசன் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் பதில் வார்த்தை



ஒன்று கூட அந்த அழகியின் வாயி லிருந்து வரவேயில்லை.

தான் ஆசைப்பட்டு, ஏராளமான பொன் கொடுத்து வாங்கிய பெண் இப்படி இருக்கிறாளே என்று மன்னன் வருந்தினான்.

அவள் அரண்மனைக்கு வந்து ஒரு வருஷமான பின் ஒருநாள் மன்னன் அருகில் உட்கார்ந்து கொண்டு, "என் ராணியே! உன்மீது நான் வைத்திருக்கும் ஆசைக்கு அளவில்லை. உன்னை எனது ராணியாக்கி ஒரு வருஷமாகிவிட்டது. நான் உன்னை மணந்து கொண்டது பற்றி வருந்தவில்லை. நீ உன் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினால் போதும். அப்புறம் நான் இறந்துவிட்டால் கூடக் கவலையில்லை!" என்றான்.


இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண் சிரித்தாள். உடனே பேசவும் ஆரம்பித்தாள். தன்னை அன்புடன் ஆதரித்ததற்காக மன்னனுக்கு நன்றியும் செலுத்தினாள்.

"நீ ஏன் அடிமைப் பெண்ணானாய்? இத்தனை நாட்கள் வரை ஏன் பேசாம லிருந்தாய்?" என்று அரசன் கேட்டான்.

அடிமைப் பெண் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்:


"நான் அடிமைப் பெண்ணல்ல. நான் ஒரு இளவரசி. என் நாட்டையும் உறவினரையும் விட்டுப் பிரிந்ததனால் பேச மனமில்லாமல் இவ்வளவு நாட்களாகப் பேசாமலிருந்தேன். நான் ஒரு கடல் அரசனின் பெண். என்னைக் **கடல் அழகி** என்று அழைப்பார்கள். என் தந்தை இறந்துவிட்டார். அவர் உயிருடனிருக்கையில் கடலரசர்களுக்குள் மிகுந்த சக்தி வாய்ந்தவராயிருந்தார். அவர் இறக்கும் சமயத்தில் தனது ராஜ்யத்தை எனது அண்ணனிடமும், என் தாய் [illegible] ராணியிடமும் ஒப்புவித்து விட்டுப் போனார். நாங்கள் எல்லோரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம். இவ்வாறு இன்பமாக வாழ்ந்து வருகையில் ஒருநாள் திடீரென அண்டை நாட்டரசன் ஒருவன் தன் படையுடன் வந்து எங்கள் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். நாங்கள் சில பணியாட்களுடன் தப்பி ஓடி பத்திரமான இடத்தில் ஒளிந்து கொள்வதற்குத் தான் அவகாசம் இருந்தது. அங்கிருந்து கொண்டு எதிரிகளை விரட்ட என் அண்ணன் முயற்சி செய்து கொண்டிருந்தான். இந்தக் குழப்பத்தில் எனக்கு யாதொரு கஷ்டமும் ஏற்படலாகாது என்று அண்ணன் கவலை

பலே தமாஷ்!



கொண்டான். அதனால் என்னை உடனே யாருக்காவது கலியாணம் செய்து வைத்துவிடவேண்டும் என விரும்பினான். எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தினால் என்னை ஒரு கடலரசனுக்கு விவாகம் செய்து வைக்க முடியவில்லை. ஆகையினால் என்னை ஒரு புவியரசனுக்கு மணம் செய்து வைக்க விரும்பினான். இதற்கு நான் இணங்கவில்லை. கடல் மக்களாகிய நாங்கள் பூமியிலுள்ளவர்களை மணம் புரிந்து கொள்ளச் சம்மதிபோம். ஆகையினால் என் அண்ணன் மீது எனக்குக் கோபம் உண்டாயிற்று. நான் உடனே கடலிலிருந்து தாவி, சந்திரமண்டலத்தில் குதித்தேன். அங்கே என்னை ஏராளமான பணம் படைத்த ஒரு பிரபு சந்தித்தான். அவன் என்னைத் தனது மனைவியாக்கிக் கொள்ள முயற்சித்தான். அதற்கு நான் சம்மதிக்கவில்லை. அவன் என் மீது கோபம் கொண்டு என்னை ஒரு வியாபாரிக்கு விற்றான். அந்த வியாபாரியிடமிருந்துதான் நீங்கள் என்னை வாங்கினீர்கள். நீங்கள் என்னை மரியாதையுடன் நடத்தியிராவிட்டால் நான் இந்த ஜன்னலிலிருந்து கடலில் குதித்திருப்பேன். உங்களுடைய நல்ல குணத்தையும், அன்பையும் சோதனை செய்யவே நான் ஒரு வருஷம் உங்களுடன் பேசாமலிருந்தேன்." (தொடரும்)

எத்தனை சதுரங்கள்?



இந்தச் சதுரத்துக்குள்ளே எத்தனை சதுரங்கள் இருக்கின்றன? கண்டு பிடியுங்கள், பார்ப்போம்.

விடை அடுத்த இதழில்

சென்ற வாரத்தில் வெளியாகியிருந்த பழக் கணக்குக்கு விடை: 30.

அவள் பட்ட பாடு!

வெகு காலத்துக்கு முன்பு ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவள் ஒரு நிபந்தனை விதித்தாள். அதை எந்த அரசன் செய்து முடிக்கிறானோ அவனையே தான் மாலையிடப் போவதாக அறிவித்தாள். நிபந்தனை இதுதான்: அரசகுமாரி கொடுக்கும் தங்கப் பேலா நிறையப் பனி நீர் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்.

எத்தனையோ அரசர்கள் பனிநீரைக் கொண்டு வந்து விடுவதாக மார் தட்டிச் சென்றார்கள். ஆனால் அவர்கள் இரவில் சேகரித்த பனித்துளிகள் சூரியன் உதயமானதும் மாயமாய் மறைந்து விட்டன.

கடைசியில் ஒரு ராஜகுமாரன் வந்தான். ராஜகுமாரி அவனை அலட்சியமாய்ப் பார்த்துத் தன் நிபந்தனையைச் சொன்னாள். அவனும் பேலாவை வாங்கிச் சென்றான். ஒரு வாரம் கழித்துத் திரும்பி வந்தான்.

"பனிநீர் கொண்டு வந்தாயா?"

"ஆம், தேவி! ஆனால் அதைச் சேகரிக்க நான் பட்ட பாடு கொஞ்சமல்ல. உயர்ந்த செங்குத்தான மலைகளின் மீது தவழ்ந்து தவழ்ந்து ஏறினேன். அங்குள்ள பூக்களின் நுனியிலுள்ள பனித்துளிகளை ஒவ்வொன்றாகப் பேலாவில் சேகரித்தேன். பேலா நிரம்பவில்லை. பின்னும் எங்கெல்லாமோ சுற்றினேன், அலைந்தேன், திரிந்தேன். கடைசியில் எப்படியோ பேலா நிறையப் பனிநீர் கொண்டு வந்து விட்டேன்" என்று வெறும் பேலாவை அவளிடம் நீட்டினான் ராஜகுமாரன்.

தனக்காக அவன் பட்ட கஷ்ட நஷ்டங்களைக் கேட்டபோது ராஜகுமாரியின் கண்களில் நீர் ததும்பியது. கண்களில் ததும்பிய நீரோடு அவள் பேலாவைப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! வெறும் பேலா, பனிநீர் நிரம்பிய பேலாவாகக் காட்சி அளித்தது. ராஜகுமாரனின் யுக்தி பலித்தது. அவள் அவனுக்கே மாலையிட்டாள்! — ஜெயபால்

சித்திரலேகா

ஸ்ரீ பகவதி சரண் வர்மா

மொழிபெயர்ப்பு: ரா.வீ.



ஐந்தாம் அத்தியாயம்

அமைதி குலைந்தது!

அன்று பீஜகுப்தன் ஏதோ அலுவலாக வெளியே போயிருந்தான். என்ன அவசரக் காரியமோ, தெரியவில்லை. மாலைக் கதிரவன் மலைவாயில் விழுந்தும் கூட பீஜகுப்தன் திரும்பி வரவில்லை. குறித்த நேரத்தில் சித்திரலேகாவின் ரதம் 'டாண்' என்று பீஜகுப்தனின் மாளிகை வாசலிலே வந்து நின்றது. சித்திரலேகாவை எஜமானன் இல்லாத வீட்டில் வரவேற்று உபசரிக்கும்படியான நெருக்கடிக் கட்டம் ஸ்வேதாங்கனுக்கு ஏற்பட்டு விட்டது. அவன் அவளை வரவேற்று பீஜகுப்தனின் விடுதிக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தான்.

"எஜமானர் எங்கே?" என்று கேட்டாள் சித்திரலேகா.

இவ்வாறு ஒரு கடமையாகத் தன்னைப் பார்த்துக் கேட்டது ஸ்வேதாங்கனுக்குப் பிடிக்கவில்லை. அவள் கேள்வி கூரிய அம்பைப் போல அவனுடைய உள்ளத்திலே தைத்தது. வேறொரு சாதாரணப் பெண்மணி அதே கேள்வியைக் கேட்டிருந்தால் மிகவும் கடுமையாக அவன் பதில் சொல்லியிருப்பான். அல்லது அந்தக் கேள்வியை அவ்வளவு பொருட்படுத்திக் கூட இருக்கமாட்டான். தனது கேடுகெட்ட நிலைமையையும் மானங்கெட்ட பிழைப்பையும் முதன் முதலாக உணர்ந்த ஸ்வேதாங்கன் மிகவும் மனம் புழுங்கினான். ஆயினும் தன் மனோபாவத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல், "அம்மா! எஜமானர் ஏதோ அலுவலாக வெளியே போயிருக்கிறார்!" என்றான்.

"அவர் திரும்பி வர நேரம் ஆகுமோ?" என்று கேட்டாள் சித்திரலேகா.

"ஆகாது; வரும் நேரம்தான்!" என்று பதில் சொன்னான் ஸ்வேதாங்கன்.

"எனக்கு ரொம்பவும் தாகமாயிருக்கிறதே!" என்றாள் சித்திரலேகா.

அந்த மாளிகையிலே தனக்குள்ள அந்தஸ்து என்ன என்பதை உணர்ந்திருந்த ஸ்வேதாங்கன் உடனே எழுந்தான். அது மட்டும் அல்ல; "சித்திரலேகா உன் எஜமானியும் கூட!" என்று பீஜகுப்தன் சொன்ன சொல் வேறு அவனுடைய காதிலே ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. ஆகவே வாய் திறவாமல் எழுந்து சென்று தண்ணீர் கொண்டு வந்தான்.

தண்ணீரைக் கண்ணுற்ற சித்திரலேகா நகைத்தாள். "ஸ்வேதாங்கா! நீ இன்னும் அறியாப் பாலகனாகவே இருக்கிறாய்; சந்தேகமில்லை!" என்று சொன்னாள்.

"அம்மா! என்ன தவறு நேர்ந்து விட்டது?" என்று மிகவும் பயந்து போய்க் கேட்டான் ஸ்வேதாங்கன்.

இதைக் கேட்டதும் சித்திரலேகா வாய் விட்டே சிரித்து விட்டாள். "ஸ்வேதாங்கா! உனக்கு இன்னும் புரியவில்லையா? நான் சொல்லும் தாகம் இருக்கிறதே, அது இலேசில் தணியக்கூடியதல்ல; தீ தண்ணீரை வேண்டுவதில்லை. கொழுந்து விட்டு எரிய வேண்டுமென்றால் அதற்கு நெய் ஊற்ற வேண்டுமாக்கும்! இந்த வாழ்க்கை இருக்கிறதே, இது தணியாத் தாகத்துக்கு ஒப்பானது. இதைத் தணிக்க வேண்டுமென்றால், இந்த வாழ்க்கைக்கே ஒரு முடிவு கட்டினால்தான் முடியும். எனக்குத் தண்ணீர் வேண்டாம்; தேனினும் இனிய பானம்தான் வேண்டும்!" என்றாள்.

ஸ்வேதாங்கன் அப்படியே திகைத்துப் பிரமை பிடித்தவன் போலானான். அப்பப்பா! என்ன பயங்கரம்! தர்க்கத்தால் தகர்க்கமுடியாத பேச்சாக அல்லவா இருக்கிறது!

சுவேதாங்கனுக்கும் சிரிப்பு வந்து விட்டது. "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நான் பாடலிபுத்திரத்தின் அழகிற் சிறந்த பெண்மணியிடம் சிஷ்யனாக அமர்ந்து பாடம் கேட்க வேண்டும் என்றல்லவா தோன்றுகிறது!" என்றான் அவன்.

பிறகு பழரஸக் கோப்பையை எடுத்து வந்து சித்திரலேகாவிடம் கொடுத்தான் சுவேதாங்கன். சித்திரலேகா ஒரு வாய் பழ ரஸத்தை அருந்திய பின்னர் அந்தக் கோப்பையைச் சுவேதாங்கனுக்கு எதிரில் உள்ள முக்காலிமீது வைத்தாள்.

அப்பொழுது அவள் சுகாசனத்தில் வெகு ஒய்யாரமாகச் சாய்ந்திருந்தாள். அவளுடைய தலையை மூடியிருந்த மேலாக்கு நழுவித் தோளின் மீது விழுந்திருந்தது. அவளுடைய தலை மயிர் இருளைப் போல் 'கன்னங் கரேல்' என்று இருந்தது. அவளுடைய வகிடிலே வைத்துப் பின்னப்பட்டிருந்த முத்து மாலை மின்னலைப் போல் 'தகதக' வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் செய்து கொண்டிருந்த ஆடை அலங்காரத்திலேதான் என்ன கவர்ச்சி! — சுவேதாங்கன் இம்மாதிரி ஈடு இணையற்ற எழிலுருவத்தைக் கனவிலும் கண்டதில்லை; கற்பனை செய்தும் பார்த்ததில்லை.



சித்திரலேகாவின் மனமோகன உருவத்திலே உள்ளத்தை வெறி கொள்ளச் செய்யும் சக்தி நிரம்பியிருந்தது. அவளுடைய சிவந்த ரோஜாக் கன்னங்களை நாணத்தினால் உண்டான சிவப்பு இன்னும் அதிகமாக எடுத்துக் காட்டியது. அவளுடைய அதரங்களிலே மனோரம்யமான மந்தஹாஸம் தவழ்ந்தது. அவளுடைய பேசும் விழிகள் பல இன்பக் கதைகள் சொல்லிச் சிரித்தன.

சுவேதாங்கன் வாய்திறந்து பேசாமல் சித்திரலேகாவின் எழிலைப் பார்த்து ரசித்தவாறு அமர்ந்திருந்தான். "என், சுவேதாங்கா! நீ இன்னும் பானத்தைப் பருகக் காணோமே! நான் உனக்கு எதிரே அந்தக் கோப்பையை வைத்து வெகு நேரம் ஆகியும் உன் கைகள் அதைத் தொட்டு எடுக்கக் கூசுகின்றனவே! .... அதிருக்கட்டும். நான் உன்னிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீ அதற்குச் சரியான பதில் அளிப்பாய் என்றும் நம்புகிறேன்" என்றாள் சித்திரலேகா.

சுவேதாங்கன் பேசாமல் தலை கவிழ்ந்தான்.

"நீயோ பிரும்மசாரி. உன் குரு பானம் பருகக் கூடாது என்று உனக்குத் தடை விதித்திருப்பார் என்று எண்ணுகிறேன். நான் அதன் உண்மைக் காரணத்தை அறிந்து கொள்ளலாமா?" என்றாள் சித்திரலேகா.

சுவேதாங்கன் மெதுவான குரலில், "அம்மா! வாழ்க்கையிலே புலனடக்கம் தான் மிகவும் அத்யாவசியமான ஸ்தானத்தை வகிக்கிறது. பானமும் புலனடக்கமும் நேர் எதிரிடையானவைகள். அதனால் தான்......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

"புலனடக்கத்தின் நோக்கம் என்ன? எதற்காகப் புலன்களை அடக்க வேண்டும்?"

"சுகத்தையும் அமைதியையும் பெறுவது தான் அதன் முக்கிய நோக்கம்."

சித்திரலேகா பானத்தை எடுத்து அருந்தியவாறே, "அப்படியானால் வாழ்க்கையின் நோக்கம் என்ன?" என்று கேட்டாள்.

சித்திரலேகாவின் விழிகள் பான போதையிலே சற்றுச் சிவக்கத் தொடங்கின. அவளுடைய குரலிலே இன்னிசையின் இன்பத்தை நுகர்ந்தான் சுவேதாங்கன். அவளுடைய பேச்சிலே கவித்திறன் மிகுந்திருந்ததாகத் தோன்றியது அவனுக்கு. அவன் மெதுவான குரலில், "வாழ்க்கையின் நோக்கம்தானே? சுகத்தையும் சாந்தத்தையும் நாடுவதுதான்!" என்று பதில் அளித்தான்.

"சுவேதாங்கா! இங்கேதான் நீ தவறு இழைக்கிறாய்!" என்று ஆரம்பித்த சித்திரலேகா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சொல்லலானாள்:

"சுகம் என்பது திருப்தி; அமைதி என்பது சோம்பேறித்தனம். ஒரு மனிதன் ஒரு பொருளால் தனக்குச் சுகம் கிட்டக்கூடும் என்று எண்ணுவதாக வைத்துக்கொள். அவனுக்குத் தான் வேண்டிய பொருளும், விரும்பிய சுகமும் கிட்டிவிட்டால் அப்புறம் அவன் திருப்தி அடைய வேண்டியதுதானே? அமைதியை நாடும் மனிதனோ சோம்பேறியாகக் காலம் கழிக்க விரும்புகிறான். ஆகவேதான் சுகத்தைத் திருப்தி என்றும், அமைதியைச் சோம்பேறித்தனம் என்றும் சொல்லவேண்டியிருக்கிறது. வாழ்க்கை நீ நினைப்பதுபோல் இல்லை. சலியாத உழைப்புத்தான் வாழ்க்கை; தணியவே தணியாத தாகம்தான் வாழ்க்கை. வாழ்க்கை போராட்டங்கள் நிரம்பியது; பல மாறுதல்களுக்கும் உட்பட்டது. ஆகவே போராட்டங்களும் மாறுதல்களும் குடிகொண்டுள்ள வாழ்க்கையிலே, சுகத்துக்கும் அமைதிக்கும் இடம் ஏது?"


இவ்வாறு சொல்லியவாறே, சித்திரலேகா பானக் கோப்பையைச் சுவேதாங்கனின் வாயருகே கொண்டு போனாள்.

'அந்தக் கோப்பையை அப்பால் தள்ளிவிட்டால் என்ன?' என்று தோன்றிற்று சுவேதாங்கனுக்கு. ஆனால் சித்திரலேகாவின் சிரிக்கும் விழிகளில் என்னதான் மந்திரசக்தியிருந்ததோ, தெரியவில்லை. அவனால் சித்திரலேகாவையும் தடுக்க முடியவில்லை; தன்னையும் அடக்க முடியவில்லை. பானம் அவன் தொண்டைக்குள் இறங்கி விட்டது!

அதே சமயம் பின்னாலிருந்து சிரித்துக்கொண்டே வந்தான் பீஜகுப்தன். "பிரும்மசாரி! இன்று நாட்டிய ராணி உனக்கு உபதேசம் புரிந்திருக்கிறாள் அல்லவா? அதன்பொருட்டு நான் அவளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று சொன்னான்.

சுவேதாங்கன் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தான். பீஜகுப்தனின் சிரிப்பு அவனுக்குத் தான் செய்த தவறைக் குத்திக் காட்டியது. அவன் ஒரு முறை சித்திரலேகாவைப் பார்த்தான்; பிறகு பீஜகுப்தனை





யும் பார்த்தான். அதன் பின்னர் அவன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டான்.

பீஜகுப்தன் மாற்று உடை அணிவதற்காகத் தன் அறைக்குச் சென்றான். அவன் போகும்வரை சுவேதாங்கன் தொங்க விட்ட தலையைத் தூக்கவில்லை. பீஜகுப்தன் சென்றதும் சுவேதாங்கன் தலைநிமிர்ந்து சித்திரலேகாவைப் பார்த்து, "அம்மா! இன்று நீங்கள் என்னுடைய சாதனையை இப்படித் தவிடு பொடியாக்கி விட்டீர்களே, ஏன்? என் உள்ளத்திலே ஒரு தீயை வளர்த்து விட்டீர்களே, எதற்காக? என் அமைதி நிறைந்த வாழ்க்கையிலே, சுழற் காற்றைப் போலத் தாங்கள் இடைசென்று வந்து குதித்தது என்னத்திற்கு?" என்று கேட்டான். அது மட்டும் அல்ல; எல்லை மீறிய உணர்ச்சி வசப்பட்டுச் சித்திரலேகாவின் இரு கைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டான். அவன் கைகள் நடுங்கின; கால்கள் ஆடின; உதடுகள் துடித்தன; உடலே வெல வெலத்துப் போயிற்று.

சித்திரலேகா சிரித்துக் கொண்டே, "சுவேதாங்கா! நீ நினைப்பது தவறு. நீ எதைச் சாதனை என்று சொல்லுகிறாயோ, அது ஆத்மாவைப் பல துன்பங்களுக்கும் ஆளாக்கி அழிப்பதேயாகும். மயக்கம் என்பது வாழ்க்கைக்கு வேண்டிய பிரதானமான பொருள்களில் ஒன்று. நான் உன் உள்ளத்திலே தீயை வளர்த்து விட்டதாகக் குற்றம் சாட்டுகிறாயே, அதுவும் நியாயமில்லை. நான் உனக்கு வாழ்க்கையின் உண்மையான மகத்துவத்தைத்தான் காட்டினேன்!" என்றாள்.

இதைச் சொல்லி முடித்ததுதான் தாமதம்; சித்திரலேகாவின் சிரித்த முகபாவம் மிகவும் கம்பீரமாக மாறிவிட்டது. அவள் சுவேதாங்கனின் கைகளை உதறித் தள்ளி விட்டு, "சுவேதாங்கா! நான் உன் வாழ்க்கையில் பிரவேசிப்பதென்பது கனவிலும் நடக்கக் கூடாத காரியம். எது எப்படிப் போனாலும் என் மனப்போக்கை நான் நன்கு அறிவேன். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாமலா போகும்? நான் இந்த உலகத்திலே ஒரே ஒருவரைத்தான் காதலிக்கிறேன். அவர்தான் பீஜகுப்தன்!" என்றாள்.

சுவேதாங்கனுக்குப் பேய் அறைந்தது போலிருந்தது; முகம் ஒரேயடியாக வெளுத்து விட்டது. அவன் ஒரு நடன மாதிடம் தோற்றான். கல்வி கேள்விகளில், ஆழ்ந்த அறிவில், கடமையில், பெருந்தன்மையில் — எல்லாவற்றிலுமா அவன் இப்படி ஒரே யடியாய்த் தோற்க வேண்டும்?

அவன் மெள்ள வாசற்புறம் போகக் காலடி எடுத்து வைத்தபோது, "சுவேதாங்கா, சற்று இரு; உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். இங்கே வா!" என்றாள் சித்திரலேகா.

சுவேதாங்கன் திரும்பிப் பார்த்து, "அம்மா! இன்னும் என்னை நிந்திக்க வேண்டியது ஏதாவது பாக்கியிருக்கிறதா? எதற்காகக் கூப்பிடுகிறீர்கள்? என்

னுடைய ஆத்ம பலவீனத்துக்குத் தாங்கள் அளித்த வெகுமதி போதாதா? நீங்கள் என் எஜமானி மட்டும் அல்ல — இல்லை, இல்லை; மன்னிக்கணும். ஏதோ வாய் தவறி வந்து விட்டது. நீங்கள் என்னுடைய எஜமானி மட்டுமேதான். தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியது அடியேனுடைய கடமை. என்ன உத்தரவு, அம்மா?" என்று கேட்டான். அப்பொழுது சுவேதாங்கனின் கண்களிலே நீர் முட்டி நின்றது.

அறியாப் பாலகனுகிய சுவேதாங்கனுடைய சொற்கள் சித்திரலேகாவின் உள்ளத்தை என்னவோ செய்தன. அவள் "சுவேதாங்கா! நான் ஏதோ தெரியாமல் சொல்லி விட்டேன். உன்மீது எனக்கு அன்பு இல்லாமற் போகவில்லை. நீ என் கூடப் பிறந்த சகோதரனைப் போல. உன் வருத்தத்தைக் காண எனக்கும் வருத்தம் உண்டாகிறது. நான் அறியாமல் செய்த பிழையை மன்னித்தருளுவாயாக!" என்று வேண்டினுள்.

சித்திரலேகா இவ்விதம் மன்னிப்புக் கோரிக் கெஞ்சுவதைக் கண்டதும், சுவேதாங்கனுடைய கோபமும் தாபமும் இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்து விட்டன. சித்திரலேகா அவனுடைய மனக் கண்களுக் கெதிரே ஒரு கடனமாதாகத் தோற்றமளிக்கவில்லை; சாக்ஷாத் தேவியாகவே தோற்றமளித்தாள்.

சுவேதாங்கன் மிகவும் அடக்கமாக, "அம்மா! தாங்கள் என்னிடம் மன்னிப்புக் கோருவது சிறிதும் நன்றாயில்லை. தவறு இழைத்தவன் நான் அல்லவா? தாங்கள் தண்டிப்பதற்குப் பதிலாக என்மீது கருணையல்லவா காட்டி யிருக்கிறீர்கள்! அறியாமை என்னும் சாகரத்தில் முழுகித் தத்தளித்துக் கொண்டிருந்த என்னைக் கரையேற்றிக் காப்பாற்றிய தங்களுடைய கருணையின் பெருமையை எவ்வாறு எடுத்துரைப்பேன்! நீங்கள்தான் என்னை மன்னித்தருள வேண்டும், அம்மா!" என்றான்.

அதற்குப் பிறகு அவன் அங்கே நிற்கவில்லை; அடுத்த கணமே அந்த அறையினின்றும் வெளியேறினன். சித்திரலேகா வைத்த கண் வாங்காமல் சுவேதாங்கன் போவதைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். 'அறியாமையினுல் எதும் அறியாத பாலகன் ஒருவனை நமது யௌவன வெறிக்கு இரையாக்கத் துணிந்தோமே!' என்ற எண்ணம் எழுந்து அவளுடைய மனத்தை மிகவும் வருத்தியது. (தொடரும்)



"நீங்கள் ஏன் சதா எழுதிக்கொண்டே இருக்கிறீர்கள்?"

"நான் ஒரு கதாசிரியன்; காவல் எழுதிக்கொண் டிருக்கிறேன்."

"அட பாவமே! இப்படிக் கஷ்டப்பட்டு காவல் எழுதுவானேன்? காசை வீசி எறிந்தால் வேண்டிய காவல் வாங்கலாமே!"

★

நாவலரின் குமாஸ்தா (குடியானவனைப் பார்த்து):—உன்னுடைய சுவர் ரொம்ப கனமா யிருக்கிறது; கூட ஒரு அணா ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்.

குடியானவன்:—என்னங்க! ஒரு அணா ஸ்டாம்பு கூட ஒட்டினுல் கனமும் கூடிப் போகாதுங்களா?

★

முதல் வியாபாரி:—என்னங்க! வியாபாரமெல்லாம் எப்படி இருக்கிறது?

இரண்டாவது வியாபாரி:—போன வருஷத்துக்கு இந்த வருஷம் தேவலை; பத்தாயிரம் ரூபாய் லாபம் கிடைத்தது!

முதல் வியாபாரி (ஆச்சரியத்துடன்):—என்ன! எல்லாரும் ஏகப்பட்ட நஷ்டம் என்று சொன்னுங்க; உங்களுக்கு மாத்திரம் அவ்வளவு லாபம் வந்ததா?

இரண்டாவது வியாபாரி:— அதில்லீங்க; போன வருஷம் இருபதினுயிரம் ரூபாய் நஷ்டம். இந்த வருஷம் பத்தாயிரம் ரூபாய் தான் நஷ்டம். பாக்கி ரூபாய் பத்தாயிரம் இந்த வருஷம் லாபம்தானே!

★

சார்ஜண்ட்:—ஓய், மோட்டாரை நிறுத்தும்படி கத்திக்கொண் டிருக்கும்போதே நீர் வேகமாய் விட்டுக்கொண்டு போய்விட்டீரே!

டிரைவர்:—நீங்கள் கூப்பிட்டதை நான் கவனிக்கவில்லை, ஸார்! மன்னிக்க வேண்டும். நான் யார் மேலேயோ மோட்டாரை ஏற்றி, அவர்தான் கத்துகிருரோ என்று நினைத்துவிட்டேன்!



ஸோமாஸ்

நேசம் மறந்த நெஞ்சம்

"உங்கள் மாமா பெண் விசாலம் இந்த ஊருக்கே வந்து விட்டாள். அவள் புருஷனுக்கு இங்கே மாற்றலாகி விட்டதாம். இன்று மத்தியானம் இங்கே வந்திருந்தாள். ரொம்ப நல்லமாதிரி. ஐந்து வருஷங்களாக நீங்கள் அவளை எட்டிக் கூடப் பார்க்கிறதில்லையாம். சொல்லிச் சொல்லி ரொம்ப வருத்தப்பட்டாள். 'அத்தான் பெயரைச் சொல்லி விசாரித்துக் கொண்டு வந்தேன். என் கலியாணத்தின்போது அத்தான் வராமல் ஏமாற்றிவிட்டார். என்மேல் அவருக்கென்ன கோபம்? என்னை மறந்தே போய்விட்டாரே! சண்டை பிடிக்கலாம் என்றுதான் வந்தேன்!' என்று சொன்னாள்" என்று லக்ஷ்மி மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே போனாள்.

"சென்னையில் எங்கே இருக்கிறாள்? வீட்டு விலாசம் கொடுத்திருக்கிறாளா?" என்று கேட்டேன்.

"விலாசம் கொடுத்திருக்கிறாள். நான் தோசை, காப்பி கொடுத்து உபசாரம் செய்தேன். ஆனமட்டும் நீங்கள் வந்த பிறகு போகலாம் என்று சொன்னேன். 'நாழியாகி விட்டது. அவர் வந்துவிடுவார். அத்தானிடம் நான் வந்திருந்தேன் என்று சொல்லுங்கள்; போதும். என்னோடு படித்த பழைய அத்தானாக இருந்தால் என்னைப் பார்க்க உடனே ஓடி வந்துவிடுவார்!' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்!" என்று லக்ஷ்மி சொன்னது கனவில் கேட்பது போல் இருந்தது.

ஊஞ்சலில் ஆடியபடியே, என் வாழ்க்கைப் பாதையில் கனவேகமாகப் பின்னோக்கிச் செல்லும் மனக் குதிரையைப் பிடித்துக் கட்டிப் போட முடியாமல் அயர்வுடன் இருந்தேன். என் அயர்வைப் பயன்படுத்திக் கொண்டது மனக் குதிரை. தாவித் தாவி நாலுகால் பாய்ச்சலில் ஓடிப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் சென்றது.

* * *

அப்போது எனக்கு வயது பத்து அல்லது பன்னிரண்டு இருக்கும். என் தகப்பனார் மூன்று பெண்களுக்கு விவாகம் செய்து அலுத்துப் போனவர். நான் அவரது வயோதிகப் பருவத்தில் பிறந்தவன். 'கடைக் குட்டி! என்னைப் படிக்க வைப்பதில் அப்பாவுக்கு ரொம்ப சிரத்தையும் ஆர்வமும் இருந்தாலும் பொருளாதார நெருக்கடி அவரது விருப்பத்தை நிறைவேற வொட்டாமல் செய்தது.

அப்போது என் அறிவுக் கண்ணைத் திறந்து வைக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டவர் என் மாமாதான். சின்ன வயதிலேயே நான் சென்னைப்பட்டணத்திலிருந்து என் மாமா வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். நல்ல பட்டிக்காட்டிலிருந்து வந்த என்னை மாமா அன்போடு வரவேற்றுப் பள்ளிக்கூடத்திலும் சேர்த்தார்.

எனக்குப் பட்டணவாசமே ஆச்சரியமாயிருந்தது. கடற்கரையும் லைட்ஹௌஸும் சென்ட்ரல் ஸ்டேஷனும் என்

உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டன. மாமா சென்னையில் பிரபல வக்கீல். எங்கு வேண்டுமானாலும் போய்வரக் கார் இருந்தது. இதைத் தவிர ஜோரான ஒரு குதிரை வண்டியும் இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக என்னோடு விளையாட, என் வாழ்க்கையை ஒளிபெறச் செய்ய, விசாலமும் இருந்தாள். ஆம், அவள் என் மாமாவின் பெண்.

விசாலம் நல்ல அழகி. கலகல வென்று களங்கமில்லாமல் பேசுவாள். அவள் அடிக்கடி உடுத்தும் கத்திரிப்பூக் கலர்ப் பாவாடையையும் மயில் கழுத்தைப் போன்ற வர்ண விசித்திரம் அமைந்த ஜாக்கெட்டையும் என்னால் இன்னும் மறக்கவே முடியவில்லை. விசாலம் என்ற பெயருக்கேற்ப அவள் நயனங்களும் விசாலமாகவே இருந்தன.

என் மாமாவின் பங்களா அடையாற்றில் அற்புதமாக அமைந்திருந்தது. பங்களாவைச் சுற்றி மாமரங்களும் புஷ்பச் செடிகளும் அழகாக வளர்ந்திருந்தன. காலை வேளையில் மல்லிகையும் முல்லையும் ரோஜாவும் மலர்ந்து கம்மென்று மணம் கமழும். படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே நான் மலர் மணத்தை நுகர்ந்து கொண்டே மிகவும் உற்சாகமாக எழுந்திருப்பேன். பல் தேய்த்து விட்டு விசாலமும் நானும் கை கோத்துக் கொண்டு உல்லாஸமாகத் தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வருவோம். அதற்குள் காப்பி தயாராக இருக்கும். காப்பி சாப்பிட்டுவிட்டு அன்றைய பள்ளிக்கூடப் பாடங்களை இருவரும் சேர்ந்து படிப்போம். பிறகு ஸ்நானம், சாப்பாடு. சாப்பிட்டவுடன் நானும் விசாலமும் வண்டியில் ஏறிக்கொண்டு பள்ளிக்கூடம் போவோம். இவையெல்லாம் ஒரு நாளைப் போலவே நிகழ்ந்து கொண்டிருந்தன. என் வீட்டில் நான் வறுமையில் உழன்று வந்ததெல்லாம் கனவோ என்று தோன்ற ஆரம்பித்தது. மாமாவும் மாமியும் என்னிடம் மிகவும் அன்போடு நடந்து கொண்டனர்.

என்னை அன்போடு ஆதரிப்பதற்கு மாமாவையும் மாமியையும் படைத்த ஆண்டவன், கூடவே விசாலத்தையும் என்னிடம் அளவு கடந்த பிரேமையுள்ளவளாகச் சிருஷ்டித்திருந்ததைத்தான் என் அதிர்ஷ்டம் என்று சொல்ல வேண்டும்.

சனி, ஞாயிறுகளில் சினிமா, கச்சேரி, நாடகம் என்று இப்படி ஏதாவது ஒரு பொழுது போக்குக்கு மாமா ஏற்பாடு செய்வார். மாலை நேரங்களில் அனேகமாகத் தினந்தோறும் கடற்கரைக்குச் செல்லுவோம். கடற்கரைக்குப் போவதென்றால் எனக்கு உற்சாகம் கரை புரண்டு பொங்கும்.

முதன் முதலில் நான் கடற்கரைக்குச் சென்றபோது நான் அடைந்த அதிசயத்தையும் வியப்பையும் சொல்லி முடியாது. இப்பொழுது நினைத்தால் கூட எனக்கு ஒரே அதிசயமாயிருக்கிறது.

அன்றைக்கு மாமா, மாமி எல்லோரும் கடற்கரைக்குக் கிளம்பினார்கள். விசாலம் என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, அந்த மனோகரமான காற்றில் மணலில் நடந்து செல்லும்போது என் மனம் என்னை விட்டு எங்கேயோ போய் விட்டது.

மாமா என்னுடைய ஒரு கையைப் பிடித்துக் கொண்டார். விசாலம் இன்னொரு கையைப் பிடித்துக் கொண்டாள். 'ஓ' வென்ற இரைச்சலுடன் சுருண்டு சுருண்டு எழும்பி வரும் வெண்ணிற அலைகள் எங்கள் கால்களை நனைத்தன.

"சமுத்திரம் என்றால் நான் என்னவோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஒரே ஜலமாக அல்லவா இருக்கிறது! ஏன் விசாலம், இப்படி எப்போதும் அலை வீசிக் கொண்டே இருக்குமா?" என்று கேட்டுவிட்டு நான் அவளிடம் பட்டபாடு! தினம் ஒரு தடவையாவது அதைச் சொல்லிச் சிரிக்காவிட்டால் அவளுக்குப் பொழுது போகாது. முதல் முதலில் விசாலம் அதற்காக என்னைப் பார்த்துச் சிரித்தபோது அவளது ரோஜாக் கன்னங்களைப் பிடித்துக் கிள்ளினால் என்ன என்று எனக்குத் தோன்றியது.



ஒரு நாள் நானும் விசாலமும் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டோம். அன்றைக்கும் நான் வழக்கம் போலத் தாமதமாகப் புறப்பட்டேன். விசாலத்தின்

வாய்க்குப் பயந்து கொண்டு அவசரம் அவசரமாக உடை உடுத்திக் கொண்டு புறப்பட்டேன். வண்டியில் ஏறப் போன சமயம் விசாலம் வண்டியருகில் நின்று கொண்டு, "அத்தான், நீ சுத்தப் பட்டிக்காடு என்பது சரியாயிருக்கிறது. சலவை செய்த ஷர்ட் போட்டுக் கொண்டாயே, அதற்குத் தகுந்த வேஷ்டியை உடுத்த வேண்டாமா? இந்தக் காஷாயத்தை எங்கே தேடிப் பிடித்தாய்!" என்று சொல்லிக் கலகல வென்று சிரித்தாள்.

என்னை வெட்கம் பிடுங்கித் தின்றது. இருந்தாலும் அவளுக்கு எதிரில் என்னைச் சமாளித்துக் கொள்ள வேண்டும் அல்லவா? அதற்காக "இல்லை, விசாலம்! உன்னைப் பார்த்துக் கொண்டே டிரஸ் பண்ணிக் கொண்டேன். அதனால்தான் கவனிக்கவில்லை. நீதான் அம்மங்காள் இருக்கிறாயே! சொல்லுவாய் என்று நினைத்தேன்!" என்று ஒரு போடு போட்டேன்.

ஆனால் அதைக் கேட்டதும் விசாலம் முகத்தை ஒருமாதிரி வைத்துக்கொண்டு, "ஆகா! இந்தக் குறும்புப் பேச்சுக் கெல்லாம் குறைவில்லை. படிக்கிற பிள்ளை நீ. படிப்பை அல்லவா கவனிக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு என்னை ஏன் கவனிக்கிறாய்?" என்று வெடுக்கென்று கேட்டுவிட்டு வண்டியில் ஏறிக் கொண்டாள்.

இது எனக்கு என்னவோ போலிருந்தது. இருவரும் வழக்கத்துக்கு விரோதமாக மௌன விரதம் பூண்டு வண்டியில் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தோம். அன்று மாலை வீட்டுக்குத் திரும்பும் போதும் நான் அவளோடு பேசவில்லை.

பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் காப்பி சாப்பிட்டு விட்டுத் தோட்டத்து மேடையில் வந்து உட்கார்ந்தேன். விசாலம் முதலில் வரவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் வந்தாள். அவள் முகம் சிவந்திருந்தது.

"அத்தான், இன்று காலையில் நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. நீ அதற்காக என்னோடு எப்போதுமே பேசாமல் இருந்து விடுவாயா?" என்று கெஞ்சும் குரலில் கேட்டாள் விசாலம். நீண்ட அகன்ற அவளது விழிகளில் நீர் ததும்பியது. என்னால் அதைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

உடனே எழுந்து விசாலத்தின் தளிர்க் கரங்களைப் பிடித்துக் கொண்டேன். "விசாலம், தப்பு என் மேல்தான். நான் தான் நீ சொன்னதை விளையாட்டாக எடுத்துக் கொள்ளாமல் வீணாகக் கோபித்துக் கொண்டு உன்னோடு பேசாமல் இருந்தேன். என்னை மன்னித்துவிடு. இனிமேல் நீ உன் அத்தானை என்ன வேண்டுமானாலும் பரிகாசம் செய்யலாம்!" என்று கூறி அவள் கண்களில் பெருகி வந்த கண்ணீரைத் துடைத்தேன்.

2

காலம் வேகமாகச் சென்றது. நான் பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டு கலாசாலையில் சேர்ந்தேன். இந்த இரண்டு மூன்று வருஷங்களில் நான் முற்றிலும் மாறி விட்டேன். என்னைப் போன்ற நவ நாகரிக யுவன் இல்லை என்று எல்லோரும் சொல்லும்படி நடந்து கொண்டேன்.

விசாலம் மாத்திரம் மாறாமல் இருந்தாளா? அது எப்படி முடியும்? இப்பொழுது அவள் பார்வையிலும் புன்சிரிப்பிலும் அர்த்தம் இருந்தது. நானும் விசாலமும் ஐந்து வருஷங்களுக்கு முன் ஆசையோடு நட்டு வைத்த ஒட்டு மாங்கன்று பெரிய மரமாக வளர்ந்திருந்தது. ஒரு நாள் அந்த மாமரத்தில் குப்பென்று தங்க நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கின. உடனே அந்த மாமரத்துக்குக் கட்டுக் காவல் அதிகமாயிற்று. அந்த மாமரத்தைப் பார்த்தால் எனக்கு விசாலத்தைப் பார்ப்பது போலவே இருக்கும். அவளும் அப்படித்தான் பொன்னிறச் சோபையை அடைந்திருந்தாள். அதுமட்டும் அல்ல; அவளுக்கும் இப்போது கட்டுக் காவல் அதிகமாயிற்று. கலகலவென்று சதா சிரித்த வண்ணம் என்னுடன் கைகோத்துக் கொண்டு சுற்றிய அந்த விசாலம் எங்கே? தூரத்தில் இருந்தபடியே இலேசாகப் புன்சிரிப்பு ஒன்றையே வீசும் இந்த விசாலம் எங்கே?

என் கலாசாலைப் படிப்பு முடிந்தது. பி. ஏ., பாஸ் செய்ததும் நானாகவே என் படிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன். இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. பரம ஏழையாகிய நான் மாமாவை என் படிப்பு சம்பந்தமாக மேலும் மேலும் தொந்தரவு செய்ய விரும்பாதது ஒன்று. விசாலத்தைப் பார்த்துப் பார்த்து மன வேதனைப்பட விரும்பாதது மற்றொன்று.

விசாலத்தை நான் கரம் பற்ற நினைப்பது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட மாதிரிதான் என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபடியினால் மெதுவாக என் மாமாவிடம் சொல்லி ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொண்டேன். மாமாவின் தயவில் நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாகப் புதுடில்லியில் உத்தியோகம் கிடைத்தது. என் டில்லிப் பிர

யாணத்தில் மிக மிகச் சந்தோஷப் பட்டவன் என் மாமிதான். விசாலமோ கண்ணீருக்கும் விம்மலுக்கும் இடையே என்னை அனுப்பி வைத்தாள்.

புதுடில்லியில் ஐந்து வருஷம் இருந்தேன். விசாலத்தின் கல்யாண அழைப்பு வந்தது. மாப்பிள்ளைக்குப் பம்பாயில் பெரிய உத்தியோகம். நல்ல பணக்கார இடம். எல்லாம் மாமா எழுதியிருந்தார். ஏனோ எனக்கு அந்த விவாகத்துக்குப் போகவேண்டும் என்று நினைத்தாலே உடம்பு முழுவதும் நடுங்கியது.

பிறகு என் தகப்பனார் லக்ஷ்மியை எனக்கு நிச்சயம் செய்து தந்தி அடித்தார். மறு வார்த்தை பேசாமல் உடனே புறப்பட்டு வந்து லக்ஷ்மியை விவாகம் செய்து கொண்டேன். உத்தியோகத்தையும் சென்னைக்கே மாற்றிக் கொண்டேன். பிதுர் வாக்ய பரிபாலனத்தில் எனக்கு இருந்த சிரத்தையை வந்தவர் போனவர்களிடமெல்லாம் அப்பா சொல்லிச் சொல்லி ஆனந்தப்பட்டுக் கொண்டார். முறிந்துபோன என் மனத்தில் இது சந்தோஷத்தையே உண்டாக்கியது. போகட்டும்; என் தகப்பனாருக்காவது என் கல்யாணத்தில் திருப்தி இருக்கிறதே!

* * *

இன்று, ஆறு வருஷங்களுக்குப் பிறகு விசாலம் தன் கணவனுடன் சென்னைக்கே வந்து விட்டாள் என்னும் செய்தி, என் உள்ளத்தில் நீறு பூத்துக் கிடந்த நெருப்பை ஊதி மீண்டும் கனிய வைத்தது. எப்படியும் விசாலத்தைப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

ஆறு வருஷங்களுக்குப் பிறகு எங்கள் சந்திப்பு எப்படியிருக்கும்? கருகிப்போன ஆசையுடன் விசாலம் எப்படித் தோற்றமளிப்பாள்? ஏற்கெனவே தன் உள்ளத்தை எனக்குப் பறி கொடுத்து விட்ட அவள் இப்போது வெளிச்சங் குன்றிய விளக்கைப் போல இருப்பாளோ?

இம்மாதிரிப் பல எண்ணக் குவியல்களுக்கிடையே என் உள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது.

3

மறுநாள் நான் விசாலத்தின் வீட்டுக்குச் சென்றேன். உணர்ச்சிப் பெருக்கில் விசாலம் எப்படி நடந்து கொள்ளுவாளோ என்ற எண்ணத்தினால் ஆபீஸ் நாளாகப் பார்த்து அவள் கணவன் வீட்டில் இல்லாத நாளில் போனேன்.

என்னைப் பார்த்ததும் விசாலம் அடையாளம் புரிந்து கொண்டு "வாருங்கள், அத்தான்! ஒரு மாசமாக, இந்த ஊருக்கு வந்ததிலிருந்து உங்களைப் பற்றிய பேச்சுத்தான். 'அவர்' நேற்றைக்குக் கூடச் சொன்னார். 'என்ன, உன் அத்தானைப் பற்றிப் பிரமாதமாகச் சொன்னாயே; நீ அவர் வீட்டுக்குப் போய் அழைத்த பின்பும் ஆளைக் காணோமே!' என்றார். நீங்கள் அவர் இருக்கும்போது லக்ஷ்மியுடன் வந்திருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும்!" என்று களங்கமற்ற புன்னகையுடன் சொன்னாள்.



பையன்:—எனக்கு ஒரு வாணம் கூடக் கொடுக்காமல் எல்லா வாணங்களையும் தாத்தாவே கொளுத்துகிறார், பாட்டி.... இ...ச......உ......ஊ...!

அவள் பேச்சில் அன்பும் மரியாதையும் தன்னடக்கமும் கலந்திருந்தன. நான் முதலில் நினைத்தமாதிரி தாபமோ, ஏக்கமோ, அல்லது ஏமாற்றமோ ஒன்றும் அவள் முகத்தில் காணப்படவில்லை.

நான் பேச்சை மாற்றுவதற்காக, "விசாலம் உன்னையும் உன் கணவனையும் என் வீட்டுக்கு அழைத்து ஒரு விருந்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தேன். லக்ஷ்மியையும் அழைத்து வந்து இந்த ஞாயிற்றுக்கிழமை பன்று அவரையும் உன்னையும் அழைக்கலாம் என்று உத்தேசம். முன்னதாகவே உன்னைப் பார்த்துச் சொல்லி விட்டுப் போகலாம் என்று ஆபீஸிலேயிருந்து சீக்கிரமாக வந்தேன். நீ அவரிடம் சொல்லு. ஞாயிற்றுக்கிழமை காலையில் அவசியம் நானும் லக்ஷ்மியும் வருகிறோம்!" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன்.

தேவியை ஆலயத்தில் தரிசித்த பின்பு பரம பக்தனது உள்ளம் எத்தனை சாந்தியுடன் இருக்குமோ அத்தனை சாந்தியுடன் இருந்தது என் உள்ளம்.

வட்ட மேஜை

காது கொடுங்கள்!

நிதி மந்திரி கனம் கோபால ரெட்டிகாரு போகிற ஊரில் எல்லாம் "வரி போடாமல் சர்க்கார் நடத்த முடியுமா? முடியாது. அதனால்தான் வரி போடுகிறோம்" என்ற ஒரே பாடத்தைச் சொல்லிக் கொண்டு வருகிறார். ஏதோ "வரியே போடாமல் நீங்கள் சர்க்காரை நடத்த வேண்டும்" என்று மக்கள் சொல்வதாக நினைத்துக்கொண்டு அவர் அவ்விதம் பேசுகிறார். இந்த சர்க்கார்,—சுதந்திரம் வந்த பிறகு ஏற்பட்ட காங்கிரஸ் சர்க்கார் சரிவர திறம்பட நடக்க வேண்டுமென்பதில் கனம் கோபால ரெட்டிகாருவை விடப் பொது மக்களுக்கு அதிக அக்கறை உண்டு. இந்த சர்க்காருக்கு வரி கொடுக்க யாரும் தயங்கவில்லை. "நிறையக் கொடுக்கிறோம்; எங்கள் சக்தியுள்ள வரை கொடுக்கிறோம்; ஆனால் வரி போடுவதன் அவசியத்தையும், தங்கள் வரவு செலவுத் திட்டத்தையும் ஒழுங்காக விளங்கும்படி ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்றுதான் கேட்கிறார்கள். மத்திய சர்க்கார் ஒதுக்கிய தொகையைத் திட்டம் போட்டு அவர்களிடம் சமர்ப்பித்துப் பெறுதற்குக் காரணம் முதலில் சொல்லட்டும். இரண்டாவது ஒவ்வொரு வருஷமும் பட்ஜட்டில் துண்டு விழும் என்று சொல்லி, அதற்காகப் புது வரியைப் போட்டு, பிறகு கோடிக்கணக்கில் உபரி காண்பித்து அதை ரிசர்வ் நிதியில் சேர்ப்பானேன் என்பதையும் விளக்கமாய்ச் சொல்லட்டும். ஏற்கனவே உள்ள விற்பனை வரியும் தமாஷா வரியும் சரியான முறையிலும் சர்க்காருக்கு வரவேண்டிய அளவுக்கும் வசூல் ஆகிறதா? அப்படியில்லாவிட்டால் சம்பந்தப்பட்ட இலாக்காக்களைச் சீர்திருத்தி சரிவர வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளட்டும். இதையெல்லாம் விட்டுவிட்டு, வாழைக்காய்க்கும், மிளகாய்க்கும், பாட்டிமார் தட்டும் வரட்டிகளுக்கும் வரி போட்டுக் கொண்டிருந்தால், மக்கள் இந்த சர்க்காரைச் சபிக்கத்தான் செய்வார்கள்.

தொளசம்பட்டி
12—10—49

டி. வி. ராமசுவாமி

●

★ பாட புத்தகக் கொடுமை

சென்ற வாரக் 'கல்கி'யில் 'பாட புத்தகங்கள் கூடாது' என்னும் தலைப்பில் பின் வரும் காந்திஜியின் உரை காணப்படுகிறது. "பிள்ளைகளுக்கு உண்மையான பாட புத்தகம் உபாத்தியாயரே யாகும். மாணவர்கள் மீது அநாவசியமாகப் புத்தகங்களைச் சுமத்தக் கூடாது. அது அநாவசியம். நான் படித்த காலத்தில் என் உபாத்தியாயர்கள் புத்தகத்திலிருந்து எதுவும் கற்பித்ததாக எனக்கு ஞாபகமில்லை. அவர்கள் வாய்மொழியாகக் கற்றுக் கொடுத்தவை இன்னும் எனக்குத் தெளிவாக நினைவில் இருக்கின்றன." இவை மிகவும் அனுபவம் மிகுந்த மொழிகள். பாட புத்தகங்கள் பிள்ளைகளுக்கு அவசியமில்லை என்ற காந்திஜியின் கொள்கைக்கும், தற்காலம் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் பாடம் கற்பிக்கும் முறைக்கும் மலைக்கும் மடுவுக்கும் மிடையேயுள்ள வித்தியாசமிருக்கிறது.

ஒன்பது அல்லது பத்து வயது நிரம்பிய பிள்ளைகள் இரண்டாவது பாரத்தில் படிக்கும் தமிழ்ப் புத்தகத்தின் நடையைப் பார்க்கவும். அப் புத்தகத்திலிருந்து சிலபகுதிகளைக் கீழே உதாரணத்துக்காகக் கொடுத்திருக்கிறேன்.

"ஒருடலின் வெவ்வேறு உருவமும் பெயரும் கொண்ட பல் வேறு உறுப்புக்களிருப்பினும் அவை தனித் தனியே வெவ்வேறு செயல்களைச் செய்து உதவினும், அவை யாவும் சேர்ந்து உடலாவதை நாம் உணர்ந்திருக்கிறோமல்லவா? கையும் காலும் தத்தம் செயல்களைக் குறித்து வழக்கிடுகின்றனவோ? இன்றே! அவற்றுள் ஒன்று மற்றொன்றை உட்படுத்தி ஆளத் தொடங்குகின்றதோ? அவ்வாறிருக்க உலகமாகிய ஒருடலின் பல பகுதிகளாக விருக்கும் பல்வேறு நாடுகளும் ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் வாழாமை ஏனோ?......"

"நம் மாகாணத்தில் 5000-க்கு மேல் ஜனத் தொகையுள்ள கிராமங்கள் 35837. அவற்றில் 1941-ம் ஆண்டு கணக்கின்படி 10792 சங்கங்கள் வேலைசெய்து வந்தன...... சென்னையில் ஒரு மாகாணக் கூட்டுறவு பாங்கையும், அதன் பார்வையின் கீழ் பல ஜில்லா பாங்குகளையும் உண்டாக்கி கிராமச் சங்கங்களுக்குப் பொருளுதவி செய்ய ஏற்பாடு செய்தனர். கிராமச் சங்கங்கள் ஜில்லா பாங்கோடும், ஜில்லா சங்கங்கள் மாகாண பாங்கோடும் பிணைக்கப்பட்டிருப்பதால், இங்கு ஒருவிதமான சமஷ்டி முறை நடந்து வருகிறது என்னலாம்......"

மேற்கண்ட வாறுள்ள பாடங்களிலிருந்து ஒன்பது, பத்து வயது இளம் பிள்ளைகள் என்ன கற்றறிய முடியும்? இப் புத்தகத்தை எழுதியவருக்கும் அப் புத்தகத்தைப் பாடபுத்தகமாக வைத்த பள்ளிக்கூட அதிகாரிகளுக்கும் சிறு பிள்ளைகள் மீது 'ஆறாத' சினம் இருந்திருக்க வேண்டும். மேற்கூறிய பகுதிகள் சிலவற்றைப் படித்து "அப்படியென்றால் அர்த்தமென்ன?" என்று கேட்டான் எங்கள் வீட்டுப் பையன். அவன் தகப்பனார் அவனுக்குப் புரியுமாறு விளக்கிச் சொல்ல முடியாமல் "உன் உபாத்தியாயரைக் கேள், போடா!" என்றார். "இல்லேப்பா, வாத்தியாரைக் கேட்டேன், 'வீட்டிலே உன் அப்பாவைக் கேட்டுத் தெரிஞ்சுக்கோ' என்று சொல்லிவிட்டாரப்பா" என்றான் சிறுவன். இது கற்பனையல்ல — உண்மை. இந்நிலையில் பிள்ளைகள் எவ்வாறு பாடங்களைக் கற்றறிய முடியும்?

திருவல்லிக்கேணி
5—10—49

பார்த்தசாரதி

●

விவசாயியும் வியாபாரியும்

இந்தக் காலத்தில் எந்த விவசாயியும், சாதாரண மிராசுதாரும் நெல்லைக் கையில் வைத்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். ஏனெனில் கூலியிலிருந்து மாடுகள் தீவனமான பருத்தி, பிண்ணாக்கு, தவிடு வரையில் ஒவ்வொரு சாமானும் அளவுக்கு மீறி விலை ஏறியிருக்கிறது. பெரும் பணத்தை ரொக்கமாக வைத்திருக்கும் மிராசுதார்களைத் தவிர மற்ற சாதாரண சிறிய மிராசுதார்களும், விவ

சாயிகளும் குறுவை நடவு ஆகிக் கொண்டிருக்கும் பொழுதே வியாபாரிகளிடம் சென்று குறுவை நெல்லுக்கு அட்வான்ஸ் என்று சொல்லி முன் பணமாகப் பெற்றுக் கொண்டு தான் சாகுபடிக்கு ஆக வேண்டிய செலவுகளைச் செய்து கொள்ளுகிறார்கள். அப்படியிருக்க ஒரு சாதாரண விவசாயியோ அல்லது மிராசுதாரோ நெல்லைப் போடாமல் பதுக்கி வைக்கிறார்கள் என்று சொன்னால் அதை விட அபத்தமானது வேறு ஒன்றுமில்லை. ஒருவேளை கையில் நிறையப் பணம் வைத்திருக்கும் பெரிய மிராசுதார்கள் அவ்விதம் பதுக்கி வைத்தால், அதற்காக எல்லாரும் ஜவாப்தாரியாக முடியாது.

இது இப்படியிருக்க சர்க்கார் 125 பவுண்டு கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ 11—8—0 என்று விலை நிர்ணயித்தால் கொள்முதல் செய்யும் வியாபாரிகளும், மில்காரர்களும் ரூ 10-12-0 விலைக்கு 130 பவுண்டு எடையுடன் கேட்கிறார்கள். கையில் பணமில்லாமல் முடைபட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகள் வேறு வழியின்றி வியாபாரிகள் கேட்கிற விலைக்குப் போட வேண்டியிருக்கிறது. இம்மாதிரியான கோளாறுகளும், கஷ்ட நஷ்டங்களும் காங்கிரஸ் சர்க்கார் வந்த பிறகுதான் ஏற்பட்டிருக்கிறது என்று எங்கள் கிராம மக்கள் ஒவ்வொருவரும் அருவருப்பு அடைகிறார்கள்.

சாட்டியகுடி
10—10—49 ஏ. வி. நாராயணசாமி

●


இது என்ன அக்கிரமம்

சமீபத்தில் மலையாளத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அங்கு சர்க்கார் அதிகாரிகள் உணவுக் கொள்முதல், ரேஷன் விஷயமாக நடந்து கொள்ளும் முறை கண்டு பெரிதும் வருந்துகிறேன். ஏராளமான டாலர் செலவழித்தும், ஸ்டெர்லிங் நாடுகளிலிருந்தும் உணவுப் பொருள்கள் வாங்கித் தீர வேண்டியிருக்கும் நெருக்கடியான இக்காலத்தில், ஒரு சில ஊர்களில் நெல் அபரிமிதமாக விளைந்து, அவைகளைச் சாலையின் இருபுறங்களிலும் இறைந்து வீணாவதைக் காண மிகவும் வருந்துகிறேன். ஆயிரம், இரண்டாயிரம் மூட்டைகள் கொண்ட அட்டிகளாக அடுக்கி வைத்து, சுமார் பாதிக்கு மேல் முளைத்துப் போயிருக்கிறது. ஆகவே ஏராளமான நெல் உபயோகத்துக்கு லாயக்கில்லாததாக இருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். கொள்முதல் அதிகாரிகள் துரிதமான ஏற்பாடுகளை அதிக ஆட்களைக் கொண்டாகிலும் செய்து, விரைவில் அவைகளை நன்கு சேகரித்துப் பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என வற்புறுத்த விரும்புகிறேன். சேலம், கோவையின் சில பாகங்களில் உணவுக்கு மிகுந்த நெருக்கடியாக இருக்கும் இக்காலத்தில் உள் நாட்டில் விளையும் விளைச்சலையாவது சர்க்கார் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சேலம்
1-10-49 பி. ஆர். வெங்கடேசுவரன்.

●

அப்படியானால்......!



* உழுதவன் கணக்குப் பார்த்தால்....

காங்கிரஸ் ஆட்சியில் கட்டாய தானியக் கொள் முதலினால் ஏழை விவசாயிகள் படும் துயரம் சொல்லி முடியாது. கிராமங்களில் ரேஷனுக்காகத் தானியக் கொள்முதல் செய்வதற்கு நிலச் சுவான்தார்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் குத்து மதிப்பாக அதிகாரிகள் டிமாண்ட் நோட்டீஸ் பிறப்பித்திருக்கிறார்கள்.

ஆனால் எங்கள் கிராமத்தில் தாலுகா சப்ளை ஆபீஸரவர்களும் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி அவர்களும் சேர்ந்து அனுசரிக்கும் தானியச் சேகரிப்பு முறையோ விசித்திரமாயிருக்கிறது.

இப்பகுதியில் பருநெல் நல்ல விளைச்சலானால் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 30 கலம் கிடைக்கும். (கலம்-48 படி) 2 ஏக்கர் சொந்த விவசாயம் செய்யும் ஒரு விவசாயிக்கு 60 கலம் நெல் கிடைக்கலாமென்றால் அதில் அவன் செலவு செய்யும் விவரம் கீழ்க்கண்டவாறு:

	கலம்	மர
சம்பா நெல் நடவு கூலி	3	0
விதைத் தானியம்	3	0
தண்ணீர் பாய்ச்சுகிறவனுக்கு	2	0
வரப்பு வெட்டுக் கூலி	0	6
வண்ணான் சலவைக் கூலி	2	6
நாவிதன் கூலி	1	0
விவசாய உதவிப் பண்ணையாளுக்கு	5	0
பசுமாடுகள் மேய்க்கும் பண்ணையாளுக்கு	3	0
10 நபர்களுள்ள அவிபக்த குடும்பமாயிருந்தால் 6 மாதம் சாப்பாட்டுக்கு	25	0
ஆக கலம்	45	0

செலவு நீக்கி நிகர தானியம் 15 கலம். சில சந்தர்ப்பங்களில் களை எடுப்பு முதலிய விவசாய வேலைகளுக்குத் தானியமாகவே கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதே விவசாயிக்கு ஏழைமை இருக்கும் பட்சத்தில் ஏழை விவசாயக் கூலி ஆட்களுக்கு நிகர தானியம் சரியாகி விடும். நிற்க.

தானியச் சேகரிப்பு அதிகாரிகள் கைக்கொள்ளும் கெடுபிடிகளைக் கீழ்க்கண்ட ஒரு உண்மைச் சம்பவம் ஒருவாறு விளக்கும்.


குமார் 2 ஏக்கர் சொந்த நிலமுள்ள ஒரு விவசாயிக்கு 61 கலம் நெல் மகசூல் கிடைத்திருக்கிறது. குத்து மதிப்பாக ஏற்கனவே 16 கலம் நெல் ரேஷனுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று நோட்டீசும் பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால் தாலூகா சப்ளை ஆபீஸரவர்களும், இந் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி அவர்களும் விவசாயியின் வாக்கு மூலத்தை ஓர்ந்து நீதி வழங்காது அதிகாரத்தினால் ரேஷனுக்காக 44 கலம் நெல் எடுத்துக் கொண்டு விவசாயியின் உபயோகத்திற்கு 17 கலம் நெல் கொடுத்திருக்கிறார்கள்.

''உழுவார் உலகத்தார்க்கு ஆணியஃ தாற்றாது
எழுவாரை யெல்லாம் பொறுத்து''

என்ற வள்ளுவர் திருவாக்கின்படி உலகத்தார்க்கு அச்சாணி போன்ற உழவன் தானே வலிய முன் வந்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப தானியம் அளிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. தன் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாத நிலைமையில், அந்தாக்கம் தானியம் கோரிக்கத் தான் பெற்றுக் கொள்ளுகிறான். அந்தோ! என்ன பரிதாபம்!

இந்தப் பரிதாப நிலைமாறி நீதியும் அமைதியும் ஏற்பட்டு விவசாயி வள்ளுவர் வாக்குப்படி வாழ சர்க்கார் வழிசெய்ய வேண்டும்.

கம்பம்
11—10—49 மு. கோபாலன்



கணவன் :—எனக்கு ஐம்பது ரூபாய்ப் புடவைதான் பிடித்திருக்கிறது என்று சொல்லியும் தீபாவளிக்கு நீ நூறு ரூபாய்ப் புடவையையே வாங்கிக்கொண்டு விட்டாய்!

மனைவி :—உங்களுக்கு மனவருத்தம் எதற்கு? அந்தப் புடவையையும் எடுத்துக்கொண்டு விடுகிறேன்!

நெல் முற்றுகிறதே!

வெள்ளைக் கஷ்டங்களுக்குத்! துணிந்து ''உணவு உற்பத்திப் பெருக்கத்தை'' நோக்கமாகக் கொண்டு சிலர் மூன்று போகம் சாகுபடி செய்வதுண்டு. ஏகர் ஒன்றுக்கு 20 கலம் விதம் கண்டு முதலாகும் என்றும், அதில் விதைக்கும் அறுவடைக் கூலிக்கும் மூன்று கலம் போக பாக்கியை சர்க்காருக்கு அப்படியே கொடுத்துவிட வேண்டுமென்றும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். கிராமக் கணக்குப் பிள்ளையைத் 'தாங்கள் போட்டிருக்கும் அளவு கண்டு முதல் ஆகுமா?' என்று கேட்டால் அதிகாரிகளைக் கேட்கச் சொல்கிறார். அதிகாரிகளைக் கேட்டால் கிராமாதிகாரிகள் கொடுத்த புள்ளி விவரங்களைக் கொண்டுதான் கொள்முதல் நோட்டீஸ் தயாரிப்பதாகச் சொல்கிறார்கள். நன்செய் சாகுபடிக்குப் பிண்ணாக்குக் கேட்டால், பிண்ணாக்கு இருக்கும் இடமே தெரியவில்லை என்கிறார்கள். ஆகவே பிண்ணாக்கே கிடைப்பதில்லை.

மேலும், இந்த வட்டாரத்தில் கொள்முதல் செய்யாத நாளே கிடையாது எனலாம். சந்தைகளில் ஆபீஸர்கள் நுழைந்தால்—'புயலில் அகப்பட்ட புழுதி' பட்ட பாடுதான். அடுத்த சந்தை வரை எந்தத் தானியமும் கிடைப்பதில்லை. கிடைத்தால் விலை அதிகம்தான். தொடர்ந்து இரு வாரங்களுக்குச் சந்தைக்கு ஆபீஸர்கள் வராவிட்டால் விலை குறைந்து தானியம் கிடைக்கிறது. ஆகவே பல விதங்களில் கஷ்டமடையும் ஏழை விவசாயிகள், ஆபீஸர்களிடம் சிக்குண்டு, தான் பாடுபட்டு அறுவடை செய்த நெல்லில் ஒரு பாகத்தை அடுத்த அறுவடை வரை தமது உணவுக்காக வேண்டுமென்று கேட்டால் ''நெல்லை எங்களிடம் கொடுத்துவிட்டு ரேஷன் ஷாப்புக்குக் காவடி தூக்கு'' என்று உத்திரவிடுகிறார்கள். மேற்கொண்டு ஏதாவது கேட்டால் ஆபீஸர்கள் உடனே அகோர வீரபத்திரர்களாகி விடும் காட்சி, ஏழை விவசாயியே அறிவான். வீட்டில் பத்து பேர் இருந்தாலும், நெல் ஸ்டாக் இரண்டு கலமே இருந்தாலும், ஆபீஸர்களைக் கண்டால் ஒரு கலமாவது மரியாதையாகக் கொடுத்துவிட வேண்டும். இல்லையேல் இரண்டு கலம் நெல்லும் அரோகராதான்! பின்பு அந்த ஏழை! பாவம்! ரேஷன் கார்டுக்குத் தவம் கிடைக்க வேண்டியதுதான்.—நெற் பயிர் முற்றிப் பழுப்பதைக் கண்டு முன்பெல்லாம் ஆனந்தம் அடைந்தான் விவசாயி. இன்று தனது பச்சிளங் குழந்தை உணவு உண்ணும் வயதை யடைந்து விட்டதே என்று ஏங்கும் தரித்திரன் போல் 'நெல் மணி முற்றிப் பழுக்க ஆரம்பித்து விட்டதே! அறுவடை நெருங்குகிறதே! ஆபீஸர்களின் அவதாரங்கள் எப்படி யிருக்குமோ!!' என்று ஏங்கிப் பரிதவிக்கிறான்.

மணமேடு
5-10-49 தங்கவேலு பிள்ளை

ஏதாகிலும் ஒன்று....

விவசாயிகளை ரேஷன் தாசில்தாரும் பிக்கார சப்ளை ஆபீஸரும் படுத்தும்பாடு சொல்லி முடியாது! ரேஷன் தாசில்தாரையும் பிக்கார சப்ளை ஆபீசரையும் கண்டதும் நல்ல பாம்பைக் கண்டதுபோல் பதை பதைக்கிறான் விவசாயி.

நிற்க, இந்த வருஷம் நன்செய் நிலங்கள் விளையுமோ விளையாதோ என்ற மனப்பான்மையுடன் தன் உபயோகத்திற்காக வைத்திருக்கும் நாலு மாத உணவு தானியத்தையும் தட்டிக்கொண்டு போய்விட்டால், அந்த விவசாயியின் நெஞ்சம் எப்படி யிருக்கும்? பெரிய மிராசுதார்களிடமும் பெரிய பட்டாதார்களிடத்திலும் அவர்கள் கைவரிசைகளைக் காட்ட முடிவதில்லை; அதிகாரத்தைச் செலுத்த முடிவதில்லை. ஆகவே, காந்திஜியின் கட்டளைப்படி ரேஷன் ஒழிக்கவேண்டும் அல்லது தாங்கள் எழுதிய தலையங்கத்தின்படி அரசாங்கம் செய்ய வேண்டும்.

அம்பலச்சேரி
9—10—49 மு. மா. முத்தையா

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'பாடப் புத்தகக் கொள்ளை' என்ற கடிதம் எழுதிய திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிக்கும், 'உழுதவன் கணக்குப் பார்த்தால்......' என்ற கடிதம் எழுதிய கம்பம் ஸ்ரீ மு. கோபாலனுக்கும் ரூ. 12-8-0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.

சுதந்திர மாளிகை

ஜெயமணி

15. அரசாங்க பாஷை

தேவநாகரி லிபியில் ஹிந்தி இந்தியாவின் அரசாங்க பாஷையாக இருக்கும்.

அரசாங்க காரியங்கள் சம்பந்தப்பட்ட வரையில் சர்வதேச இலக்கங்கள், அதாவது தற்போது அனுஷ்டானத்திலிருந்து வரும் இலக்கங்களே உபயோகிக்கப்பட வேண்டும்.

எனினும், இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து பதினைந்து வருஷங்கள் வரையில், இந்திய அரசாங்க காரியங்களுக்கு ஆங்கில பாஷையை உபயோகித்து வருவார்கள்.

இருந்தாலும் அந்தக் கெடு முடிவதற்குள், குறிப்பிட்ட அரசாங்க காரியங்களுக்கு ஆங்கில பாஷையுடன் ஹிந்தியையும் உபயோகிக்க வேண்டும் என்று ஜனாதிபதி (குடியரசுத் தலைவர்) உத்தரவு பிறப்பிக்கலாம். அதுபோலவே, சர்வதேச இலக்கங்களுடன் ஹிந்தி இலக்கங்களையும் உபயோகிக்குமாறு உத்தரவிட ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

மேலே குறிப்பிட்ட பதினைந்து வருஷ கெடு முடிந்தபின், மேற்கொண்டும் ஆங்கில பாஷையே உபயோகத்தில் இருந்து வரவேண்டும் என்று பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம். அதன் பின் குறிப்பிட்ட காரியங்களுக்கு தேவநாகரி இலக்கங்களையே உபயோகிக்க வேண்டும் என்றும் சட்டம் இயற்றப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து ஐந்து வருஷங்கள் சென்றதும் ஜனாதிபதி ஒரு கமிஷனை நியமிப்பார். அதன் பிறகு பத்து வருஷங்கள் சென்றதும் அதேபோல் மீண்டும் ஒரு கமிஷனை நியமிப்பார்.

அஸ்ஸாமிய பாஷை, வங்காளி, கன்னடம், குஜராத்தி, ஹிந்தி, காஷ்மீரி, மலையாளம், மகாராஷ்டிரம், ஒரியம், பஞ்சாபி, சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு உருது முதலிய பதினான்கு பாஷைகளின் பிரதிநிதிகள் மேற்படி கமிஷன்களில் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

அரசாங்க காரியங்களுக்கு ஹிந்தியை அதிகமாக உபயோகித்தல், ஆங்கில பாஷையின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தல், இலக்கங்கள் முதலிய பாஷை சம்பந்தமான பல விஷயங்களையும் பரிசீலனை செய்து ஜனாதிபதியிடம் தங்களுடைய சிபார்சுகளைச் சமர்ப்பித்தல் முதலியன கமிஷனின் கடமையாகும்.

கைத்தொழில், கலாச்சாரம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் இந்தியாவின் அபிவிருத்தியையும், ஹிந்தி பாஷை பேசாத பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் நியாயமான கோரிக்கைகளையும் நலன்களையும் மனதிற்கொண்டு கமிஷன் தன் சிபார்சுகளைச் செய்ய வேண்டும்.

அந்தக் கமிஷனைத் தவிர, முப்பது அங்கத்தினர்கள் அடங்கிய கமிட்டியொன்றும் நிறுவப்படும். அவர்களில் இருபது பேர் பார்லிமெண்டிலிருந்து பார்லிமெண்டு அங்கத்தினர்களாலும், பத்து பேர் ராஜாங்க சபையிலிருந்து ராஜாங்க சபை அங்கத்தினர்களாலும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இந்தக் கமிட்டி மேற்படி கமிஷனின் சிபார்சுகளைப் பரிசீலனை செய்து, அவைகளை யொட்டித் தங்களுடைய அபிப்பிராயத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும். கமிட்டியின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு ஜனாதிபதி அவ் விஷயமாகத் தம்முடைய உத்தரவைப் பிறப்பிப்பார்.

தற்காலிகமாக எது அரசாங்க பாஷையென்று இந்த அரசியல் திட்டத்தில் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதோ, அதில் தான் மாகாண சர்க்கார்களுக்கும் இந்திய சர்க்காருக்கும்,—ஒரு மாகாண சர்க்காருக்கும் மற்றொரு மாகாண சர்க்காருக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெற வேண்டும்.

எனினும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாண சர்க்கார்கள் தங்களுக்குள் ஹிந்தியிலேயே கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள விரும்பினால், அப்படியே செய்யலாம்.

ஒரு மாகாணத்திலுள்ள ஜனங்களில் ஏராளமானவர் தாங்கள் பேசும்

பாஷையை மாகாண சர்க்கார் அங்கீகரிக்க வேண்டும் என்று விரும்பினால், அவ்வாறே அதை அங்கீகரிக்கும்படி ஜனாதிபதி அந்த மாகாண சர்க்காருக்கு உத்தரவிடலாம்.

மேலே குறிப்பிட்ட விதிகளுக்கு முரணின்றி, எந்த மாகாண சர்க்காரும் தங்கள் மாகாணத்தில் உபயோகத்திலிருந்து வரும் பாஷைகளில் ஒன்றையோ அல்லது ஹிந்தியையோ சட்ட பூர்வமாக மாகாண பாஷையாய் ஏற்றுக் கொள்ளலாம்.

எனினும், மாகாண சட்டசபை அவ்வாறு தீர்மானிக்கும் வரையில் ஆங்கில பாஷையே மாகாண சர்க்கார் உபயோகிக்கும் சட்ட பூர்வமான பாஷையாக இருந்து வரும்.

பாஷை சம்பந்தமாகப் பார்லிமென்டில் திட்டமான சட்டம் நிறைவேறும் வரையில், கீழ்க்கண்ட விஷயங்கள் எல்லாம் ஆங்கில பாஷையிலேயே நடைபெற வேண்டும். சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட் நடவடிக்கைகள், இந்தியா பார்லிமென்டிலும் மாகாண சட்டசபைகளிலும் வரும் மசோதாக்கள், திருத்தங்கள், மேற்படி சபைகளில் நிறைவேறும் சட்டங்கள், ஜனாதிபதி, கவர்னர் பிறப்பிக்கும் அவசரச் சட்டங்கள் முதலியன ஆங்கில பாஷையிலேயே இருக்க வேண்டும்.

எனினும், ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெற்று எந்த மாகாணமும் ஹைகோர்ட் நடவடிக்கைகளை ஹிந்தியிலோ அல்லது அந்த மாகாணத்திலுள்ள குறிப்பிட்ட பாஷையிலோ நடத்தலாம். அந்தச் சந்தர்ப்பத்திலும்கூட தீர்ப்புகள், டிக்ரிகள், கட்டளைகள் முதலியன ஆங்கில பாஷையில்தான் இருந்து தீரவேண்டும்.

மசோதாக்கள், சட்டங்கள், அவசரச் சட்டங்கள் முதலியவைகள் மாகாண பாஷையில் இருக்கவேண்டும் என்று மாகாண சட்டசபை தீர்மானித்தாலும் கூட, அவைகளை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துப் பிரசுரிக்க வேண்டும்.

ஜனங்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவித்து இந்தியாவில் உபயோகத்திலிருக்கும் எந்த பாஷையிலும் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

பார்லிமெண்டு, இராஜாங்க சபை மாகாண சட்ட சபைகள் முதலியவற்றின் நடவடிக்கைகள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில்தான் நடைபெறும். எனினும், அந்த இரண்டு பாஷைகளிலும் தெளிவாகப் பேச முடியாதவர்களுக்கு அவரவர் சொந்த தாய்ப் பாஷையில் பேச அந்தந்தச் சபையின் தலைவர் அனுமதி கொடுக்கலாம்.

பாஷை விஷயமாகப் பார்லிமெண்டு அல்லது மாகாண சட்டசபைகள் சட்டம் எதுவும் நிறைவேற்றாவிடில், இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு ஆங்கில பாஷை உபயோகிக்கப் படமாட்டாது.

சொத்து ஆர்ஜித உரிமை: சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விதிகளை அனுசரித்து ஈடுத்தொகை கொடுத்தாலன்றி யாருடைய சொத்தையும் ஆர்ஜிதம் செய்துகொள்ள சர்க்காருக்கு உரிமையில்லை.

அவ்விஷயமாகச் சட்டசபைகளில் நிறைவேறும் சட்டம் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு விடப்பட வேண்டும். ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெறாத மேற்படி சட்டம் எதுவும் செல்லுபடியாகாது.

அவரது அங்கீகாரம் பெற்ற சட்டத்தை ஆட்சேபிக்க எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை.

இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்குப் பதினெட்டு மாதங்களுக்குள் சொத்து ஆர்ஜித சம்பந்தமாக ஏதாவது சட்டம் நிறைவேறி யிருந்தால், இந்தத் திட்டம் அமுலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் அதை மாகாண கவர்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து அவருடைய சம்மதத்தைப் பெறவேண்டும்.

மனித சுபாவம்

சு. ரா.

சீல்யாண் ஸ்டேஷனில் பம்பாய்க்குப் போக வேண்டிய மின்சார ரயில் வண்டி வந்து நின்றது. பிளாட்பாரத்தில் வெகு நேரமாய்க் காத்துக்கொண்டிருந்தவர்கள் ரயிலை நோக்கிப் பாய்ந்து, ஒரே சமயத்தில் அதில் ஏற முயற்சி செய்தனர். அதே சமயம் ரயிலில் இருந்த அவ்வளவு பேரும் இறங்க முயற்சி செய்தனர். ஒவ்வொரு பெட்டியின் வாயிலிலும் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. சில நிமிஷங்களுக்குப் பிறகு, ரயில் புறப்பட்ட போது பிளாட்பாரம் அநேகமாய்க் காலியாக இருந்தது!

நானும் கிருஷ்ணசாமியும் முண்டியடித்து ரயிலில் இடம் பிடித்திருந்தோம். மூன்று பேர் உட்கார வேண்டிய ஒவ்வொரு பெஞ்சியிலும் நாலு பேர் உட்கார்ந்து மூச்சுக்கூட விடமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். நடைபாதையில் வேறு பிரயாணிகள் நெருக்கியடித்துக்கொண்டு நின்றிருந்தனர்.

"என்ன ஸார்! எங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கிருஷ்ணசாமி குரல் கொடுத்தார்.

நான் இருந்த இடத்திலிருந்தபடியே, "இங்கேதான் உட்கார்ந்திருக்கிறேன். இடம் கிடைத்துவிட்டது!" என்று பதிலளித்தேன்.

"இவர்களுக்கெல்லாம் சுதந்திரம் வந்து என்ன பிரயோஜனம், ஸார்? ஒரு ஒழுங்கு இல்லாமல் ஆடு மாடு மாதிரி இப்படி ரயிலில் ஏறுகிறவர்களா சுதந்திரத்தைக் காப்பாற்றப் போகிறார்கள்? ரஷியாக்காரனோ, அமெரிக்காக்காரனோ வந்து பிடித்துக் கொள்ளத்தான் போகிறான்!" என்று அவர் பேச்சைத் தொடங்கினார்.

சுதந்திரம் வருவதற்கு முன், "இந்தியாவுக்காவது, சுதந்திரம் வருவதாவது! ரயிலில் ஒழுங்காக ஏறக்கூடத் தெரியாதவர்களுக்கு எப்படி ஸார், சுதந்திரம் வரும்?" என்று அவர் சொல்லிக் கொண்டிருப்பது வழக்கம். இப்போது அதைச் சற்று மாற்றிக் கொண்டிருந்தார்!

நானும் அவரும் ஒன்றாக ரயிலில் பிரயாணம் செய்து, பம்பாயில் வேலை பார்த்து வரத் தொடங்கிச் சுமார் மூன்று வருஷங்களுக்கு மேலாகின்றன. அன்றைக் கிருந்தாற் போல்தான் இன்றும் ஜனங்கள் அடித்துப் பிடித்துக் கொண்டு ரயிலில் ஏறினர். அன்று போல்தான் இன்றும் ஒருவரை யொருவர் தள்ளிக் கொண்டு இறங்கினர். வழக்கம் போல், சிறு பிள்ளைகளும், பெரியவர்களும் தங்கள் சில்லறைச் சாமான்கள் வியாபாரத்தை நடத்தினர்; பிச்சைக்காரர்களும் கடைசியாக வந்த சினிமாவிலிருந்து இரண்டு பாட்டுக்களைக் கொலை செய்து கொண்டே பிச்சை யெடுத்தனர்! ரயில்வேக்காரர்கள் இந்த வியாபாரிகளையும், பிச்சைக்காரர்களையும் தடுக்க, பொதுஜன ஒத்துழைப்பை நாடிக் கொண்டே யிருந்தனர்!

மற்றவைகளில் எப்படி மாறுதல் இல்லாமலிருந்ததோ, அதேபோல் கிருஷ்ணசாமியும் தம்முடைய 'சங்'கை வழக்கம் போல் ஊதிக்கொண்டே யிருந்தார்.

"என்ன அப்படிச் சொல்லி விட்டீர்களே! போகப் போகத்தானே ஸார், ஒழுங்கு முறைகளைக் கற்றுக் கொள்ள முடியும்? இன்னும் நாலைந்து வருஷங்கள் கழித்துப் பாருங்கள்!" என்றேன் நான்.

"ஐந்தென்ன, ஐம்பது வருஷங்கள்தான் ஆகட்டுமே! ஒழுங்கு என்பது மட்டும் ஏற்படப் போவதில்லை......பிரயாணிகளாவது ரயிலில் விற்கப்படும் வஸ்துக்களை வாங்காமல் இருக்க வேண்டும். அல்லது ரயில்வே போலீஸ்காரர்களாவது இவர்களை வண்டியை விட்டு இறக்க வேண்டும். சட்டம் போட்டு விட்டால் மட்டும் ஒழுங்கு ஏற்பட்டு விடுமா, என்ன?" என்றார் அவர்.

வண்டியிலிருந்த தமிழ் தெரிந்த ஒருவர், "ஆமாம், ஸார்! ரயிலில் இந்த வியாபாரிகளின் தொல்லையும், பிச்சைக்காரர்களின் தொல்லையும் தீர்ந்தால் போதும்; மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு வேறு வசதியே வேண்டாம்!" என்று கிருஷ்ணசாமிக்கு ஒத்துப் பாடினார்.

"ஹூம், அது எங்கே நடக்கப் போகிறது? சட்டம் புத்தகத்தில்தான் இருக்கும். நடைமுறையில் வரவே வராது. இப்படி, ஆளத் தெரியாதவர்களுக்குச் சுதந்திரம் கொடுத்ததே பிசகு, ஸார்!" என்றார் கிருஷ்ணசாமி.

அப்பொழுது வண்டியின் இன்னொரு மூலையிலிருந்து ஒரு சிறுவனின் பெரும் அழு குரல் கேட்டது. "ஐயோ! என் பிஸ்கோத்தெல்லாம் போய்விட்டதே! என் எஜமானுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்!" என்று அவன் கதறி அழுதான்.

வண்டியில் இருந்தவர்கள் தங்கள் தங்கள் பேச்சுக்களை நிறுத்திவிட்டு, அந்தப் பையனையே பார்த்தனர். நாங்களும் அவனைக் கவனித்தோம்.

அவனுக்குச் சுமார் பத்து வயது இருக்கும். அவன் காலடியில் ஒரு கூடை இருந்தது. அதற்கருகில் உடைந்து போன பல பிஸ்கோத்துகள் சிதறிக் கிடந்தன. தன் அருகிலிருந்த பெஞ்சியில் அமர்ந்திருந்தவரைப் பார்த்து அந்தப் பையன், "நீங்கள்தான் இந்த பிஸ்கோத்துக்களை எடுத்துக்கொண்டு பணத்தைக் கொடுக்க வேண்டும். உங்களால்தானே என் பிஸ்கோத்தெல்லாம் கீழே விழுந்து உடைந்து போச்சு?" என்று அழுதான்.

அந்த மனிதர் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்க "நான் ஏன் பணம் தருகிறேன்? நான் உட்காரப் போவதற்குள் நீதானே என்னை இடித்துக்கொண்டு முன்னே போனாய்? அதனால் கூடை கீழே விழுந்தால் அதற்கு நானா பொறுப்பு? நீ ரயிலில் வியாபாரம் செய்வதே தப்பு!" என்று அடுக்கினார்.

அந்தப் பையன் விடவில்லை. "உங்கள் கை பட்டுத்தானே கூடை விழுந்தது? பிஸ்கோத்தின் விலையைக் கொடுத்து விடுங்கள்; என் வயிற்றில் அடிக்காதீர்கள்" என்று விக்கிக் கொண்டே கூறினான்.

அந்த மனிதர் பதில் சொல்லவேயில்லை.

'சரி; இந்தப் பையன் இனிமேல் ரயிலில் வியாபாரம் செய்ய வரமாட்டான். கிருஷ்ணசாமியின் விருப்பமும் நிறைவேறும். இம்மாதிரி ஏதாவது நடக்க வேண்டியதுதான்; அப்பொழுதுதான் இந்தச் சில்லறை வியாபாரிகளின் தொல்லை ஒழியும்' என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

அதற்கேற்றாற் போல் அந்தப் பையன் மேலும் அழுது கொண்டே, சிதறிக் கிடந்த பிஸ்கோத்துகளை யெல்லாம் கூடையில் சேகரித்தான். "நாம் நினைத்தது சரிதான்; இவன் இறங்கிப் போய் விடுவான்......சூடு கண்ட பூனையல்லவா' இனிமேல் திரும்பி வரமாட்டான்?" என்று மேலும் நினைத்தேன்.

ஆனால் பையன் கூடையை அம் மனிதரின் காலடியில் வைத்துவிட்டு, "இந்தக் கூடையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் இனிமேல் எஜமானை எப்படிப் பார்ப்பேன்? அவர் என் தோலை உரித்து விடுவாரே!" என்று மறுபடியும் அழத் தொடங்கினான்.


வண்டியில் ஒருவரும் பேசவில்லை. திடீரென்று கிருஷ்ணசாமி தம் இடத்திலிருந்து எழுந்தார். அந்தப் பையனைக் கண்டித்து விரட்டப் போகிறார் என்று நான் எண்ணினேன். ஆனால் அவருடைய போக்கோ வேறுவிதமாயிருந்தது. நேரே அந்த மனிதரிடம் போனார்; ஹிந்தியில் ஏதோ பேசினார்.

"ஸார்! அவன் குழந்தை. தன் எஜமானுக்குப் பதில் சொல்ல வேண்டியவன். நீங்கள் அவனுக்குப் பணம் கொடுத்து விடுவதுதான் நியாயம்!" என்றார்.

வண்டியிலிருந்தவர்கள் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

அந்த மனிதருக்குக் கோபம் வந்து விட்டது. "யார் ஐயா, நீங்கள்? நானா

வா, ஸ்டேஷனுக்கு!



இவனை ரயிலில் வியாபாரம் செய்யச் சொன்னேன்? இந்தக் கூட்டத்தில் வந்தால் கூடை கீழே விழுந்து விடலாம் என்று அவனுக்குத் தெரிய வேண்டாமா? ரயிலில் வியாபாரம் செய்வதே தவறு என்று உங்களுக்குத் தெரியாதா?" என்று அவர் கிருஷ்ணசாமி மேல் எரிந்து விழுந்தார்.

கிருஷ்ணசாமி சளைக்கவில்லை. "ரயிலில் வியாபாரம் செய்வது சட்டப் பிசகான செய்கைதான், ஸார்! அதற்காக நாம் இந்தச் சிறுவனின் பிழைப்பைக் கெடுப்பது நியாயமா என்று சற்று யோசித்துப் பாருங்கள். எல்லா விஷயங்களிலும் நாம் சட்டப்படிதான் நடக்கிறோமா? மூன்று பேர் உட்காரவேண்டிய இந்தப் பெஞ்சியில் நீங்கள் நாலாவது பேராக நெருக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பது சட்ட விரோத மில்லையா?" என்று நிதானமாகப் பேசிக்கொண்டே போனார்.

வண்டியில் கலகலப்பு ஏற்பட்டது. எல்லோரும் கிருஷ்ணசாமியை ஆதரித்து ஆளுக்கொன்று சொன்னார்கள்.

அந்த ஆசாமி பதில் சொல்லத் தெரியாமல் விழித்தார். பிறகு, "ஸார்! என்னிடம் மத்தியான டிபனுக்கு நாலணா தான் இருக்கிறது. என்னால் பிஸ்கோத்தின் விலை முழுவதையும் கொடுக்க முடியாது" என்று மென்று விழுங்கியவாறு கூறினார்.

கிருஷ்ணசாமி தயங்கவில்லை. வண்டியிலிருந்த அனைவரையும் ஒரு முறை பார்த்தார். பிறகு, "இது ஒரு பரிதாபகரமான சம்பவம். இந்தச் சிறுவனைக் காப்பாற்றுவது நம் கடமை. ஆகவே, நீங்கள் எல்லோரும் ஆளுக்கு ஓரணாவோ, இரண்டணாவோ கொடுத்தால் அவன் வியாபாரம் பிழைக்கும்" என்றார்.

என்ன ஆச்சரியம்! எல்லோரும் உடனே தங்கள் தங்கள் சட்டைப் பைகளிலிருந்து அவர் கேட்டதை எடுத்துக் கொடுத்தார்கள். இரண்டு நிமிஷங்களில் அவர் இரண்டரை ரூபாய் வசூல் செய்தார். அந்தப் பையனிடம் கொடுத்து, கூடையையும் அவனிடம் கொடுத்தார். "போடா, தம்பி! பிஸ்கோத்துக்களையும் நீயே சாப்பிடு, சலோ!" என்றார். பையனும் ஓடிவிட்டான். வண்டியிலிருந்தவர்கள் 'ஹோ, ஹோ' வென்று சிரித்துவிட்டு, பழையபடி பேசத் தொடங்கினார்கள்.

எனக்கு மட்டும் கிருஷ்ணசாமியிடம் கோபந்தான். தம்முடைய இடத்தில் பெருமிதத்துடன் வந்து உட்கார்ந்த அவரை நோக்கி, "என்ன ஸார்! நீங்களே சட்டத்தை மீறுகிறவர்களை ஆதரித்தால் சுதந்திரம் என்ன ஆவது? ஒழுங்கு எப்படி ஏற்படுவது?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

அவர் லேசாகச் சிரித்துவிட்டு, "சட்டத்தை மீறக் கூடாதுதான்! ஆனால் சட்டத்தையும் மீறிய விஷயம் ஒன்று இருக்கிறது, ஸார்......" என்று நிறுத்தினார்.

"அது என்ன?" என்று கேட்டேன்.

"மனித சுபாவம்தான்!" என்றார் அந்தப் பொல்லாத மனிதர்.

இவையும் தமிழ்

சிறையில் தவம்

தேச விடுதலைக்காக தம்முடைய மதிப்புக்குரிய தலைவர்களில் பலர் சிறைச்சாலையையே தவச்சாலையாக வழிபட்டு சிறைகளைத் தூய்மைப் படுத்தினார்கள். அவர்களில் ராஜாஜியும் ஒருவர். 1921-ம் வருடம் மகாத்மாஜி நடத்திய ஒத்துழையாமைப் போராட்டத்தில் கலந்துகொண்டு ராஜாஜி மூன்று மாதச் சிறைத்தண்டனை அடைந்தார். தண்டனையை அவர் வேலூர் சிறையில் கழித்தார். அப்போது ஒவ்வொரு நாளும் நடந்த சம்பவங்களைத் தம்முடைய 'டைரி'யில் குறித்து வைத்திருந்தார். இது "ஜெயில் டைரி" என்ற பெயரில் ஆங்கிலத்தில் ஒரு புத்தகமாக வெளிவந்தது. தமிழ்ப் பண்ணைக் காரியாலயத்தார் இதை இப்போது தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

புத்தகத்தைப் படிக்கும்போது நாமே ராஜாஜியுடன் மூன்று மாத காலம் சிறைவாசத்தை அநுபவிப்பது போல அவ்வளவு தத்ரூபமாக இருக்கிறது. அறிஞர் பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை இதை எளிய தமிழில் நன்றாக மொழி பெயர்த்திருக்கிறார். விலை ரூ. 4-0-0. தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை.

கதா காலக்ஷேப பாகவதர்களின் சரித்திரம்

காலக்ஷேபத்தைத் தமிழ்நாடு ஒரு கலையாகப் போற்றி வளர்த்து வந்திருக்கிறது. பல வித்வான்களும் பேரறிஞர்களும் காலக்ஷேபம் செய்வதில் மகா வல்லவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவர்களில் தஞ்சாவூர் ஸ்ரீ கிருஷ்ண பாகவதருடைய பெயரை யாரும் மறக்கவே முடியாது. காலக்ஷேபக் கலைக்கே அவர் ஏகச் சக்ராதிபதியாக விளங்கினார் என்று சொல்லுவது மிகையாகாது. அவருக்கு ஒப்பாரும் இல்லை, மிக்காரும் இல்லை என்று சொல்லக்கூடிய முறையில் அவர் தம்முடைய புகழை நிலைநாட்டினார். அவருடைய வாழ்க்கையையும், பிற்காலத்தில் காலக்ஷேபத் துறையில் பிரபலமாக விளங்கிய தஞ்சாவூர் கோவிந்த பாகவதர், குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், மாங்குடி சிதம்பர பாகவதர் முதலிய வேறு பல வித்வான்களுடைய வாழ்க்கை வரலாற்றையும் கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர் வெகு ரசமாக எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்தின் மூலம் ஸ்ரீ துரையப்ப பாகவதர் சங்கீத உலகத்துக்கு ஒரு சிறந்த தொண்டாற்றியிருக்கிறார். விலாசம்: "நாட்டியம்" காரியாலயம், 49, கதீட்ரல் ரோடு, சென்னை 6.

ராமபாணம்

மேற்கூறிய பெயருடன் ஒரு தமிழ்ப் பத்திரிகை வெளிவருகிறது; மூன்று இதழ்கள் வெளிவந்தும் விட்டன. அவற்றை ஒரு முறை புரட்டிப் பார்க்கும்போது, இந்தப் பத்திரிகைக்குப் பெயர் வைத்தது ரொம்பப் பொருத்தம்தான் என்று தோன்றுகிறது. அரசியல், சமூகம், கலை முதலியவற்றைப் பற்றி 'ராமபாணம்' தன்னுடைய அபிப்பிராயத்தைச் சுருக் சுருக்கென்றும் ஆணித்தரமாகவும் மிக்க வன்மையாகவும் கூறுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக சர்க்காரின் வரிவிதிப்புக் கொள்கையைப் பற்றி "சாலிவாஹனன்" எழுதியிருக்கும் "திருப்பதிப் பிரயாணிகள்" என்ற கட்டுரையைச் சொல்லலாம். ஒவ்வொரு விஷயமும் இம்மாதிரியாகவே அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பக்கத்தையும் ஏராளமான படங்களும், கார்ட்டூன்களும், ஹாஸ்யத் துணுக்குகளும் அலங்கரிக்கின்றன. "அவியல்" ரொம்ப சுவையாக இருக்கிறது. உலகத்தில் தர்மத்தை நிலைநிறுத்தவும் அதர்மத்தை ஒழிக்கவும் ராமபாணம் உபயோகிக்கப்பட்டது. பத்திரிகை யுலகத்தில் ராமபாணம் இந்தச் சேவையை ஆற்றும் என்று எதிர்பார்க்கிறோம். விலை அணா 4.

கோழிப் பண்ணை

இரவில் சௌகரியமாக இருப்பதற்கும் வெய்யில், மழைக்கு ஒதுங்குவதற்கும் பிரத்தியேகமான அறைகள் தேவை. சூரிய வெளிச்சம் நேர்முகமாக அந்த அறையில் படவேண்டும். தரையில் ஈரம் தங்கக்கூடாது. அறையைத் தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும். அறையில் மூங்கில்களால் குறுக்குச் சட்டங்களை அமைக்க வேண்டும். இச் சட்டங்கள் ஓய்ந்த நேரத்தில் மேலே ஏறி உட்கார்ந்து கொள்ளப் பெரிதும் பயன்




படும். இவ்வளவும் போதாததற்கு, குளிருக்கு அடக்கமாகப் பதுங்கிக் கொள்ளுவதற்கு ஒரு பிரத்தியேக அறை வேண்டும்.

திட்டங்கள் பிரமாதமாயிருக்கின்றனவே என்று நினைக்கிறீர்களா? இந்தத் திட்டங்களெல்லாம் நமக்கல்ல; கோழிக்கு! எப்படியிருக்கிறது கதை? 'குப்பைக் கோழியை வளர்க்க இவ்வளவு வசதிகள் தேவையா? அது இயற்கையோடு ஒட்டித் தானாகவே குப்பையைக் கிளறி உணவு தேடி உண்டு, முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இன விருத்தி செய்து கொள்ளாதா?' என்று தான் கேட்கத் தோன்றும். இத்தகைய அலட்சிய மனோபாவத்தினாலேதான் நம் நாட்டுக் கோழிச் செல்வம் பழுது பட்டு விட்டது. அவற்றை வளர்க்கும் பண்பை அறிந்து வளர்த்தால் கோழிகள் அமோகமாக விருத்தியடையும். அது லாபகரமான தொழிலுமாகும்.

கோழிப்பண்ணை வைக்கும் விதம், வளர்ப்புக்கு ஏற்ற கோழிகள், லாபம் பெறும் முறை, கோழியின் உணவு, கோழியின் நோய்கள்,—முதலிய விஷயங்களையெல்லாம் சாங்கோபாங்கமாகப் புள்ளி விவரங்களுடன் ஆசிரியர் ச. கு. கணபதி ஐயர் விளக்கியுள்ளார். விலை: ரூ. 2. "கலைமகள்" காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

தமிழா தூங்காதே!

புஸ்தகங்களின் பிரயோஜனம் பலவிதம். ஆம், படித்துப் பயன் பெறுவது ஒருபுறமிருக்க, கனமான புஸ்தகங்களைத் தலைக்குத் தலையணையாகப் பயன் படுத்துபவர்கள் உண்டு. இன்னும் சிலர், "ஸார், தூக்கம் வரவில்லை, ஒரு புஸ்தகம் கொடுங்கள்" என்று சொல்லி வாங்கிக் கொண்டு, புஸ்தகத்தைத் திறந்தவுடனேயே நித்திராதேவியின் அரவணைப்பில் கட்டுண்பதும் உண்டு. இவ்விதமெல்லாம் துஷ்பிரயோகம் செய்துவிடக் கூடாது என்ற முன் எச்சரிக்கையோடு 'காடோடி' தமது புஸ்தகத்துக்குத் **தமிழா தூங்காதே!** என்ற தலைப்புக் கொடுத்திருக்கிறார் போலும்! ஆனால் காடோடியின் புத்தகங்களைப் பற்றிய வரையில் அத்தகைய பயம் வேண்டியதில்லையென்பது நிச்சயம். இந்நூலில் உள்ள ஹாஸ்யக் கட்டுரைகளைப் படித்தவர்கள் சிரித்து வயிறு வலித்துத் தூக்கம் வராமல் தவிப்பார்களே தவிர, தூங்கிப் போய்விட மாட்டார்கள். விலை: ரூ. 4. காடோடி காரியாலயம், தியாகராயநகர், சென்னை.


தீபாவளிக்கு
எங்கள் ஆதரவாளர், வாடிக்கைக் காரர், அன்பர்கள் யாவருக்கும்
TODAY'S FAVOURITE
LIMDA
SOAP
LIMDA
எங்கள் மங்கள வாழ்த்துக்கள்
பரிசுத்தமான வேப் பெண்ணெயும் இதர வாசனைச் சத்துக் களும் சேர்த்து தயா ரிக்கப்பட்ட மலபார் லிம்டா சோப் அழகுக்கு அழகு அளிப்பதோடு ஓர் கிருமி நாசினியாக வும் வேலை செய் கிறது. இன்றைக்கு அது தேசத் தில் ஒவ்வொருவருடைய அன்பையும் கவர்ந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.
malabar
LIMDA
Soap
VEGETABLE SOAP WORKS . . . CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & CO. LTD. CALICUT - BOMBAY-2 - MADRAS-1

கம்பர் தரும் காட்சி

271. வண்டெலாம் இரிந்தவே!

எதிர்க் கரையிலிருந்தே கடலைத் தூர்த்துக்கொண்டு வரலாம் என்று எண்ணிப் பர்வதங்களை வீசி வீசி எறிந்த குமுதனது செயலைச் சென்ற இதழில் பார்த்தோம்.

∴

அனேக பறவைகள் மரங்களிலுள்ள பழங்களையே தின்று வாழ்கின்றன.

ஆலங்கனி, அரசங்கனி, அத்திக்கனி இவைகளைக் காக்கைகள் முதலான பல பறவைகள் ஆகாரமாக்கிக் கொண்டு வாழ்கின்றன.

தனியாய் நிற்கும் ஒரு ஆலமரத்தை விறகுக்காக வெட்டி வண்டியில் அடுக்கிய மாத்திரத்தில் வந்த காக்கைகள் ஏமாந்து போய்க் கத்துவதைப் பார்க்கிறோம். இனி:

∴

ஒரு குரங்கு ஒரு மலையைப் பறித்தெடுத்தபோது அடிவாரத்தில் நின்ற ஒரு பெரிய மரமும் பறிபட்டு மலையோடு தொடர்ந்து போயிற்று.

பழங்களைத் தின்று கொண்டிருந்த பறவைகள் கத்தின. கா, கோ என்று கத்தின.

> **பழும ரம்பறிக்**
> **கப்,பற வைக்குலம்,—**
> **தழுவி நின்றொரு**
> **வன்தனி தாங்குவான்**
> **விழுத லும்புகல்**
> **வேற்றிடம் இன்மையால்**
> **அழு(து) அரற்றும்**
> **கிளை என ஆனவால்.**

[பழு மரம் பறிக்கப் பறவைக் குலம்: பழம் நிறைந்த மரம் ஒன்று பறிபட்டுப் போகவும் அவைகளைத் தின்று கொண்டிருந்த பலவித மான பறவை இனங்கள், அரற்றியது எப்படியிருந்தது? தழுவி நின்று ஒருவன் தனி தாங்குவான்: சுற்றத்தாரை அன்பாகப் பாதுகாத்து வந்த தனித்த வள்ளலான ஒருவன்; விழுதலும்: போர்க்களத்தில் இறந்து விழவும்; புகல் வேற்றிடம் இன்மையால் அழுது அரற்றும் கிளை (சுற்றத்தார்) என ஆனவால்,— அரற்றிய பறவைக் குலம்.]

பழம் பழுத்து நிறைந்திருந்த மரம் ஒன்றைப் பற்றிச் சொன்னார் கவிஞர்.

அதேமாதிரி பூப் பூத்துப் பூமயமாய் இருந்த மரங்களுக்கு நேர்ந்த விபத்தைப் பார்க்கச் சொல்லுகிறார்.

லக்ஷக்கணக்கான வண்டுகள் பூவில் மொய்த்து தேனை உண்டு கொண்டிருக்கின்றன.

மரங்கள் பறிபட்டுப்போகவும் வண்டுகள் எல்லாம் சப்தித்துக் கொண்டு நாலா பக்கமும் அப்படியும் இப்படியுமாக வெகு தூரம் போய் அலைந்து கொண்டிருக்கின்றன.

இது எப்படி இருக்கிறது?

∵

லோபம் என்கிற தத்துவமே இல்லாத வள்ளல்களிடம் எத்தனையோ புலவர்களும் யாசகர்களும் வந்திருந்து, உண்டு, களித்து, உறவாடிக் கொண்டிருப்பது சமீப காலம் வரை சர்வ சாதாரணமாகப் பார்க்கக் கூடிய விஷயமாய் இருந்தது.

சுமார் 250 வருஷத்துக்கு முன் காயல்ப் பட்டணத்தில் (திருச்செந்தூருக்குப் பக்கத்தில் உள்ள துறைமுகப் பட்டணம்) சீதக்காதி என்ற வள்ளல் இருந்தார். அவருக்குத் தமிழ்க் கவியில் அபார மோகம். ஆகவே வருஷம் பூராவும் அவரைச் சுற்றி நல்ல புலவர்களாகப் பலர் இருந்து வந்தார்கள். அவர்களை எல்லாம் தாரான

'பாலுட்ரின்'


Trade Mark

மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு

இப்பொழுது

கடைகளில் கிடைக்கிறது

புதிய
வாராந்திர
மாத்திரை



புதிய இகானமி ஸ்டிரிப்பில்

பாலுட்ரின் இப்பொழுது ஒரு புதிய, பெரிய அளவை, 0·3 கிராம் மாத்திரையாக கிடைக்கிறது. இந்த புதிய மாத்திரை உங்களை மலேரியாவிலிருந்து ஒரு வாரம் வரை பாதுகாக்கிறது. மலேரியாவினால் கஷ்டப்படும் பொழுது, ஜுரம் இறங்கும் வரை, தினம் ஒரு மாத்திரை சாப்பிடவும்.

இந்தப் புதிய மாத்திரைகள், சுத்தமான முறையில், ஒரு ஸ்டிரிப்பில் 8 மாத்திரைகள் வீதம் பாக் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் சீதோஷ்ணத்தால் பாதிக்கப் படாதவை.

ஒரு ஸ்டிரிப்பின் விலை 8 அணா
அல்லது ஒரு மாத்திரையின் விலை

ஒரு அணா

ICI

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிட்.

PH.18

மாய்ப் போவித்து வந்தார் வள்ளல். உண்மையான தமிழ்ச் சங்கம் இருந்தது காயல்ப் பட்டணத்தில்.

அப்படி இருந்தபோது ஒருநாள் திடீர் என்று வள்ளல் இறந்து போய் விட்டார். புலவர்களுடைய நிர்க்கதியான நிலைமையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? "இனி நமக்கேது புக லிடம்" என்று கதறுகிறார்கள் :

"பணக்காரரான வியாபாரிகள் (பூமாது) இருந்து பிரயோசனம் என்ன; பெரிய பெரிய பண்ணையார்கள் (புவிமாது) இருந்து பிரயோசனம் என்ன; ஏடுகளும் நாமும் இருந்து தான் என்ன பிரயோசனம்; ஆதரிப்பதற்கு வள்ளல்தான் இல்லையே! இங்கு நாம் இருந்த மாதிரி இனி இருந்து கலையை வளர்ப்பதேது? எங்கே போய்த் தொலைய நாம்?"

[கட்டளை கலித்துறை]

பூமா(து) இருந்தென்,
புவிமா(து) இருந்தென்,இப்
பூதலத் தில்
நாமா(து) இருந்தென்,
நாமும் இருந்தென்ன !—
நாவலர்க் குக்
கோமான், அழகமர்
மால்சீதக் காதி,
கொடைக்கரத் துச்
சீமான், இறந்திட்ட
போதே புலமையும்
செத்தது வே.

* * *

கம்பரும் எத்தனையோ சீதக்காதிகளைப் பார்த்திருக்கிறார். அவர்கள் இறந்ததையும் பார்த்திருக்கிறார். புலவர்கள் தத்தளிப்பதையும் பார்த்திருக்கிறார். அவருடைய உள்ளம் எவ்வளவு வருந்தி யிருக்கும்!

பூக்கள் நிறைந்த மரங்கள் சமுத்திரத்துக்குள் முங்குவதைப் பார்க்கிறார். வண்டுகளின் 'கொல்' என்ற சப்தத்தையும் கேட்கிறார்.

தருதல் ஓவலம்
என்றலர் தாங்கிய
மரம்எ லாம்கடல்
வீழ்தலும்,—வண் டெலாம்,
கரவி லாளர்
விழக், கலை கண் இலா
இரவ லாளரின்,
எங்கும் இரிந்தவால்!



[தருதல் ஓவலம் என்று: தேனைக் கொடுத்துக்கொண்டே இருக்கிற காரியத்தைக் கைவிட மாட்டோம் என்று சொல்லும் பான்மையில்: அலர் தாங்கிய மரம் எலாம்: புஷ்பம் தாங்கிய மரங்கள் எல்லாம்; கடல் வீழ்தலும்: மலையோடு தண்ணீருக்குள் மூழ்கிவிட்டன—அப்பாவி வண்டுகள் என்ன செய்யும்;—காவு அதாவது லோபம் என்பதே இல்லாத தமிழ் வள்ளல்கள் இறந்து பட; களைகண் இலா: ஆதரவு என்பது ஒன்றும் இல்லாத; இரவலாளரின்: ஏழைகளான புலவர்களைப் போல; எங்கும் திரிந்த வால்—வண்டெலாம்.]

∴

இந்தப் பாடலில் எதுகையாக வந்துள்ள, "**தருதல் ஓவலம்**," "**மரம் எலாம்**," "**காவலாளர்**," "**இரவலாளர்**" என்ற பாடங்கள் ராவ்சாகிப் எஸ். வையாபுரி பிள்ளை அவர்கள் சேர்த்து வைத்துள்ள கம்ப ராமாயண ஏட்டுப் பிரதி ஒன்றில் கண்ட பாடங்கள்.

இந்தப் பாடங்களைக் காணாது போயிருந்தால்ப், பாடலை விட்டுவிட வேண்டியதுதான். அருமையான கம்பரது பாடல் ஒன்று நமக்கு இல்லாமல்த்தான் போயிருக்கும்.

நாம் பார்க்கிற அச்சுப் புஸ்தகங்களிலும் ஏடுகளிலும் காண்கிற பாடம் இது:

தாவலோவலமென் றதுதாக்கிய
மாலெலாக்கடல்வீழ்தலும்வண்டெலாம்
காவலாளர்விழக்களைகண்ணிலா
எவலாளரினெங்குந்திரிந்தவால்.

அவகாசம் உள்ளவர்கள் பாடபேதங்களைக் கொண்ட இரண்டு பாடல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ரஸமான காரியம்.

சேது பந்தனம் சம்பந்தமாக வெகு அழகான கவிகளை அனுபவித்தோம்.

சிறந்த சாதனை

சென்னைக் கார்ப்பரேஷனின் 1948-49ம் வருஷத்திய நிர்வாக அறிக்கையைப் பார்த்ததும் ஒரே பிரமிப்பு உண்டாகிறது. அடேயப்பா, எவ்வளவு பெரிய புத்தகம்! எத்தனை பக்கங்கள்! எத்தனை படங்கள்! புத்தகத்தைப் பிரித்துப் படிக்கும்போது நம்முடைய பிரமிப்பு இன்னும் அதிகமாகிறது. கமிஷனர் ஸ்ரீ நரசிம்மம் அவர்களுடைய முகவுரையுடன் ஆரம்பமாகும் இந்த அறிக்கை, சென்ற ஆண்டு கார்ப்பரேஷன் பல்வேறு துறைகளிலும் சாதித்த காரியங்களை வரிசைக் கிரமமாக எடுத்துக் கூறுகிறது. சுமார் 21 மைல்களுக்கு உயர்தர ரோடுகள் அமைக்கப் பட்டனவாம். சுமார் 17 மைல் தூரத்துக்குச் சாக்கடை வசதி செய்யப்பட்டதாம். பல்லாவரத்தில் புதிதாக ஒரு கல் உடைப்பு இயந்திரம் அமைக்கப்பட்டதாம். சில முக்கியமான இடங்களில் 'டியூப்' விளக்குகள் போடப் பட்டனவாம். சேரிகளில் புதிதாக நான்கு பள்ளிக்கூடங்கள் அமைக்கப் பட்டனவாம். குழந்தை க்ஷேமாபிவிருத்திக்காக இரண்டு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டனவாம். மூன்றரை லட்ச ரூபாய் செலவில் கீழ்ப்பாக்கம் பம்பிங் ஸ்டேஷனுக்கு மூன்றாவது மின்சார யூனிட் போட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதாம். அயனாவரத்துக்கும்—கோடம்பாக்கத்துக்கும் குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளதாம். "போதும், நிறுத்துங்கள்! இதுவே மேற்படி கார்ப்பரேஷன் அறிக்கையைப்போல நீண்டுவிடும் போல் இருக்கிறதே!" என்கிறீர்களா? இதோ நிறுத்திவிட்டோம்.

கார்ப்பரேஷன் சாதித்த மேற்படி பற்பல காரியங்களை விளக்கிய பிறகு சென்ற ஆண்டு வரவு செலவுக் கணக்கு ஒன்பது அனுபந்தங்களாகப் பிரித்து அவற்றுக்குக் கீழே கொடுக்கப் பட்டிருக்கிறது. முக்கியமான விஷயம் ஒவ்வொன்றையும் விளக்குவதற்காக ஆங்காங்கு பல 'மாப்'களும் பிளான்களும் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தண்ணீர்த் திட்டத்தையும் சாக்கடைத் திட்டத்தையும் விளக்குவதற்காக இதில் சேர்க்கப்பட்டிருக்கும் இரண்டு 'மாப்'களை அவசியம் குறிப்பிடவேண்டும். பொதுவாக, இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் கார்ப்பரேஷன் மிக்க சிரத்தையும் கிரமமும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று கூறலாம். சென்னை நகர நிர்வாகத்தைப் பற்றித்தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இது மிக்க உதவியா யிருக்கும்.

1948-1949ம் வருஷத்தில் சென்னைக் கார்ப்பரேஷன் சாதித்திருக்கும் பல காரியங்களுள் இந்த அறிக்கை வெளியிட்டதையும் ஒன்றாகக் கொள்ளலாம்.

துன்பம் தரும் இன்பம்

எஸ்.வி.எஸ்.

தீபாவளியன்று மத்தியானம், மணி சுமார் மூன்றிருக்கும். ஒரு கையில் பட்சணத் தட்டையும், மற்றொரு கையில் தண்ணீர் நிரம்பியிருந்த வெள்ளிக் கூஜாவையும் ஏந்திக் கொண்டு, காவ்ய கர்த்தாக்கள் வர்ணிப்பது போல் அன்ன நடை நடந்து மெள்ள அவன் அறைக்குள் நுழைந்தாள். அப்போது அவன் ஒரு ஈஸிச் சேரில் சாய்ந்து, நித்திராதேவியைக் 'கருணையே புரிவாயோ' என்று இரங்கி ஏங்கிக் கொண்டிருந்தான். அவள் நுழைந்த காலடிச் சத்தம் கேட்டதும் துள்ளி எழுந்து உட்கார்ந்து விட்டான்.

"தூக்கத்தைக் கலைத்து விட்டேனோ? திடும்பிரவேசமாக வந்து உங்களைத் தொந்தரவு செய்துவிட்டேனே!" என்று பவ்யமாகக் கேட்டாள். குரலில் பவ்யம் தொனித்தாலும், முகத்தில் குறும்புத்தனம் தான் பிரதிபலித்தது.

இதைப் பார்த்த அவன், "எந்த முகூர்த்தத்தில் தாலி கட்டினேனோ, தெரியவில்லை! அதை நல்ல முகூர்த்தம் என்று வேறு சொல்லிக் கொள்கிறார்களே. அவர்களை என்னவென்று சொல்லுவதோ தெரியவில்லை?" என்றான்.

"ஏனாம்? முகூர்த்தத்தில் என்ன பழுதாம்?" என்று கேட்டாள். அப்போது அவள் முகத்தில் கோபக் குறி தோன்றியது. ஆம், எந்தப் பெண்தான் தன் பிறந்த வீட்டைச் சற்று அலட்சியமாகப் பேசுவதைப் பொறுத்திருக்கிறாள்? சரித்திரத்திலேயே கண்டறியாத விஷயமல்லவா? ஆகவே, அவள் அப்படிப் பேசியதில் வியப்பு என்ன இருக்கிறது?

அவன் "என்ன பழுதில்லை! இன்னும் என்ன பழுது வேண்டும்? சகலமுந்தான் இருக்கு......பின்னே என்ன? உன் கழுத்திலே மூன்று முடிச்சுப் போட்ட வேளையிலிருந்து இது வரை ஒரு விநாடி கண்ணை அப்படி அசைத்திருப்பேனா? நான் தூங்கினதெல்லாம் துவாபர யுகத்திலோ திரேதா யுகத்திலோ தூங்கினதே யொழிய, இந்த யுகத்திலே தூங்கினதாக ஞாபகமே இல்லை" என்றான்.

"ஆகா! நீங்கள் கூட அப்படிக் கஷ்டப் பட்டீர்களா? அப்படி என்றால் எனக்குக் கூடச் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால்......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் நிறுத்திக் கொண்டு ஏதோ யோசிக்கத் தொடங்கிவிட்டாள்.

"ஆனால்......என்ன?"

"ஆனால் நீங்கள் கடிதங்களில் என்னவெல்லாம் எழுதியிருந்தீர்கள்!"

"என்ன எழுதியிருந்தேன்?"

"'என்னைப் பற்றி நினைத்து நினைத்து இப்படி ஏக்கமுறுவானேன்? உலகில் எத்தனை எத்தனை இன்பங்கள் இருக்கின்றன? மேலும் நீ செல்வவந்தரின் மகள். உனக்குக் கிட்டாத இன்பம் எது உண்டு? என் நினைவு வந்து உன்னைத் துன்புறுத்தும்போதெல்லாம், ஒரு நல்ல கதைப் புஸ்தகம் எடுத்துப் படித்துக் கொண்டிரு; அல்லது ஒரு சினிமாவுக்குப் போனாலும் தீர்ந்தது. துன்பம் மாறி இன்பம் பெறச் சாதனங்களா இல்லை?' என்று ஏதேதெல்லாமோ எழுதுவீர்கள். அப்பொழுதெல்லாம்......" என்று சொல்லிச் சற்று நிறுத்தினாள்.

"என்ன அப்பொழுதெல்லாம்?"

"உங்கள் மேல் எனக்கு அசாத்தியக் கோபம் வரும்!"

"ஏன்?"

"சொல்லட்டுமா? கோபித்துக்கொள்ள மாட்டீர்களே? உங்களுக்குக் கோபம் வராது என்றால் சொல்லுகிறேன்"

"சொல்! நீ என்ன சொன்னாலும் எனக்குக் கோபம் வராது. சொல்!"

"இவர் எப்படிப்பட்ட அறிவிலி! போயும், போயும் நமக்குத்தானா இப்படி ஒரு அறிவிலி வாய்க்க வேண்டும்? உலகில் இன்பங்கள் இருக்கிறதாம், இன்பங்கள்! சாதாரணமாக நான் பொழுது போகவில்லை என்றால் எங்கள் வீட்டுப் பூந்தோட்டத்துக்குச் செல்வது வழக்கம். அங்கே பூத்துக் குலுங்கும் வண்ண வண்ண மலர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலே நேரம் போவது தெரியாது! அப்படிப் பட்டவளுக்கு அந்த மலர்கள் எல்லாம் முட்களாக இருந்தன! 'ஏண்டி! நீ மட்டும் தனியாகவா வந்தாய்? அவரையும் அழைத்து வரப்படாது!' என்று இடித்துக் கேட்டன. புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டால், அவை யாவும் வெறும் எழுத்துக் கூட்டங்களாக இருந்தன. மனதில் ஒரு வரியும் பதியவில்லை. ஒவ்வொரு சமயம் அவையும் உயிர் பெற்று எழுந்து 'என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு? கடிதம் கடிதம் எழுதிப் போட்டு, தீபாவளிக்கு இரண்டு நாள் முன்னர் அவரை வரவழைக்க ஏற்பாடு செய்! படித்தது போதும், எழுது!' என்று உத்தரவிடும். ரேடியோவை

மூடக்கிவிட்டால் என் உள்ளத்திலிருக்கும் சோகத்துக்குச் சுருதி கூட்டுமே யொழிய உங்களை மறந்து சற்று நிம்மதியாக இருக்க வழி செய்யாது!''

''நான்தான் வந்துவிட்டேனே. அந்தத் துன்பம் எல்லாம் தீர்ந்து இன்பமும் சந்தோஷமும் ஏற்பட்டுவிட்டதல்லவா?''

''ஏற்பட்டு விட்டது. என்றாலும்...''

''அடடா! இது என்ன இப்படி ஒரே புதிராகப் போட்டு வருகிறாய்? எனக்கு அவ்வளவு கற்பனை இல்லை. நீயே சொல்லி விட்டாயே நான் ஒரு அறிவிலி என்று. உன் மனதில் இருக்கிறதைச் சொல். 'என்றாலும்' என்று ஆரம்பித்தாயே, அதை முடித்துவிடு.''

''முடிப்பதற்கு எனக்குப் பயமாக இருக்கிறது—மாட்டேன்!''

''பயப்படுவானேன்? சும்மா, தைரியமாகச் சொல்!''

''அப்புறம் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே!''

''மாட்டேன்.''

''நிஜமாக?''

''நிஜமாக!''

''நீங்கள் வந்ததில் எவ்வளவோ சந்தோஷம்தான். இந்தச் சந்தோஷம் இந்த இன்பம் மட்டுமன்றி இன்னும் உலகில் உள்ள அத்தனை இன்பங்களை ஒன்று திரட்டி வைத்தாலும், அந்தத் துன்பத்துக்கு ஒரு நாளும் இணையாகாது! அந்தத் துன்பத்தின் ஊடே ஒரு இன்பம் உள்ளம் துய்க்கிறது. அதற்குச் சமமான இன்பம் உலகிலே வேறெங்குமே இல்லை.''


''வாஸ்தவம்! நீ சொன்னது அவ்வளவும் உண்மை. உனக்கு அந்த இணையிலாத இன்பத்தைக் கொடுக்க வேண்டுமென்று நான் இப்போது நாலரை மணி வண்டிக்குப் புறப்படுகிறேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் அவளுக்குத் தலையில் இடி விழுந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது; தலை சுற்றியது.

''என்ன? நாலரை வண்டிக்கா? ஏன் நான் சொன்னதற்காகவா?'' என்றாள். இவ்வாறு சொல்லிக் கொண்டு வந்த போதே அவள் கண்களில் நீர் பெருகியது.

அப்போது ''அத்திம்பேரே! அத்திம்பேரே, ரயிலடிக்குப் போக வண்டி வந்து விட்டது!'' என்ற குரல் வந்தது.

''பார்த்தாயா? நீ சொன்னதற்காகப் புறப்படவில்லை. ஏற்கெனவே ஏற்பாடு பண்ணிவிட்டேன். உன்னிடம் எப்படிச் சொல்லிக் கொண்டு போவது, என்று யோசித்துக் கொண்டிருந்தேன். எனக்குச்



சிரமமில்லாமல் நீயே சொல்லிவிட்டாய் அந்த இன்பம் தரும் துன்பத்துக்கு இணையில்லை என்று. ஆகவே உன்னிடம் சொல்லிக் கொண்டு போவது எனக்குச் சௌகரியமாகப் போய்விட்டது!''

''உங்களைப் போய் அறிவிலி என்று சொன்னேனே! என்னைப் போன்ற அறிவிலி இவ்வுலகில் யாருமே இல்லை! என் வாயாலேயே, என் கலத்தைக் கெடுத்துக் கொண்டு விட்டேனே! தயவு செய்து என்னை மன்னித்து, இரண்டு நாள் இருந்து விட்டுப் போகக் கூடாதா?''

''நான் இருப்பதற்கில்லை; நான் போயாக வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்திருந்தான்.

அவள் கண்களில் கண்ணீர் சோர, தன் அசட்டுத் தனத்தையும் நொந்துகொண்டு நின்றிருந்தாள்.

அவன் போகிற போக்கில், ''என்ன ஸரஸா, கண்களில் கண்ணீர்? ஓ! ஆனந்தக் கண்ணீரா — அப்படியானால் துடைத்துக் கொள்ள வேண்டாம். நான் வரட்டுமா?'' என்று சொல்லி விட்டு மாமனார் மாமியாரிடம் விடை பெற்றுக் கொண்டு வண்டி ஏறினான். வண்டி நகர்ந்தது.

கதவின் மீது சாய்ந்து கொண்டு, அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ஸரஸாவின் கண்களில் நிரம்பிய கண்ணீர் பொல பொல வென்று தரையில் விழுந்து சிதறின. அவை ''ஆனந்தக் கண்ணீரா?'' என்று கேட்டுக் கேலி செய்வது போல் தோன்றியது அவளுக்கு.

கண்கொள்ளாக் காட்சி!

ரஜனி

கொழும்பு, அக். 3

இலங்கையில் இவ்வருடம் மகாத்மா காந்தி ஜயந்தி மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தோட்டங்கள் தோறும் காந்தி மகாத்மாவின் உருவப்படம் அலங்கரித்து ஊர்வலமாகக் கொண்டு வரப் பட்டது. கொழும்பு நகரத்தில் மட்டும் பல இடங்களில் பெரும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. டாக்டர் குமாரன் ரத்னம் தலைமையில் கும்பனித் தெருவில் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்து காந்தி ஜயந்தியைக் கொண்டாடினர். பல வர்ண மின்சார விளக்குகளினால் தேஜோ மயமாக அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் காந்தியடிகளின் உருவச்சிலையை அலங்கரித்து வைத்து நாதஸ்வர வாத்தியம் முழங்க, ஆயிரக்கணக்கானவர்கள் பின் தொடர இரவு முழுவதும் கொழும்பு நகர வீதிகளில் ஊர்வலம் நடத்தியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஞாபகச் சின்னங்கள்

மாத்தளை நகரவாசிகள் முதல் பிரைஸ் வாங்கி விட்டார்கள்! அமரர் காந்திஜிக்கு இலங்கையில் முதன் முதலாக ஒரு ஞாபகச் சின்னம் எழுப்பிய பெருமை மாத்தளை நகர ஜனங்களையே சாரும். அவர்கள் பன்னிரண்டாயிரம் ரூபாய்ச் செலவில் காந்திஜி ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப் பட்டுள்ள நூல் நிலையத்தை காந்தி ஜயந்தி யன்று இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி பக்தி சிரத்தையுடன் திறந்து வைத்தார்.

அதே சமயம் யாழ்ப்பாணத்திலும் ஒரு முக்கியமான சம்பவம் நடந்தது. அங்குள்ள இந்தியர்கள் காந்தி மகாத்மாவைப் பற்றிய பல அரிய புத்தகங்களைச் சேகரித்து அழகாக ஒரு அலமாரியில் அடுக்கி வைத்து யாழ்ப்பாண முனிசிபல் சபை புத்தகசாலைக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். அதை நகர மேயர் ஸ்ரீ ஸாம் ஏ. சபாபதி சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டார். அப்போது அவர் பேசுகையில், காந்திஜி ஒரு சமயம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததை நினைவூட்டி அந்த விஜயத்தின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாண நகரிலே நடுநாயகமாயுள்ள ஒரு இடத்திலே அண்ணலின் உருவச்சிலையொன்றையும் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

சமஷ்டி வாதிகள் முழக்கம்

தமிழர்களுடைய நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்லாமல், தமிழ் மொழியைக் காப்பதற்காகவும் சமஷ்டி அரசியலைக் கோருகிறோம் என்று சமஷ்டி இயக்கத்தினர் தங்களுடைய கூட்டங்கள் தோறும் முழக்கி வருகிறார்கள். சென்ற வாரம் கோப்பாயில் அவர்களின் கூட்டமொன்று நடந்தது. "சிங்கள ஆதிக்கத்திலிருந்து தமிழர்கள் தப்பிச் சுயமரியாதையுடன் வாழ இரண்டு வழிகளுண்டு. ஒன்று சிங்களவர்களிடமிருந்து தமிழர்கள் அடியோடு பிரிந்து விடுவது; மற்றொன்று இருவரும் சுயாட்சி பெற்று சமஷ்டி அரசியலில் இணைந்திருப்பது. இவ்விரண்டில் அதிகக் கெடுதல்கள் இராத சமஷ்டியைக் கோருவது தவறல்ல" என்று அப்போது ஸ்ரீ செல்வநாயகம் குறிப்பிட்டார்.

தலைமன்னாரில் தவிப்பு!

தலைமன்னாரில் இலங்கை சுங்க அதிகாரிகள் பிரயாணிகளுக்கு இழைக்கும் தொல்லைகளைப் பற்றிப் புகார்கள் வந்த

தீபாவளி பாஷன்!



வண்ணமாக இருக்கின்றன. பிரயாணிகள் அணிந்திருக்கும் மோதிரங்களை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்கிறார்களாம். நகைகளை வேறு யாரிடமாவது கொடுத்து அப்படிக் கொடுத்ததற்கு ஒரு ரசீதும் வாங்கி வந்தால்தான் கப்பலேற அனுமதிக்க முடியுமென்று உத்தரவிடுகிறார்களாம். அதன் விளைவாகத் தலைமன்னாரில் சில கடைகள் தோன்றியிருப்பதாயும், அந்தக் கடைக்காரர்கள் பிரயாணிகளின் நகைகளை வாங்கி வைத்துக் கொண்டு திரும்பி வந்து கேட்கும் பொழுது கொடுப்பதாகச் சொல்லி ரசீது கொடுப்பதாயும், உண்மையில் அதே பிரயாணிகள் திரும்பி வரும் பொழுது அந்தக் கடைக்காரர்கள் மாயமாய் மறைந்து விடுவதாயும் புகார்கள் கூறப்படுகின்றன. இவ்வளவுக்கும் காரணம் பிரயாணிகள் என்ன எடுத்துச் செல்லலாம், என்ன எடுத்துச் செல்லக்கூடாது என்பதை அரசாங்கம் தெளிவு படுத்தாததுதான். ஒவ்வொரு பிரயாணியும் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்புள்ள தங்க நகைகளை எடுத்துப் போகலாமென்றும், ஆனால் இதில் எவ்வளவை அனுமதிக்கலாமென்பது சுங்க அதிகாரிகளின் உசிதத்தையே பொருத்ததென்றும் சட்டம் கூறுகிறது.

தனுஷ்கோடியில் இந்திய சுங்க அதிகாரிகள் பிரயாணிகளின் சாமான்களைத் தடை செய்யும் பொழுது, அந்தச் சாமான்களைப் பத்திரப்படுத்திப் பிரயாணிகள் திரும்பி வருகையில் கொடுக்கவோ அல்லது சொந்தக்காரர்களின் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவோ ஒரு பொறுப்புள்ள கம்பெனி இருக்கிறது. தலைமன்னாரிலும் அது போன்ற ஒரு பொறுப்பான கம்பெனியை ஏற்படுத்தினாலன்றி, பிரயாணிகள் துன்பத்துக்கு உள்ளாவதும் இடைவிடாமல் புகார்கள் வருவதும் நிற்க ஹேது இல்லை.

ஏகோபித்த எதிர்ப்பு

இந்தியர் பாகிஸ்தானிகள் பிரஜா உரிமைச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாகிறது. இது வரையில் எட்டு லட்சம் இந்தியர்களிலே சுமார் மூந்நூறு பேர்கள்தான் இந்தச் சட்டத்தின்படி தங்களை இலங்கையர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று மனு அனுப்பியிருக்கிறார்களாம். இவர்களிலும் சுமார் நாற்பது பேர்களை அரசாங்கம் பொறுக்கியெடுத்து அவர்களை இலங்கையர்களாகப் பதிவு செய்து கொள்ளப்போவதாயும் ஆக்ஷேபிப்பவர்கள் ஒருமாத காலத்துக்குள் எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனைகளை அனுப்ப வேண்டுமென்றும் கெஜட்டில் பிரசுரித்திருக்கிறது. இந்த நாற்பது பேர்களில் சிலர் அரசாங்க சேவையிலோ அல்லது இலங்கையர்கள் மட்டும் வகிக்கக்கூடிய பள்ளிக்கூட ஆசிரியர்களாகவோ இருப்பவர்கள். மற்றவர்கள் இலங்கையில் ஏராளமான மூலதனத்தை முடக்கி வியாபாரம் செய்பவர்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் இலங்கையர்களாகப் பதிவு செய்து கொள்ள முன் வராததிலிருந்து மேற்படி சட்டத்தின் விஷயத்தில் இந்தியர்களின் ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிந்து கொள்ளலாம்.

● ○ ● ○ ●


நடன அரங்கேற்றம்

சென்ற விஜயதசமி தினத்தன்று யுனைடெட் கிளப் ஆதரவில் செட்டிநாட்டு ராஜாவின் காரியதரிசி ஸ்ரீ வி. வைத்திய சுப்பிரமணிய ஐயரின் குமாரி பேபி சுலோசனாவின் பரதநாட்டிய அபிநய அரங்கேற்றம் மதுரை, விக்டோரியா எட்வர்டு ஹாலில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

மேற்படி விழாவுக்குத் தலைமை வகித்த மதுரை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ ராமவர்மா ராஜா அவர்கள் "சங்கீதத்தைப்போலவே பரதநாட்டியமும் நமது வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாகி விட்டது. இந்தக் கலை வளர்ச்சிக்குப் பொது மக்கள் காட்டும் ஆதரவைப் பாராட்ட வேண்டும்" என்று கூறி பேபி சுலோசனாவின் நடனத்தை புகழ்ந்து ஆசீர்வதித்தார்.



மனைவிக்குச் சமைக்கக்கூட முடியாத அவ்வளவு களைப்பு





— "க்ருஷன்"

அவனுக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் திருப்பி யளிக்கும் வரையில்


சரளா மிகவும் கவனக் குறைவுடன் களைப்பும் அடைந்தாள். அவளால் மாலை போஜனத்தைக் கூட சமைக்க முடியவில்லை. அவள் கணவன் காரியாலயத்திலின்று வீடு திரும்பிய போது அவளது சோம்பேறித் தனத்துக்காக அவளை கோபித்துக் கொண்டான். அன்று மாலை அவள் தோழியிடம் தன் கஷ்டத்தை எடுத்துணர்த்தியபோது அவள் தோழி "தினம் காலை உண்டிக்குமுன் 'க்ருஷன்' சாப்பிடு" என்று யோசனை கூறினாள்.

மூன்று வார காலத்திற்குள் சரளா ஓர் புது மனுஷியாகி விட்டாள் — மவுனமாகவும் கவலையுடனுமில்லாமல் சந்தோஷமாகவும் சுறுசுறுப்பாகவும் வீட்டுக் காரியங்களை சுலபமாகக் கவனித்துக்கொள்ள முடிந்தது. மாலை நேரம் ஆனந்தமாக அமைந்தது.

மிருதுவுடன் உத்திரவாதமான 'க்ருஷனி'ன் காரியம் கேவலம் சுத்தப்படுத்துவதைவிட மேலான பணி, உங்களுடைய ரத்தத்தில், ரத்த வோட்டத்தில் ஏன் உடம்பின் ஒவ்வொரு நரம்புகளிலுமே ஓர் உயர்ந்த புஷ்டி மருந்தின் வேலையைச் செய்கிறது. வலுவான தன்மையின் மிருதுவான உணர்ச்சியை உங்களுக்கு அளிக்கிறது. 'க்ருஷன்' தன் அளவில்லாத வகையில் வாழ்க்கையின் சோர்விலின்று உயிரின் சுறுசுறுப்பைப் பெற ஆரோக்யத்தை அளிக்கிறதென லக்ஷக்கணக்கான மக்கள் அறிவார்கள்.

இன்றே 'க்ருஷன்' வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும்.

விலை ரூ. 1-10. (பஞ்சன் பெட்டியில்)



நீங்கள் கூட அந்த 'க்ருஷன்' உணர்ச்சியை அடையலாம்

KSD51.



உங்கள் சருமத்தை ஒவ்வொரு தினமும் அதிக அழகுபெறச் செய்யுங்கள்

ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில்தான் உங்களுக்கு அதிக ஆரோக்கியமுடையதும், தூய்மையானதும், அதிக மழுமழுப்புடையதுமான சருமத்தைத்தருகிறது.

இந்த சுலபமான பராமரிப்பை தினமும் இரண்டுதடவை தவறாமல் கையாளுங்கள். கேடில் அடங்கிய ரெக்ஸோனாவின் நுரையை சருமத்தில் மெதுவாக தேய்த்து பிறகு கழுவுங்கள். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் உங்கள் சருமத்திற்கு தூய்மையும், மென்மையும், அழுத்தமும் தருவதோடு புதுப்பொலிவும், புது ஆரோக்கியமும், என்றும் திகழும் எழிலும் வழங்கும்.




ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே



R.P. 50-172 TM

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras



KALKI அக்டோபர் 23, 1949 4 அ

REGD. NO. M. 4392

